www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 12/00


දිනමුරසු වාරමලර්

மே.23-29,1999

# வாரமலர்
# தினமுரசு


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 310

## திடீர் மோதல்கள் வேவு நகர்வுகள்



## யாழ் குடாவில் கொந்தளிப்பு!

## கட்சிகளுக்கு ஆபத்து



## கிரிக்கெட் ஸ்பெசல்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு.

padippakam

www.padippakam.com

# முரசம்

## துயரக் காட்சி

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

அரசியல் நடவடிக்கைகளை
இரு வழிகளில்
முன்னெடுக்கலாம்!

ஒன்று;
சட்டபூர்வ அரசியல்!

இன்னொன்று;
சட்ட விரோத அரசியல்!

அரசும், அதனுடைய
நீதி மன்றம்
பொலிஸ், இராணுவம் போன்ற
அமைப்புக்களும் அனுமதிக்கின்ற
வழி முறைகளில் இயங்குதல்
சட்ட பூர்வ அரசியல்!

சட்டபூர்வ வழிமுறைகள்
அர்த்தமற்றதாகும்போது,
அவற்றுக்கு மாறாக
செயற்பட ஆரம்பிப்பதே
சட்ட விரோத அரசியல்!

சட்ட பூர்வ அரசியல்
வழிமுறைகளுக்குள்ளேயே
பாராளுமன்றம்,
உள்ளூராட்சி சபைகள்
போன்றவற்றில் பங்குகொள்ளலும்
அடங்குகிறது!

சட்ட பூர்வமற்ற
அரசியல் என்பது
ஆயுதம் ஏந்திய
போராட்டமாக மட்டும்தான்
இருக்க வேண்டுமென்பதில்லை!

அவசரகால சட்டத்தின்கீழ்
உண்ணாவிரதம் இருக்கக்கூட
அனுமதி மறுக்கப்படலாம்.
அந்த மறுப்பை எதிர்த்து
உண்ணாவிரதம் இருப்பதும்
சட்ட விரோத அரசியல்தான்!

ஆளும் தரப்பின் சட்டங்கள்,
ஒடுக்கப்படுவோருக்கு பாதகமாக
அமையும் போது,
அவற்றை எதிர்ப்பது
தவிர்க்க முடியாததாகிறது!

சட்டங்கள் ஒன்றும்
புனிதமானவையல்ல!

நம் நாட்டில்
பயங்கரவாதத் தடைச்சட்டம்
அவசரகாலச் சட்டம்
போன்றவை
அபாயகரமான சட்டங்கள்!
மனித தர்மத்துக்குப்
புறம்பான சட்டங்கள்!

தமிழ்க் கட்சிகள்
இவற்றை எதிர்த்து
செயற்பட தயாரில்லை!

அவசரகாலச் சட்டத்தை மீறி
ஊர்வலம் நடத்தவோ,
போராட்டம் நடத்தவோ
தயாராக இல்லை!

இச் சட்டங்களால்
தமிழ் மக்கள் அனுபவிக்கும்
அன்றாட அவலங்களை
எதிர்த்துப் போராடுவதற்கும்
எள்ளளவும் முனைவதில்லை!

முழுக்க, முழுக்க
சட்ட பூர்வ அரசியலின்
வழிபாட்டாளர்களாக
இக் கட்சிகள் மாறியுள்ளன!

சட்டங்கள் புனிதமானவை
பாராளுமன்றம் போன்றவை
கௌரவமிக்கவை
என்றெல்லாம் இவர்கள்
மக்களை நம்பவைக்க
முற்படுவதுதான்
மிகச் சோகமானது!

தங்கள் பெயர்களுக்கு
முன்பாக 'கௌரவ'
என்ற அடைமொழி
இருப்பதை எண்ணி
தமிழ்க் கட்சி தலைமைகள்
புளகாங்கிதம் கொள்கின்றனர்!

சாகும்வரை இந்த
நாற்காலிகளையும்
'கௌரவ' என்ற பதங்களையும்
தக்கவைப்பது ஒன்றே
தம் இலட்சியமாக
வரித்துக் கொண்டுவிட்டனர்!

எனவே, மக்கள் போராட்டம்,
மாணவர் எழுச்சிகள்,
மக்களின் கோபங்கள்
போன்றவை எல்லாம்
இன்று இவர்களுக்கு
சினமூட்டும் செயலாகிவிட்டன!

போராடுகிறவர்கள்
மடையர்கள்!
அநீதியைக் கண்டு
கோபப்படுகிறவர்கள்
முட்டாள்கள்!
என்பதே இவர்களது
தற்காலக் கோட்பாடு!

இந்த வெட்கக் கேட்டை
'விவேகம்' என்று
வியாக்கியானம் செய்கின்றனர்!

அரசியலை
நேர்மையோடும், துணிவோடும்
முன்னெடுக்கும் கம்பீரத்தை
இக் கட்சிகள் இழந்துவிட்டன!

யார் ஆட்சியில் இருந்தாலும்
அவர்களது பிரதிநிதிகளாக
காவடி தூக்கிகளாக
வடக்கு-கிழக்கில்
சில பிரமுகர்கள்
முன்பு இருந்தனர்!

போராட்டங்களை
கொச்சைப்படுத்துவதும்
சலுகைகளைக் காட்டி
மக்களைத் திசை திருப்புவதுமே
அந்தப் பிரமுகர்களது வேலையாக அன்றிருந்தது!
அன்று விளங்கியது.

அப் பிரமுகர்களது
பாத்திரத்தை-இன்று
இந்த முன்னாள் போராளிகள்
ஏற்றிருப்பதுதான்
வரலாற்றின் துயரக்காட்சி!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்*

# ஆன்மீகம்



## அன்பொன்றே சிறப்பளிக்கும்

'அன்பே சிவம்' என்கிறது திருமந்திரம். அந்த அன்பே சிவமான தெய்வத்தை வழிபட்டு அன்பைப் பெருக்கிக் கொள்வதுதான் நமது வாழ்வை நிறைவுபடுத்தும் செல்வமாகும். ஆனால் இன்றெல்லாம் நிறைவான செல்வத்தை விட நிலையற்ற செல்வங்களையே மக்கள் விரும்புகின்றார்கள்.

மாடமாளிகை, கூட கோபுரம், சுகபோகம் நிறைந்த வாழ்வு இவையெல்லாம் நிலையற்றவை. அரசன் ஆண்டியாகிறான். ஆண்டி அரசனாகிறான். ஆனால் நிலையானது அன்பு ஒன்றே. வாழ்க்கை வேறு சமயம் வேறல்ல; வாழ்க்கையோடிணைந்ததுதான் சமயம். இயைந்தது மட்டுமன்றி வழிப்படுத்துவதும் சமயமே!

"மனமே நான் உனக்குச் செய்யும் உபதேசம் இதுதான்!" என்று பட்டினத்தடிகளார் சொல்லுவதும் நம் வாழ்வுக்கு வழி காட்டும் அருளுரை தானே!

அன்போடு உருகி அகம் குழைவார்க்குத்தான் தெய்வீகம் நிரம்பிய சிறப்பான வாழ்வு சித்திக்கும்.

தொகுப்பு: செல்வி ஜெயந்தி சிதம்பரம், புத்தளம்.

## பெருமை கொள்ளாதீர்கள்

பெருமை என்பது மனிதனின் பண்பைக் கெடுக்கும் ஒரு பாதகச் செயலாகும். அதை விட்டொழித்த மனிதர்களே மக்களில் மாணிக்கமாக-மாபெரும் மேதைகளாகத் தோன்ற முடிகிறது. பெருமையாளர்களைப் பற்றி அல்குர் ஆனிலும் ஹதீஸிலும் பின்வருமாறு கூறப்படுகிறது: அல்லாஹுத்ஆலா வம்பரான பெருமைக்காரருடைய உள்ளங்கள் அனைத்திலும் முத்திரை வைத்து விடுகிறான். (அல் குர் ஆன்)

எவருடைய உள்ளத்தில் கடுகளவேனும் பெருமை இருக்கிறதோ அவர் சுவர்க்கம் புகமாட்டார். எவர் உள்ளத்திலே கடுகளவேனும் ஈமான் இருக்கிறதோ அவர் நரகம் புகமாட்டார். (அல் ஹதீஸ்)

ஆறு வகை ஜனங்களுக்கு ஆறு வகையான அம்சங்கள் இருப்பது அழகில்லை. ஏழைகளுக்குப் பெருமை அழகில்லை; உலமாக்களுக்குப் பேராசை அழகில்லை; அரசர்களுக்கு அவசரம் அழகில்லை; செல்வச் சீமான்களுக்கு கஞ்சத்தனம் அழகில்லை; மேதைகளுக்கு மாண் பற்ற செயல் அழகில்லை; உயர் வம்சத்தாருக்கு வஞ்சிப்பது அழகில்லை.

தொகுப்பு: வை.எம். தாஹிர் கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.307



### பரிசுக்குரிய கவிதை

### ஒற்றுமைப் பொதி

ஆளும் அணியும்
எதிரணியும்
ஒன்றாய் இணைந்து
நன்றாய்த் தந்த பொதியிது!
இனிமேல் இங்கே
எந்த தமிழ் முதுகும்
நிமிரவே நிமிராது!

வே.சதானந்தன்-யாழ்ப்பாணம்.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### ஆரம்பம்

அடுத்த
புதை குழிக்கு..
ஆட் சேர்ப்பு
ஆரம்பமோ....?

இரா.இரமேஷ்குமாரி-டெஸ்போட், நானுஓயா.

### மாறாத கலாசாரம்!

"சிலுவையைச் சுமந்தும்;
செக்கிழுத்து மாண்டும்,
உலகை உயர்த்திய உத்தமர்கள்
அழுதிடுவார்- இன்றிருந்தால்...!

நா.ஜெயபாலன்-பிபிலை.

### பிரச்சனை

அங்கே
'மத'ப் பிரச்சனை!
இங்கே
'இன'ப்பிரச்சனை!

அ.அச்சுதன்-சேனையூர், மூதூர்.

### கழுதையும் குதிரையும்

பொதி சுமக்கும் கழுதைகளாய்
என்று மிராது,
அதி (வி)வேகக் குதிரைகளாய்
மாறா விடத்து விடிவேது?

ப.தெய்வேந்திரன்- திருகோணமலை.

### மே தினம்

உயிரைப் பணயம்
வைத்து
உதிரத்தைச் செலவு
செய்து;
உருவாக்கிய திருநாள்!

எஸ்.பி.பாலமுருகன்-பதுளை.

### அறியாமை...?

திரை கடலோடித்
திரவியம் தேடிய
தமிழினமின்று
தலைசாய்க்க இடமின்றி
தவித்தலைவதை
அறிந்து மறியார்
எம் தமிழ்க் கட்சிகள்!

அ.சந்தியாகோ-அசோகா வித்தியாலயம், கண்டி.

### மேதினம்

இந்த
அடிமை விலங்கோடு
எத்தனை
மே தினங்களை
கொண்டாடி
விட்டோம்!

திருமதி புவனேஸ்வரி-பன்னீர்செல்வம், பசறை.

### விழிப்பு

விளைக்கிறவன் மட்டுமே
அறுப்பான்!
விழுகின்றவன் மட்டுமே
விழிப்பான்!

ச.மகாலிங்கம்-வெலிமடை குருப், வெலிமடை.

### வழியில் விழி

சுமைகள் அழுத்தி
விழுத்திய போதும்
ஒற்றுமைப் பலத்தால்
தொடரும் பயணம்!

க.நாகராசா-நுணாவில், சாவகச்சேரி.

### எழு

எழு எழு
வீரத்துடன் எழு
வாழ்வு மலர
வீரத்துடன் எழு!

அ.யாழினி-மட்டக்களப்பு.

### கதி

பொதி தந்தோம்
பொதியே தந்தோம்
குனிந்து வாழும்
கதியும் தந்தோம்!

எஸ்.கேசவன்- வவுனியா.

## கவிதைப் போட்டி இல.310



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 29.05.1999

**முகவரி:** கவிதைப் போட்டி. இல.310
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

### உருப்படாத கட்சிகள்



அன்பு முரசே!

சர்வதேச அரங்கில் தமிழ் மக்களது போராட்டத்தை கொச்சைப்படுத்தி அரசுக்கு ஆதரவு கொடுப்பவர்கள் யார் தெரியுமா? நம் ஆட்கள் சிலர்தான். விரல் விட்டு எண்ணத்தக்க இவர்கள் தமிழ்க் கட்சிகள் சில இன்று வசதியோடு இருப்பதால் தம்மை அவற்றோடு இணம் காட்டி நிற்கிறார்கள். சில காலத்தின் முன்னர் இக் கட்சிகளை இவர்களே 'உருப்படாத கட்சிகள்' என்று கூறியவர்கள்தான். இராஜதந்திரியாரின் அருமையான அலசலுக்கு பாராட்டுக்கள்.

எஸ்.மகிந்தராஜா, ஜெர்மனி.

*'துரையப்பா அரங்க புதைகுழி வெறும் பரபரப்புக்கே. இது விரைவில் அமுங்கிவிடும். செம்மணியை சிறிதாக்கிக் காட்டவே பயன்படுகிறது' இது இராஜதந்திரியார் கூறியது. இன்று அதுதானே உண்மை! தோண்டிய எலும்புகள் என்னாகியது? யார் இதன் சூத்திரதாரிகள் என்று கண்டறிய முயற்சியே எடுக்கவில்லையே.*

மு.பசுபதி, யாழ்ப்பாணம்.

### சந்தேகமாக இருக்கிறது

வெளிநாடுகளில் உள்ள சில முன்னாள் போராளிகள் உணர்ச்சி மரத்துப் போனவர்களாகவே இருக்கின்றனர். இவர்களைப் பார்க்கும்போது புலிகள் இவர்களை தடுத்தது நியாயமோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. கடந்த 50ஆண்டுகளில் நிகழாதளவுக்கு இராணுவத் தீர்வு முயற்சியால் தமிழ் மக்கள் பெரும் துயர் அனுபவிக்கின்றனர். வலிகாமத்தில் காணிகளைப் பறிக்க சதி. புதைகுழிகள் விடயத்திலோ இழுபறி. அறுநூறு பேரை காணவில்லை. பத்து வயது சிறுவர்களுக்கும் பாஸ் முறை. இப்படி எண்ணற்ற மனித உரிமை மீறல்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் இங்குள்ள முன்னாள் போராளிகள் மூச்சுக் காட்டுவதில்லை. இவர்கள் எல்லாம் முன்னாள் போராளிகளா என்பது ஒரு புறமிருக்க, இன உணர்வு கொண்டவர்கள்தானா?

சி.குகதாசன், இலண்டன்.

### ஹிட்லர் கிளின்ரன்

தகவல் பெட்டியூடாக பல ஆச்சரிய மூட்டும் தகவல்களை வழங்கிவரும் முரசு 306வது முரசில் உலக பயங்கரவாதியான கிளின்ரனை நவீன ஹிட்லராக சித்தரித்த காட்சியினைத் தந்து அசத்திவிட்டது! பாராட்டுக்கள்!! பணி தொடர வாழ்த்துக்கள்!!!

வ.சுரேஸ்கண்ணா, மட்/இருதயபுரம்.

இனிய முரசே,

வாரந்தோறும் நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமை. 'கையில் சிக்கிய மின்னல்' எனும் தொடர் கதை முன் தொடரே பெரும் அசத்தலாக இருக்கிறது: 'இடி அமீன்' பெரும் அதிரடியாக அசத்துகிறார். 'அதிரடி அய்யாதுரை' பகுதியில் வரும் பொன்மொழிகள் பிரமாதம்.

நாராயணன் புஸ்பலதா, புசல்லாவ.

என் இனிய முரசே!

உன் நந்தவனத்தில் மலரும் அத்தனை மலர்களும் பிரமாதம், பிரமாதம். கடந்த மலரில் மலர்ந்த கிரைம் சக்கரவர்த்தி 'ராஜேஸ்குமாரின்', 'கையில் சிக்கிய மின்னல்' தொடர் பிரமாதம், இது போல நல்ல தொடர் தொடர்ந்து வர வேண்டும் என்பதே எனது பேராசை, வாழ்க, வளர்க உன் பணி.

க.சுதர்சன், செங்கலடி.

முரசில், ராஜேஸ்குமாரின் கை வண்ணத்தில் உருவாகியிருக்கும் புதிய தொடரான, 'கையில் சிக்கிய மின்னல்' ஆரம்பமே வாசிக்க சுவையாகவும்மர்மமாகவும் உள்ளது. அடுத்த அத்தியாயங்களையும் இப்போதே எதிர்ப் பார்க்க வைத்து விட்டது.

திருமதி. புவனேஸ்வரி சிவபெருமான், வெளிமடை.

முரசே!

புதிய தொடரான 'கையில் சிக்கிய மின்னல்' போன்றே உனது வரவும் ஒவ்வொரு வாரமும் கையில் சிக்கிய மின்னலாகவே இருக்கிறது. எனது வாழ்த்துக்கள்.

ச.மலர், மட்டக்களப்பு.

இனிய முரசே,

'உடைந்த இரவு', 'முள் நிலவு', 'டிசம்பர் பௌர்ணமி', போன்ற தொடர்களை தந்த ராஜேஸ்குமாரின் 'கையில் சிக்கிய மின்னல்' முதல் வாரமே அசத்தல்தான் காதிலை பூ கந்தசாமியின் கற்பனை சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது.

பி.ஆர்.லலித்குமார், டிக்கோயா.

### வெளிநாட்டு சதி

முரசே! தமிழக செல்வியின் அமெரிக்க தொடர்பையும், சுவாமியின் சதியையும் 'முரசு' புட்டு வைத்தது. தற்போதுதான் தமிழக சஞ்சிகைகள்கூட அச் சதி பற்றியும், சுவாமியின் வெளிநாட்டு தொடர்புகள் பற்றியும் எழுதத் தலைப்பட்டுள்ளன. எதனையும் முந்தித்தரும் முரசுக்கு பாராட்டு.

கே.சத்தியசீலன், கொழும்பு-09.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:-1772, கொழும்பு.**
**தொலை நகல் (Fax):- 074-513266**

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு.வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# வன்னி எங்கும் போர் எழுச்சி ஊர்வலம்!

## பாரிய சமருக்கு தயாரிப்புகள் தீவிரம்!

வன்னியில் போர் எழுச்சி ஊர்வலங்கள் தினமும் நடைபெற்று வருகின்றன.

பெரும் திரளான மக்கள் இந்த ஊர்வலங்களில் கலந்து கொள்கின்றனர்.

அரிக்கன் லாம்புகளை ஏந்தியபடி "தமிழினத்தின் இருள் அகற்றுவோம்" என்ற கோஷத்தோடு பெருமளவு மக்கள் பங்கு கொண்ட ஊர்வலம் ஒன்றும் சமீபத்தில் நடந்துள்ளது.

சவப்பெட்டிகளை தாங்கியபடியும் போர் எழுச்சி ஊர்வலங்கள் நடந்து வருகின்றன.

வன்னியில் காடுகளுக்குள் நிலை கொண்டுள்ள படையினரை புலிகளும், மக்களும் இணைந்து தாக்குவது போன்ற ஊர்திகளும் ஊர்வலங்களில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

வன்னியில் பெரும் எழுச்சியை உருவாக்கி, பாரிய சமர் நடவடிக்கைகளுக்கு மேலும் ஆட்பலத்தைத் திரட்டுவதுடன், எதிர்கால படை நகர்வுகளை எதிர் கொள்ளவும் தயார் நிலையை ஏற்படுத்தி வருகின்றனர் புலிகள்.

வவுனியா-யாழ் சாலையின் கிழக்குப் பக்கமே புலிகளது முக்கிய கவனம் இருக்கிறது. புலிகளது பிரதான தளமும் இங்கேயே உள்ளது.

இப்பகுதிகளை நோக்கி படைகள் முன்னேற முயன்றால் பாரிய தாக்குதலை தொடுக்கத்தக்க பல்வேறு தயாரிப்புக்களை புலிகள் மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை மக்களையும் போர்ச்சூழலுக்கு ஏற்ப தயார்ப்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

போர் எழுச்சி ஊர்வலங்களோடு, 'யாருக்கு எடுத்துரைப்போம்' என்னும் போர்ப் பிரசார நாடகமும் நடத்தப்பட்டு வருகிறது.

போர் எழுச்சி ஊர்வலங்களின் பின்னர் நடைபெறும் கூட்டங்களில் புலிகளது பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு உரையாற்றி வருகின்றனர்.

### புரளிகள்

இதேவேளை பிரபாகரனுக்கு உடல் நிலை சரியில்லை என்று தென்னிலங்கை பத்திரிகைகள் சிலவற்றில் செய்திகள் வெளியாகின.

வன்னியில் உள்ள ஆலயங்களில் புலிகளுக்கும், பிரபாகரனுக்கும் ஆசி வேண்டி பிரார்த்தனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

போர் எழுச்சி நிகழ்வுகளோடு இணைந்தே மேற்படி பிரார்த்தனைகளும் நடைபெற்று வருகின்றன.

ஆசி வேண்டி பிரார்த்தனை நடப்பதால் பிரபாகரனது உடல்நிலை பாதிப்படைந்திருக்கலாம் என்று நினைத்துவிட்டனர். அதனால்தான் மேற்படி செய்திகள் வெளியாகியுள்ளன.

வன்னியில் பிரபாகரனது நேரடிக் கண்காணிப்பிலேயே புதிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. வன்னியில் புலிகளது இராணுவ உத்திகளும் பிரபாகரனின் உத்தரவுப்படியே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# ஈழத்தில் நடப்பது மாபெரும் இனப் போர்!

## கனடாவில் கவிஞர் வைரமுத்து முழக்கம்

தமிழக கவிஞர் வைரமுத்து சமீபத்தில் கனடா சென்றிருந்தார். பத்திரிகை விழா ஒன்றுக்காகவும், பல்வேறு இலக்கிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளவும் அவர் கனடா சென்றிருந்தார்.

கனடாவில் பல்வேறு விழாக்களில் கலந்துகொண்ட வைரமுத்து எல்லா விழாக்களிலும் தமிழர்களின் ஒற்றுமையை வலியுறுத்திப் பேசியதுடன், தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்திருந்த வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

வைரமுத்து பேசியாவது:

"இந்தக் கனடா மண்ணை நான் முத்தமிட்டு வணங்குகிறேன். இது கடல் போல் பரந்த நாடு. அதற்காகவா? இல்லை. உலகில் உயரமான சி.என். கோபுரம் வானைத் தொட்டுவிடத் துடிக்கிறதே அதற்காகவா? இல்லை. தண்ணீரின் தலைநகரான நயகரா இருக்கிறதே, அதற்காகவா? இல்லை. சொந்தத் தாயகத்தில் வாழ்க்கை மறுக்கப்பட்டு இடியேந்தி வந்த ஈழத்துத் தமிழ் மக்களை மடியேந்திக் கொண்ட மண் என்பதற்காகவே இந்த மண்ணை வணங்குகிறேன்.

நீங்கள் வந்த இடத்தில் சொந்த மொழியை மறந்து விடாதீர்கள். வாழ வந்த இடத்தில் நீங்கள் கற்றுக் கொண்ட மொழி, வயிற்று மொழி. தமிழ் தான் நமது வாழ்க்கை மொழி. ஓர் இனத்தின் தொடர்ச்சிக்கு ஆதாரம் மொழிதான். உங்கள் பிள்ளைகளோடு தமிழில் பேசுங்கள். தமிழை எழுதப்படிக்கக் கற்றுக் கொடுங்கள்.

தான் வாழும் காலத்தில் ஒரு மாபெரும் இனப் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டு, ஒரு கவிஞன் கண்மூடிக் கொண்டிருக்க முடியாது.

எங்கள் கையில் துப்பாக்கி இல்லையே தவிர பேனா இருக்கிறது. ஒட்டுமொத்தத் தமிழினம் என்னிடம் என்ன எதிர்பார்க்கிறது என்பதை நான் அறியாதவனும் அல்ல. ஈழத்துக் காவியம் எழுதுவதை என் வாழ்வின் கடமையாக நினைக்கிறேன். நிச்சயம் அதை எழுதி முடிப்பேன். என் வாழ்வின் கனவு அது.

சினிமா என்ற தங்கச் சகதியில் கழுத்து வரைக்கும் புதையுண்டு இருப்பதால் என்னால் அப்படி இப்படித் திரும்ப முடியவில்லை. காலத்தை ஏற்படுத்திக் கொண்டு அந்தக் காவியம் எழுதுவேன். அதைக் கனடா மண்ணிலேயே அரங்கேற்றுவேன்.

இதோ என் கழுத்தில் ஐந்து தங்கப் பதக்கங்கள் அணிவித்திருக்கிறீர்கள். அது கழுத்திலேயே இருக்கட்டும், கழற்றக் கூடாது என்றும் பணித்திருக்கிறீர்கள்.

ஆனால் என் கழுத்தை அலங்கரிக்கும் இந்தத் தங்கத்தை விட, போராளிகள் கையில் இருக்கும் இரும்பைப் பெரிதாக மதிக்கிறேன்.

எனவே இந்த ஐந்து தங்கப்பதக்கங்களையும், ஈழத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கே காணிக்கையாக வழங்குகிறேன். ஈழத் தமிழ் மக்களின் உணவுக்கும், மருந்துக்கும் இது பயன்பட்டால் மகிழ்வேன்" என்று கூறினார்.

தனக்கு தரப்பட்ட தங்கப் பதக்கங்களை புனர்வாழ்வு கழக துணைத்தலைவரிடம் மேடையில் வைத்து வைரமுத்து வழங்கினார்.

# பலியானோர் நினைவாக புலிகள் திடீர் தாக்குதல்!

வவுனியா பூவரசங்குளம் குருக்களூர் பகுதியில் விசேஷ அதிரடிப் படையினர்மீது 10.05.99 அன்று புலிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தனர்.

இத் தாக்குதலில் நான்கு அதிரடிப் படையினர் பலியாகினர். புலிகள் ஆட்டிலெறிகளால் தாக்குதல் நடத்தியதாகவே செய்திகள் வெளியாகியிருந்தன.

பூவரசங்குளத்தில் தாக்குதல் நடத்த ஆட்டிலெறிகளை புலிகள் கொண்டு வந்து சேர்ப்பது கடினமான காரியம்.

முகாமை கிட்ட நெருங்கி மோட்டார் தாக்குதல்களை முதலில் நடத்திய புலிகள், பின்னர் உள்ளே புகுந்தும் தாக்கியுள்ளனர். இச் செய்தி வெளியே வரவில்லை.

மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த படையினர்மீதே பிற்பகல் 4 மணிக்கு இத் திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலில் நான்கு கொமாண்டோ துப்பாக்கிகளும் மற்றும் சில உபகரணங்களும் தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் கூறியுள்ளனர். புலிகள் தரப்பில் இழப்பு எதுவும் ஏற்படவில்லை.

18.04.99 அன்று மன்னாரில் விசேஷ அதிரடிப்படையினரின் தாக்குதலில் பலியான புலிகளது நினைவாகவே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

# மரணச் சடங்கில் மரண அடி

## முறிந்தது கை! சிதைந்தது கண்

கொழும்பில் கொல்லப்பட்ட வர்த்தகரான ஜெயக்கொடியின் மரணச் சடங்கு வவுனியாவில் நடைபெற்றது.

அந்த மரணச் சடங்கில் அறிவிப்பு செய்வதற்கு ராஜேந்திரம் என்பவர் சென்றிருக்கிறார்.

இவர் முன்னர் புளொட் அமைப்பின் மரணச் சடங்குகளில் அறிவிப்புச் செய்பவர். இவரைக் கண்டதும் ரெலோவினர் ஆத்திரமுற்றனர்.

மரணச் சடங்கு முடிந்ததும் ராஜேந்திரத்தை தனியாக அழைத்துச் சென்று அடித்துள்ளனர்.

இதனால் அவரது கை முறிந்ததுடன், கண்ணிலும் காயம் ஏற்பட்டது. அவரையும் தீர்த்துக்கட்டத் திட்டமிட்டனர்.

கொழும்பில் இருந்த ரெலோ செயலதிபர் அடைக்கலநாதன் எம்பியுடன் ராஜேந்திரத்தின் உறவினர்கள் தொடர்பு கொண்டனர். அதனையடுத்து ராஜேந்திரம் விடுதலை செய்யப்பட்டார்.

உடனடியாக வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட ராஜேந்திரம், மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

# உளவாளிகள் என்று கொலை

## பலியான இருவரின் பரிதாபக் கதை

வவுனியாவில் நான்கு பேர் 15.05.99 அன்று ரெலோ அமைப்பினால் கொல்லப்பட்டனர்.

அவர்களில் இரண்டுபேர் முன்னர் புளொட்டில் இருந்து விலகி ரெலோவில் சேர்ந்தவர்கள். மற்றுமொருவர் புளொட் ஆதரவாளர். நாலாமவர் 16வயது மாணவர். இவர் புளொட் பத்திரிகை விற்பனை செய்தவர்.

அந்த மாணவரை முன்பே பிடித்து வைத்திருந்தனர். கொழும்பு சம்பவம் அறிந்ததும் கழுத்தை வெட்டி குட்ஷெட் வீதியில் போட்டுள்ளனர். மூன்று வெட்டுக் காயங்கள் காணப்பட்டன.

புளொட்டில் இருந்து விலகி தம்மோடு இணைந்த இருவரும் புளொடின் உளவாளிகள் என்று கூறியே ரெலோ தீர்த்துக் கட்டியது.

ஆனால் அவர்களை புளொட் அமைப்பினரும் தேடித் திரிந்ததாகவும், புளொட்டுக்கு பயந்தே ரெலோவுக்கு போனார்கள் என்றும் உறவினர்கள் கூறியுள்ளனர்.

# வவுனியாவில் ஆயுதக் களைவு

## கொடுத்தது கையளவு! கொடுக்காதது பெருமளவு!

வவுனியாவில் இயக்க மோதல்களை அடுத்து புளொட், ரெலோ இயக்கங்களிடம் ஆயுதங்கள் களையப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

புளொட், ரெலோ முகாம்கள் முற்றுகையிடப்பட்டு படையினரால் ஆயுதங்கள் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இது ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்பது அம்பலமாகியுள்ளது. வவுனியா படுகொலைகளுக்குத் தாம் தக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக காண்பிக்க மட்டுமே படை வட்டாரங்கள் முயன்றுள்ளன. உரிய நடவடிக்கை எடுக்க தவறியுள்ளன.

ஆயுதங்களைப் பெறுவதற்கு தாம் வரப் போவதாக முன்கூட்டியே குறிப்பிட்ட இயக்க முகாம்களுக்கு படையினர் அறிவித்தனர்.

தேவையான ஆயுதங்களை மறைத்து வைத்துவிட்டு, சில ஆயுதங்களை மட்டுமே ஒப்படைக்க இந்த முன்னறிவிப்பு வசதியாக இருந்துள்ளது.

புளொட் முகாமில் 13 ஆயுதங்களும், ரெலோ முகாமில் 12 ஆயுதங்களும் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன. இதனை அறிந்து வவுனியா மக்களும் நகைக்கின்றனர்.

நூற்றுக்கு மேற்பட்ட ஆயுதங்கள் இரு இயக்கங்களிடமும் இருக்கின்றன. அரசு கொடுத்த ஆயுதங்களைவிட சொந்த ஆயுதங்களும் வைத்துள்ளன. அப்படியிருக்க, அவற்றில் சிலவற்றை மட்டுமே மீளப்பெற்றுவிட்டு, பெரிதாக அறிவித்தது கண்துடைப்பு நடவடிக்கை என்றே மக்கள் கூறுகின்றனர்.

மேலும் ஆயுதங்கள் உள்ளனவா என்று கண்டறிய தேடுதல்கூட நடத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வங்கியில் குண்டு

சிறீலங்காவின் பொருளாதார இலக்குகளைக் குறிவைத்து நாசப்படுத்தும் புலிகள் மின்சாரக் கடத்திகளையும் தொலைபேசிப் பரிவர்த்தனை சாதனங்களையும் இதுவரை குண்டு வைத்துத் தகர்த்து வந்தனர்.

இப்பொழுது வங்கிகளிலுள்ள ரெல்லர் சாதனங்களையும் (பணம் மீளப்பெறும் தன்னியக்க இயந்திரம்) தகர்க்கத் தொடங்கிவிட்டனரோ என்று சந்தேகம் எழுந்துள்ளது.

கொழும்பு நகரில் வெள்ளவத்தையிலுள்ள ஒரு தனியார் வங்கியிலிருந்த இத்தகைய ஒரு சாதனம் கடந்த மாதம் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

அரசாங்கப் பகுப்பாய்வு நிபுணர்கள் 140கிராம் எடையுள்ள வெடிபொருள் இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கண்டறிந்துள்ளனர்.

# தகவல் கொடுத்தவரும் மாண்டாரா?

## கொலை விவகாரத்தில் சந்தேகம்!

பம்பலப்பிட்டியில் வைத்து ரெலோ முக்கியஸ்தர்கள் இருவரும், வர்த்தகர் ஒருவரும் புளொட் அமைப்பினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ரெலோ அமைப்பின் நிதிப்பொறுப்பாளர் தாஸ், வவுனியா பொறுப்பாளர் குகன் ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். குகனுக்கு குறிவைத்தே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே வவுனியாவில் வைத்து குகன்மீது புளொட் தாக்குதல் நடத்தியது. குகன் காயங்களோடு தப்பினார். வவுனியாவில் குகன் இல்லையானால் ரெலோவை முடக்கிவிடலாம் என்று புளொட் நினைத்தது.

புளொட்டின் மேதின கூட்ட பிரசுரத்தில் குகன் பெயர் பேச்சாளர்களில் ஒருவராக இடம் பெற்றிருந்தது. குகனை தீர்த்துக்கட்ட முடிவு செய்த பின்பே, குகனுடன் தமக்கு விரோதம் இல்லையென்று காண்பிக்க அவரது பெயரை தமது பிரசுரத்தில் சேர்த்திருந்தனர் என்று சந்தேகிக்கப்படுகிறது.

குகன் சமீப காலத்தில் கொழும்பு புறநகர் பகுதி ஒன்றில் வீடு எடுத்து தங்கியிருந்தார். வவுனியாவில் உள்ளபோதும் அவதானமாக நடந்து கொண்டார். எனவே அவர் எதிர்பாராத பகுதியில் வைத்து தீர்த்துக் கட்ட திட்டமிட்டனர்.

குறித்த தினத்தில் குகன் மெஜஸ்ரிக் சிட்டிக்கு வருவார் என்ற தகவல் எப்படித் தெரிந்தது என்பதே புதிராக உள்ளது.

கொல்லப்பட்டவர்களில் ஒருவரான வர்த்தகர் ஜெயக்கொடிமீதே சந்தேகம் நிலவுகிறது. அவருக்கு மட்டும்தான் குகன் மெஜஸ்டிக் சிட்டிக்கு அன்று தன்னுடன் வரப் போவது தெரிந்திருந்தது.

வவுனியாவில் மாபெரும் பணக்காரராக உள்ள வர்த்தகர் ஜெயக்கொடி. அவர் மிரட்டலுக்குப் பயந்து ஒத்துழைத்து தகவல் கொடுத்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவம் நடந்த தினத்தன்று காலை முதல் அடிக்கடி அப்பகுதியில் குறிப்பிட்ட' இளைஞர்கள் சிலர் நடமாடியதாகவும், வேனில் வந்து போய்க் கொண்டிருந்ததாகவும் அப்பகுதியில் உள்ளவர்கள் கூறியுள்ளனர். எனவே, அன்று எப்படியாவது சில பொருட்களை வாங்கித் தருவதாகக் கூறி குகனை அழைத்து வருவதாக வர்த்தகர் கூறியிருக்கலாம்.

### ஐந்து இலட்சம்

இதற்கிடையே இன்னொரு தகவலும் வெளியாகியுள்ளது. வர்த்தகர் ஜெயக்கொடி சம்பவ தினம் காலையில் இயக்கப் பிரமுகர் ஒருவருக்கு ஐந்து இலட்சம் ரூபா கொடுத்ததாக அவரது மனைவி தெரிவித்துள்ளாராம். 'பணத்தையும் வாங்கிவிட்டு கொன்று விட்டார்களே' என்று மனைவி கதறியதாக ரெலோ கூறுகிறது. தான் பணம் கொடுத்த விடயத்தை ஜெயக்கொடி ரெலோவிடம் கூறவில்லை என்பதும் சந்தேகத்தை அதிகப்படுத்தியுள்ளது.

ஜெயக்கொடியை உயிருடன் விட்டு வைத்தால், விசாரணைகளில் உளறிவிடக் கூடும் என்று நினைத்து அவரையும் சுட்டுக் கொன்றிருக்கலாம் என்றும் ஊகிக்கப்படுகிறது.

ரெலோவுக்குள் இருந்து வேறு வகையில் தகவல் போவதாக இருந்தால் வவுனியாவில் வைத்தே தீர்த்துக்கட்டியிருக்கலாம். அது தவிர அன்று குகன் பயன்படுத்தியது இயக்க வாகனமுமல்ல. வாடகைக்குப் பிடித்த வேனிலேயே சென்றார். அதனால் வாகனத்தை இனம் கண்டு பின்தொடர்ந்து செல்லவும் சந்தர்ப்பம் இல்லை. எனவே, திட்டவட்டமான தகவலின் அடிப்படையிலேயே கொலைத் திட்டம் நிறைவேறியுள்ளது என்பது தெளிவு.

இக் கொலை எதிர்ச்சக்தி ஒன்றினால் செய்யப்பட்டதாக புளொட் கூறியுள்ளது அந்த சக்தி யார் என்று கூறவில்லை.

# புலிகளிடம் ஓட்டம்

## முக்கிய தகவல்கள் அம்பலமாகும்

மட்டக்களப்பு- மாவடிவெம்பு படைமுகாமுக்கருகில் வைத்து மினிவேன் ஒன்றில் சென்று கொண்டிருந்த எஸ்.சௌந்தரராஜன் (21) என்பவர் புலிகளால் மடக்கிப் பிடித்துக் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இவர் அந்த மினிவேனின் உதவியாளராக வந்த சமயமே முன்கூட்டி எதிர்பார்த்திருந்த புலிகள் வீதியில் வந்த வேனை வழி மறித்து இவரைப் பிடித்திழுத்து சைக்கிளில் ஏற்றிச் சென்றனர். சம்பவம் நடந்த இடத்திற்குச் சில யார் தூரத்தில் படைமுகாம் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

15.05.99 அன்று காலை 10 மணிக்கு இச்சம்பவம் நடந்தது. சமீபத்தில் ராசிக் குழுவினருடன் இருந்த சிலர் ஆயுதங்களுடன் புலிகளிடம் தப்பி ஓடிச் சென்றனர். அவர்கள் கொடுத்த தகவலிலேயே இவர் கடத்தப்பட்டார் என்று அறியப்படுகிறது.

கடத்தப்பட்ட நபர் முன்னர் புளொட் இயக்கத்தில் இருந்து விலகி, பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் ராசிக் குழுவினருடன் இணைந்திருந்து விட்டு விலகி புலிகளிடம் சென்றிருந்தாராம். இவருக்குத் தலையை மொட்டை அடித்து 2 மாத பங்கர் சிறைவாசத்தை புலிகள் வழங்கியிருந்தனராம்.

அதன் பின்னர் இவர் ஊர்வந்து சேர்ந்து சிலகாலம் கழிந்த பின்னரே சமீபத்தில் மீண்டும் புலிகளால் கைது செய்யப்பட்டார்.

இதனிடையே கடந்த மூன்று வருடகாலமாக ராசிக் குழுவினருடன் இயங்கி வந்த ஒருவர் ராசிக் குழுவினரின் சகல தகவல்களையும் சேர்த்துக் கொண்டு புலிகளிடம் போய்ச் சேர்ந்துள்ளார்.

கடந்த மூன்று வருடகாலமாக இவர் ராசிக் குழுவில் இருந்த சமயமும் "புலனாய்வுப் புலியாகவே" செயற்பட்டிருக்கிறார். அதனாலேயே மேற்படி நபர் புலிகளிடம் போய்ச் சேர்ந்ததும் அவருக்கு முக்கிய பொறுப்பும், மெய்ப்பாதுகாப்பும், மற்றும் சகல வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன, என்று ராசிக் குழுவினர் கூறுகின்றனர்.

# புலி எதிர்ப்புப் பிரசுரம்!

அக்கரைப்பற்றுப் பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் புலி எதிர்ப்புச் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

சிறுவர்களை விழித்து "பிள்ளைகளே சதியில் மாட்டாதீர்கள்!" என்ற விவரணச் சித்திரத்துடன் காணப்படும் அச்சுவரொட்டிகளில் புலிகள் துப்பாக்கியுடன் நிற்கும் காட்சியும் பின்னால் ஏராளமான மனித மண்டை ஓட்டுக் குவியல்கள் காணப்படும் காட்சியும் தெரிகிறது.

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியிலும், துரையப்பா விளையாட்டரங்கிலும் மனிதப் புதைகுழியும், எலும்புக் கூடுகளும் உள்ள விவகாரம் சூடுபிடித்திருக்கும் தறுவாயிலேயே கிழக்கு முனையில் இந்த மண்டை ஓட்டுச் சுவரொட்டிகள் படையினரால் ஒட்டப்பட்டுள்ளன.

# உல்லாச தீவில் துப்பாக்கி வேட்டுக்கள்

## பயணிகள் கிலி! புலி எனப் பீதி!

திருகோணமலைக் கடற்கரையை ஒட்டி அழகான தீவு-புறாத்தீவு என்று பெயர். மோதல்கள் இடம்பெறுகின்ற நெருக்கடி மிக்க இக்கால கட்டத்திலும் உள்நாட்டு-வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு இங்கு பஞ்சமில்லை.

ஆழமில்லாத-அமைதியான கடலில் குளித்து உல்லாசமாகப் பொழுது போக்குவதற்காகவே இங்கு பெரும்பாலான பிற நாட்டுப் பயணிகள் கூடுவார்கள். ஞாயிற்றுக்கிழமை போன்ற ஓய்வு நாட்களில் கடமையிலில்லாத கடற்படை அதிகாரிகளும் இத்தீவில் ஆனந்தமாகப் பொழுதுபோக்குவது வழக்கம்.

கடந்த 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆனந்தமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்த அந்த புறாத் தீவில் துப்பாக்கி ரவைகள் மழைபோல் பொழிந்ததைக் கண்டு அவ்வுல்லாசப் பயணிகள் ஓடிச்சென்று பாதுகாப்புத் தேடி தத்தமது உயிரைக் காப்பாற்றிக் கொண்டனர்.

புலிகள் இயக்கத்தினர்தான் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்கிறார்களோ என்றுதான் ஆரம்பத்தில் அஞ்சப்பட்டது. ஆனால் கடலில் காணப்பட்டதோ சிறீலங்காக் கடற்படைக் கப்பல் ஒன்று. நீச்சலடித்துக் கொண்டிருந்த சில இராணுவ அதிகாரிகள் உடனடியாக திருகோணமலைக் கடற்படைத் தளத்துடன் தொடர்புகொண்டு விவரத்தைச் சொன்னார்கள். இதன் பின்னர்தான் வேட்டுகள் நின்றன.

சிறீலங்கா அரசு தனது அந்நியச் செலாவணிச் சம்பாத்தியத்துக்கு உல்லாசப் பயணத் துறையையும் எதிர்பார்த்திருக்கும் இச்சமயத்தில் இவ்வாறான சம்பவம் நடைபெற்றுள்ளது.

இத்தீவிலிருந்து பயந்தோடிய பல வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் சில இராஜதந்திரிகளும்- "தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்; இனிமேல் இந்தத் திசையில் தலை வைத்துக்கூடப் படுக்க மாட்டோம்!" என்று கூறிக்கொண்டு தாமதியாமல் அங்கிருந்து வெளியேறிவிட்டனராம்.

# தொலைபேசி நிலக்கீழ் கம்பிகள் எரிப்பு!

## புலி என்று கூறி மிரட்டல்

அக்கரைப்பற்று-ஆலையடிவேம்பு பிரதேசத்தில் தங்களைப் புலிகளின் உதவியாளர்கள் எனக் கூறிக்கொள்ளும் விஷமிகள் கும்பலொன்று தொலைபேசி நிலக்கீழ் கம்பிகளை எரித்துச் சேதப்படுத்தியுள்ளது.

இது போன்று குறிப்பிட்ட அந்தக் கும்பல் வேறு பல நாசகாரச் செயல்களிலும் ஈடுபட்டு வருவதாகப் பொதுமக்கள் கூறுகிறார்கள்.

புலிகளின் உதவியாளர்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் இந்தத் திருட்டுக் கும்பலின் நாசகார நடவடிக்கைகளுக்கு சீருடையினரின் ஆசிர்வாதம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களது நாசகார நடவடிக்கைகளைக் கண்டித்தும் இதற்குப் பொறுப்பானவர்களின் பெயர் விவரங்களை வெளியிட்டும் பொதுமக்கள் சுவரொட்டிகளை ஒட்டி, இதனைத் தடுக்குமாறு பொலிஸாரைக் கேட்டுக் கொண்டனர். ஆனால் இதுவரை அவர்களுக்கெதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

அக்கரைப்பற்று நகரப் பகுதியில் புலிகளின் நடமாட்டம் குறைந்திருப்பதாலேயே இத்தகைய நாசகாரக் கும்பல்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு வழி வகுத்துள்ளதாக அப்பகுதிப் பொதுமக்கள் கூறுகிறார்கள்.

மட்டக்களப்புப் பொது வைத்தியசாலையிலும் சிரேஷ்ட தாதி மாணவரொருவர், தான் புலி இயக்கத் தீவிர ஆதரவாளர் எனக் கூறிக்கொண்டு அங்குள்ள கனிஷ்ட மாணவர்களிடமும் பயிற்சித் தாதிகளிடமும் அட்டகாசம் புரிந்து வருகிறாராம்.

ஆனால் புலி இயக்கத்திற்கும் ஆதரவாளர் என இவர் கூறுவதற்கும் சம்பந்தமில்லை என்றும் இவர் மற்றவர்களை மிரட்டி அடாவடித்தனம் புரிவதற்கே அவ்வாறு கூறிவருகிறார் என்றும் கூறப்படுகிறது.

# பணிகளுக்கு குந்தகம்

(திருமலை நிருபர்)

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய தமிழ் மாவட்ட அஞ்சலகப் பிரிவுகளில் நுண்ணாய்வுப் பரிசோதகர் எவருமில்லாமையால் திணைக்களத்தின் சீரான பணிகளுக்குக் குந்தகம் ஏற்பட்டுள்ளதாக அஞ்சல் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நுண்ணாய்வுப் பரிசோதகர் பரீட்சையிற் சித்தியடைந்த பல அதிகாரிகள் திணைக்களத்தில் இருந்தும் பல வருடங்களாக மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய அஞ்சல் மாவட்டங்களில் இப்பதவிகள் நிரப்பப்படாமலே இருக்கின்றன.

அஞ்சல் சேவையில் மோசடிகள், தவறுகள் நேராமற் பார்த்துக்கொள்வதும், தவறுகள் நேருமிடத்து உடனடி விசாரணையைத் தொடங்கி தவறுவிட்ட ஊழியரைக் கண்டுபிடித்து, திணைக்களத் தண்டனைக்கோ சட்ட நடவடிக்கைக்கோ வழி செய்வதும் இப்பதவியாளர்களின் கடமையாகும். ஒரு பிரிவில் ஆகக் குறைந்தது ஒரு நுண்ணாய்வுப் பரிசோதகராவது கட்டாயம் இருக்க வேண்டும்.

தற்போது நிர்வாக நடவடிக்கைகளில் தலைவராக இருக்கும் அவ்வப்பகுதி அஞ்சல் அத்தியட்சகர்களே வேறு வழியின்றி நுண்ணாய்வுப் பரிசோதகரது கடமைகளையும் செய்து வருகிறார்கள். இதனால் நிர்வாகமும் சீராக இயங்குவதில்லை, தவறாளர்களும் அடையாளம் காணப்படுவதில்லை என்ற மோசமான நிலை திணைக்களத்தில் நிலவுகிறது.

சிங்களப் பிரிவுகளில் அளவுக்கதிகமாக நுண்ணாய்வுப் பரிசோதகர்களை நியமித்துச் சம்பளம் வழங்கும் அஞ்சல் திணைக்களம் தமிழ் மாவட்டங்களைப் புறக்கணிப்பது அரசியல்வாதிகளுக்கும் தெரியாதது ஆச்சரியம்தான்!

# கடத்தியவருக்குத் தண்டனை!

மட்டக்களப்பு-கதிரவெளியில் 'மிலகோ' நிறுவனத்திற்காகப் பால் சேகரிக்கச் சென்ற வாடகை வேனை வாகரைப் பகுதிப் 'புலி இயக்கப் பொறுப்பாளர் வழி மறித்துப் பலவந்தமாக எடுத்துச் சென்றார். அந்த வாகனத்தை அவரே ஓட்டிச் செல்லும்போது அது கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதுண்டது. விபத்தில் புலிப் பொறுப்பாளரும் அந்த வேனில் பயணம் செய்த மேலும் நால்வரும் கடும் காயங்களுக்குள்ளானார்கள்.

சம்பவம் நடந்தது பற்றிப் புலிகளின் உள்ளூர்த் தலைமைப் பீடத்திற்குத் தெரியவரவே சம்பந்தப்பட்ட வாகனத்தை காரணமின்றி எடுத்துச் சென்ற அப்பிரதேசப் பொறுப்பாளருக்கு இடமாற்றமும் தண்டனையும் வழங்கப்பட்டதாக விசயமறிந்தோர் தெரிவிக்கிறார்கள். இச்சம்பவம் சமீபத்தில் இடம்பெற்றது.

# சிங்கள வைத்தியர் நியமனம்

## தமிழ் நோயாளர் அவதி

(மன்னார் நிருபர்)

மன்னார் ஆதார வைத்தியசாலை கடந்த பல வருடங்களாக எவருமே கவனிப்பாரின்றி காட்சி தருகிறது.

இங்கு நிரந்தர மாவட்ட வைத்திய அதிகாரி இல்லாததால் பல்வேறு நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

அத்துடன் மகப்பேற்று நிபுணர் நீண்டகாலமாக இல்லை. சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர்கூட இல்லை.

20 வைத்தியர்கள் தேவையாகவுள்ள போதிலும் 16 பேரே கடமையில் உள்ளனர். இவர்கள் 06 மாதங்களுக்கொருதடவை மாறிவிடுவர்.

புதிய நியமனம் பெறும் வைத்தியக் குழுவினர் சிங்களவர்களாக இருப்பதால் தமிழ் பேசும் மக்கள் நோயை தெரியப் படுத்துவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

அண்மையில் பல்வலி எனக்கூறி சிகிச்சை பெறவந்த நோயாளி கூறிய மொழி விளங்காமையினால் வயிற்றைச் சோதித்து சிகிச்சை செய்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இங்கு 77 தாதிமார் தேவைப்படுகின்றனர். ஆனால் இருப்பதோ 20 பேர் மாத்திரமே. அத்துடன் வைத்திய ஆய்வுகூட சேவை செய்வதற்கு இரு ஊழியர்கள் மாத்திரமே உள்ளனர்.

எக்ஸ்-ரே கதிர் படம் பிடிக்கும் இயந்திரம் இருக்கின்ற போதிலும் அதனை இயக்க ஒருவருமில்லாததால் அது தூசி படிந்து காணப்படுகின்றது.




**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்த செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**

**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



**தெய்வீக மருத்துவம்**

சர்வதேச சமூக தெய்வீக சேவை

CHARITY REGED NO. HA\04\BT\219

NTSF துயர் தீர்க்குமிடம்

வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், காதல், கல்வி, தொழில், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள் என்பவற்றிற்கும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்டமெனும் சோதிடத்தினால் உங்கள் பலன்களையும் தெரிந்து கொள்ளலாம்.

ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர் (SAMP) "நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருத்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்."

தெய்வீகம் ஸ்ரீலங்கா,
தலைமை அலுவலகம்
கல்லடி-அரசவிடுதி வீதி, மட்டக்களப்பு.

THEIVEEGAM SRI LANKA,
HEAD OFFICE
BATTICALOA. SRI LANKA.
T.PHONE: 065-24825

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்." – "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"



**ஹோமியோபதி**

தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

**Dr. R. தியாகராஜன் D.H.M.S. AMRSH (Lond)**

நீரிழிவு, ஆஸ்துமா, ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கிறார்.

ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ் தொ.பே: 585592 - 581986

19.05.1999 - 24.05.1999

இந்தியத் தொ.பே: 0091-431-432946
0091-431-432046

வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.



**NISACO STEEL FURNITURE**



Special Discount on This Month Only

Open on Every Sunday 8.am to 8.pm

**நிசாகோ இன்டஸ்ட்ரீஸ்**

204, ஆஸ்பத்திரி வீதி, களுபோவில, தெஹிவல. Tel : 074-201727 Fax : 075-518168
(Opposite Buddagosha Vidyalaya)
FACTORY & SHOW ROOM
Millagaha Estate, Aturuginya Road, Hokandara North, Hokandara. Tel 561367
(Near the telecommunication Exchange Hokandara)



**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
**MILLENNIUM POSTAL EDUCATION SCHEME**
பிறைட் புத்தக நிலையம் (வரையறுக்கப்பட்டது)
ஆயிரமாண்டு தபால் மூல கல்வித் திட்டம்

**SPOKEN ENGLISH & SINHALA**

மூன்றேமாத காலத்தில் ஆங்கிலம்/சிங்களம் ஆகியனவற்றை பேச, எழுத, வாசிக்க கற்றுக் கொள்ள முடியும். ஆயிரக்கணக்கான மாணவர்கள் கடந்த பத்து வருடங்களாக கற்று பயன் பெற்றுள்ளனர்.

**METHOD OF COMPUTERISED BOOK KEEPING & ACCOUNTANY (M.C.B.A)**



கடைக் கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு பேணுவது என்பதும், E.P.F, E.T.F, G.S.T, சம்பளம் தயாரிப்பது, சரக்கிருப்பு கட்டுப்பாடு ஆகிய அனைத்தும் கணனியின் உதவியுடன் தயாரிக்கும் முறை என்பன கற்றுத் தரப்படும். இப்பாட நெறியை மூன்றே மாதகாலத்தில் கற்றுத் தேறமுடியும்.

* நேரடி வகுப்புகளுக்கு தொலை பேசியில் தொடர்பு கொள்க.

**BUSINESS ENGLISH**

வியாபார கடிதங்கள், வேலைக்கான விண்ணப்பங்கள் எவ்வாறு தயாரிக்கப் படுகின்றது என்பதும் நேர்முகத் தேர்வு, சம்பாஷனை ஆகிய வற்றுடன் கூடிய பாடத் திட்டம் மேலதிக விபரங்களுக்கு விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க.

பாலர்-முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி
**NURSERY TEACHER TRAINING COURSE (NTTC)**

SIX MONTH'S CORRESPONDENCE DIPLOMA COURSE
ஆறுமாத கால தபால் மூலமான டிப்ளோமா கல்விநெறி

பாலர்-முன்பள்ளி மாணவர்களுக்கு எவ்வாறு விளையாட்டு ஊடாக கல்வி போதிப்பது என்பதும், சிறார்களின் மனோநிலை விவேக தன்மை, சிந்தனைத்திறன், என்பவற்றை கணித்து கற்பிக்கும் முறைகள் அனைத்தையும் பாடத்திட்டங்களாகவும் பாட விளக்கங்களுடன் கொண்ட கல்விநெறி. இப்பாட நெறியை பூர்த்தி செய்பவர்கள் தங்களின் பிரதேசத்திலேயே Nursery School அமைக்க கூடிய தகுதியை வழங்கும், Diploma in Nursery Teacher Training Certificate வழங்கப்படும்.

**FAMILY LIFE EDUCATION (FLE)**
குடும்பநலக் கல்வி

வளரிளம் பருவத்தினர் தமது பருவமாற்றங்களையும் செயற்பாடுகளையும் சிறந்த வாழ்க்கை நலத்தையும் பேணும் பயிற்சியாகும் (மூன்றுமாதகாலபாடத்திட்டம்).

**ART OF YOGASANAM - யோகாசனக் கலை**

உடல் நலத்தை பேணவும், வேண்டாத இரத்த அழுத்தங்களில் இருந்து விடுபடவும், மேனி அழகை பேணவும் உகந்த ஆறுமாதகால பயிற்சி நெறி

APPLICATION FORM
NAME : ....................
ADDRESS : ....................
....................
விரும்பும் பாடநெறி : ....................

BRIGHT FUTURE IN YOUR HAND

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX P. O. BOX NO: 162, COLOMBO - 11. TELE: 434770, 074-718592



**A/C மற்றும் குளிர்சாதனப் பயிற்சி நெறி : 1999**

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எளிதில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய A/C மற்றும் குளிர்சாதனப்பெட்டிகளைக் கையாளும் தொழில்நுட்பப்பாடநெறியின் 194வது Batch இற்குஇப்போது மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.இலங்கையில் முதன் முறையாக 1991ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட எமது நிறுவனம் மாணவர்களைப் பயிற்றுவித்து வெளிநாட்டில் 3000க்கு அதிகமானோர் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

• குளிசாதனம், A/C, வாகனத்திற்கான A/C போன்றவைகள் ஆரம்பம் முதல் கிரமமாக கற்பிக்கப்படும். • சகல மாணவர்களும் தனியாக தொழில்செய்யும் திறமையைப்பெறமுடியும் என்பதை உறுதி செய்கிறோம் • பாடநெறியின் முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் இரண்டு வழங்கப்படும்.

இலவசம்

A/C பாடநெறியைப் பின்பற்றும் மாணவர்களுக்கு வீட்டுவயரிங் (House Wiring) பாடநெறி இலவசமாகப்பயிற்றுவிக்கப்படும்.

விபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவத்தை ரூபா25/= செலுத்தி 27.5.99 திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

The Principal
**Higher Tech (Lanka)**
85/2,St.Anthony's Mawatha,
Colombo - 3



வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை ஏராளமாகப் பெற்றுத்தரும்....

**கணனிப்பொறியியல் நுட்பம்**

**(Diploma in Computer Hardware Engineering)**

இப்பொழுது புதியமாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.பாட நெறி ஆரம்பத்திலிருந்து முறைப்படி கற்பிக்கப்படும்காலம் - 1மாதம்

பாடத்திட்டம் கணனியைப்பொருத்துதல்(Assembling), கோளாறுகளைக்கண்டுபிடித்தல்(Troubleshooting),தரமுயர்த்துதலும்பேணுதலும்(Upgrading PCs,Maintenance & Servicing), பழுதுபார்த்தல்(Repairing),செயல்முறைப்படுத்துதல்(Software Instalation) தொழிற்பாட்டுமுறை(Operating System).

இலவசம் கணனியொன்றை அமைப்பதற்கு குறைந்தவிலையில் உபகரணங்கள்.வெளிநாட்டுவேலைவிபரம்.கலாசாலை அறிமுக அட்டை.பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்.நற்சாட்சிப்பத்திரம் என்பன இலவசமாகவழங்கப்படும்.

மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்படிவத்தையும் 27.5.99 ஆம் திகதிக்கு முன் அதிபரின் பெயருக்கு ரூபா 25/= காசுக்கட்டளையை அனுப்பி அல்லது நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

The Principal
**Higher Tech (Lanka)**
85/2,St.Anthony's Mawatha,
Colombo - 3



**மனோதத்துவ வைத்தியம்**

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை

கொழும்பில் மே 23 முதல் 30 வரை சந்திக்கலாம்

Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388

கல்முனையில் ஜூன் 5,6ம் திகதிகளில் சந்திக்கலாம்

T.M.M. பார்மசி–கல்முனை. T.P. 067-29329

வவுனியாவில் ஜூன் 12,13ம் திகதிகளில் சந்திக்கலாம்

(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(HOTEL VASANTHAM), 40,கண்டி வீதி, வவுனியா. T.P.024-22607, 024-22615, 22365

கடிதத்தொடர்பு:- Resident T.P. 065-24019
Dr. P.Arumugam S.A.M.P.
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.



சகல விதமான வாத்தியக் கருவிகளையும் உதிரிப் பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும் அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.

ஒலிப்பதிவு நாடாக்களும் விற்பனைக்கு உண்டு



**SAI SANGEETHA**

L.G. 123, Peoples Park, (நிலத்தளம்)
Gaswork Street, Colombo -11. Tel : 445102

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நகர்வுகளும் குறிகளும்

தென் மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு வன்னியில் படை நகர்வு ஆரம்பமாகும். மன்னாரில் இருந்தும், பெரிய மடுப் பகுதியில் இருந்தும் படைகள் நகர்வு முயற்சியில் இறங்கக்கூடும் என்று கடந்த வாரம் இதே பகுதியில் குறிப்பிட்டிருந்தோம்.

எந்தப் பிசகுமின்றி கடந்த 14.05.99 அன்று அதேவிதமாகவே படை நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமேல் மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு வவுனியா-யாழ் சாலையின் கிழக்கே உள்ள ஒட்டிசுட்டானை கைப்பற்றும் 'ரிவிபல' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஐந்து மாகாண சபைத் தேர்தல்களை முன்னிட்டு வவுனியா- யாழ் சாலையின் மேற்கே உள்ள பகுதிகளை நோக்கிய ரணகோஷ 1, ரணகோஷ 2 நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன.

அதன்பின்னர் தென்மாகாண சபைத் தேர்தல் திகதி அறிவிக்கப்படும்வரை ரணகோஷ படைகளுக்கு ஒய்வு கொடுக்கப்பட்டது.

ஜூன் மாதம் 10ம் திகதி தென் மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட பின்னர், மறுபடி வன்னியில் படை நகர்வுகள் ஆரம்பமாகின.

இந்த படைநகர்வுக்கு ரணகோஷ 3 என்று பெயரிடப்பட்டுள்ளது.

வவுனியா-யாழ் சாலையின் மேற்கே தான் இந்தப் படை நகர்வும் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் இதற்கு முன்பாக 10.05.99 அன்று வவுனியா-யாழ் சாலையின் கிழக்கே உள்ள ஒட்டிசுட்டானில் இருந்தும் படை நகர்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

புலிகளின் பிரதான தளமான முல்லைத்தீவை நோக்கி படைகள் மேலும் முன்னேற முடியுமானால், அரசுக்கு பிரசாரரீதியில் பலத்த இலாபம் ஏற்படும்.

எனவே ஒட்டிசுட்டானில் இருந்து முள்ளியவளை நோக்கி படை நகர்வு ஒன்றுக்கு திட்டமிடப்பட்டது.

அதற்கு முன்னோடியாக 10.05.99 அன்று ஒட்டிசுட்டானில் மூன்றாவது விசேஷ படையினர் சத்தம் இன்றி வேவு நகர்வு ஒன்றை மேற்கொண்டனர்.

ஒட்டிசுட்டானில் உள்ள புலிகளது நிலைகளை வேவு பார்த்து சத்தமின்றி கைப்பற்றினால், பின்னர் ஏனைய படையணிகள் பெரும் எடுப்போடு முன்னேறுவது சுலபம்.

ஒட்டிசுட்டானில் உள்ள புலிகளின் நிலைகளை கைப்பற்றிவிட்டால், முள்ளியவளைக்கு சென்றுவிடலாம். அங்கிருந்து முல்லைத்தீவு தளத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கலாம்.

புலிகளின் முல்லைத்தீவு தளத்தின் வாயிலுக்கே சென்றுவிட்டோம் என்று பிரசாரம் செய்யவும் எடுப்பாக இருக்கும்.

ஏற்கனவே மாங்குளம், ஒட்டிசுட்டான் போன்ற பகுதிகளை விசேஷ படைப்பிரிவு சத்தமின்றி நகர்ந்து கைப்பற்றிய பின்பே, ஏனைய படையணிகள் புகுந்து நிலை கொண்டன.

அதே தந்திரத்தை கையாண்டு முள்ளியவளை செல்லவே இம்முறை நகர்வில் இறங்கினர் விசேஷ படைப்பிரிவினர்.

ஒட்டிசுட்டானை கைப்பற்றிய கட்டத்தில் முள்ளியவளைவரை வேவு படையணிகளாக விசேஷ படைப்பிரிவு சென்று வந்தது.

அதனையறிந்த புலிகள் ஒட்டிசுட்டானில் தமது நிலைகளை பலப்படுத்தியதுடன், பீரங்கிப் படையணிகளையும் தயார் நிலையில் வைத்திருக்கின்றனர்.

10.5.99 அன்று விசேஷ படைப்பிரிவு தமது நிலைகளை நோக்கி நகர்ந்து வருவதை புலிகள் அவதானித்துவிட்டனர்.

சற்று முன்னேறுவதற்கு அனுமதித்து பதுங்கியிருந்த புலியணிகள், தமக்கு சண்டையிட தோதான இடத்தில் வைத்து தாக்கத் தொடங்கினார்கள். விசேஷ படையணியை முற்றுகையிட்டு முற்றாக அழிக்கவே புலியணிகள் முனைப்பு காட்டின.

விசேஷ படையினரும் பதிலடியில் ஈடுபட்டனர். புலியணிகளது முற்றுகையை உடைத்து தப்பிச்சென்றனர்.


இச் சண்டையின் பின்னர் விசேஷ அதிரடிப் படையினரின் இரண்டு உடல்களை புலிகள் கைப்பற்றினார்கள். ஆர்.பி.ஜி.01, மற்றும் எல்.எம்.ஜி.01 ஆகியனவும் ரவைகளும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் ஒருவர் பலியானார்.

ஒட்டிசுட்டானில் புலிகளது நிலைகள் பலமாக உள்ளன என்பதையும், சமர் ஒன்றுக்கு தயார் நிலையில் புலிகள் காத்திருக்கின்றனர் என்பதையும் இந்த மோதல் எடுத்துக் காட்டிவிட்டது.

இதனையடுத்து ஒட்டிசுட்டானில் இருந்து நகரும் முடிவை கைவிட்டு, வவுனியா- யாழ் சாலையின் மேற்கே படை நகர்வை ஆரம்பித்தனர்.

ரணகோஷ 3 என்ற பெயரில் இரு முனைகளில் இருந்து இந்த நகர்வு ஆரம்பிக்கப்பட்டது.

எட்டத்தில் நின்று ஷெல்களால் மட்டுமே புலிகள் தாக்குவதாக கூறுவது மூலம் புலியணிகளது சண்டையிடும் ஆற்றலை குறைத்துக் காட்ட நினைக்கின்றனர்.




மன்னாரில் இருந்து ஒரு அணியும், பெரிய மடுப் பகுதியில் இருந்து இன்னொரு அணியும் முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டன.

இதில் பெரியமடுப் பகுதியில் இருந்து முன்னேற முயன்ற படையினரை நோக்கி புலிகளது கிட்டு பீரங்கிப் படையணி முறியடிப்பு தாக்குதலை ஆரம்பித்தது.

ஆட்டிலெறிகள் பயன்படுத்தப்பட்டதாக செய்திகளில் கூறப்பட்டபோதும், புலிகள் ஆட்டிலெறிகளை உபயோகிக்கவில்லை.

மோட்டார்களை ஒன்று குவித்து வைத்திருந்து ஒரே நேரத்தில் இயக்கி ஷெல் மழை பொழிந்தனர்.

மோட்டார் கோணங்கள் துல்லியமாக இருந்தமையால், ஷெல்கள் மிகக் கச்சிதமாக படையணிகள் மத்தியில் வந்து விழுந்து வெடிக்கத் தொடங்கின.

பீரங்கிப் படையணியின் இத் தாக்குதலால் படையினர் நகருவது கடினமாக இருந்தது. பதுங்கு நிலை எடுப்பதும், ஷெல்லடி ஒய்ந்ததும் எழுந்து முன்னேறுவதும் நகர்வு உத்தியாக மேற்கொள்ளப்படுவதுண்டு.

ஆனால் அந்த உத்திக்கே இடமளிக்காத விதமாக இடைவிடாத ஷெல்லடியில் புலிகளது பீரங்கிப் படையணி ஈடுபட்டது.

படை நகர்வை தடுக்க ஷெல் தாக்குதலை மட்டுமே புலிகள் பயன்படுத்தியதாக ஆங்கில பத்திரிகைகள் சிலவற்றில் செய்தி வெளியாகியிருந்தது.

ஆனால் மன்னாரில் இருந்து பள்ளமடு நோக்கி முன்னேறிய படையணிகளை பள்ளமடுவுக்கும் திராட்சிக் குளத்துக்கும் அருகே வைத்து புலியணிகள் வழிமறித்தன.

இப்பகுதியில் கடும் சண்டை மூண்டது. மட்டக்களப்பை சேர்ந்த புலிகளின் அணியே இங்கு படையினரை எதிர்கொண்டு மோதியது.

கருணா அம்மானின் நெறிப்படுத்தலில் இச் சண்டை இடம்பெற்றது. இந்த சண்டையின் பின்னர் படையினர் மன்னாருக்கு திரும்பினார்கள். இதில் படையினருக்கு பெரும் சேதம் ஏற்பட்டதாக தெரிகிறது.

இச் சண்டையில் களத்தில் 7 புலிகள் பலியாகினர். இங்கு காயமடைந்த புலி ஒருவர் பின்னர் பலியானார். கப்டன் விஜய், கப்டன் ஜெயராஜ் உட்பட எட்டுப்புலிகளே பலியானவர்களாவர்.

தேவையான இடத்தில் பீரங்கிப் படையணியை உபயோகிக்கும் அதேவேளை, புலியணிகளும் சண்டைகளில் நேரடியாக ஈடுபட்டுள்ளன.

முன்னரும் 'ஜயசிக்குறுய்' சமரில் புலிகள் பீரங்கித் தாக்குதலை நம்பியே இருப்பதுபோல செய்திகள், விமர்சனங்கள் கூறப்பட்டன.

கிளிநொச்சி சமரின் பின்னர் அந்த கணிப்பீடுகள் பொய்த்தன. பாரிய படை முகாம்களை கைப்பற்றியதோடு, பெரும் நிலப்பரப்பை பிடித்து தம் வசம் வைத்திருக்கும் அளவுக்கு புலிகளது சண்டையிடும் ஆற்றல் வெளிப்பட்டது.

கிளிநொச்சி சமரில் பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டதைவிட, புலியணிகளது களச் சண்டைகளே வெற்றியைத் தீர்மானித்தது. தேவையற்ற ஆள் இழப்பை தவிர்ப்பது, எதிரியை நிலை குலைய வைப்பது போன்றவற்றுக்கு பீரங்கிப் படையணித் தாக்குதல்கள் பேருதவி புரிகின்றன.

புலிகளைவிட அரச படையினர்தான் பீரங்கிப் படையினரையும், கனரக வாகனங்களையும் பெரிதும் நம்பியிருக்கின்றனர்.

ஆட்டிலெறிகள், டாங்கிகள், கவச வாகனங்கள், விமானங்கள் போன்றவை இல்லையானால் வன்னியில் படையினர் நகரவே முடியாதிருக்கும்.

ஆட்பலத்தில் புலிகளைவிட பன்மடங்கு உயர்வான நிலையில் உள்ள படையினரே பீரங்கிப் படையணி, டாங்கிப் படையணி போன்றவற்றை நம்பியிருக்கின்றனர்.

பீரங்கிப் படையின் பலம் இல்லாத போதும் கடந்த காலங்களில் படை நகர்வுகளை புலிகள் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

ஆனால் பீரங்கிகள், டாங்கிகளது உதவிகள் இன்றி படையினர் புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு பிரவேசிக்க முடிந்ததில்லை.

டாங்கிகள், கவச வாகனங்கள் என்பவற்றின் மறைப்போடு முன்னேறும் படையினரை புலிகள் நேராக எதிர்கொள்ள வேண்டுமானால் கவசவாகனப் படையணி புலிகளிடமும் இருக்க வேண்டும். அது இல்லாத குறையை புலிகளது பீரங்கிப் படையணியே தீர்த்து வைக்கிறது.

டாங்கிளுடன் நகரும் படையணிகளை நோக்கியும் புலிகளது பீரங்கிப் படையணி ஏவும் ஷெல்கள் பறந்துவருகின்றன. இதனால் டாங்கி நகர்வுகளும் தடைப்படுகின்றன.

எனவே, வன்னிக் களத்தில் பாரிய பீரங்கிப்படையணிகளுடனும் கவச வாகன அணிகளுடனும் முன் னேறும் படையினருடன் ஒப்பிட்டால் புலிகளது பீரங்கிப் பலம் குறைவானதே. புலிகளைவிட அதிகளவு பீரங்கிப் பலத்தை படையினரே பயன்படுத்துகின்றனர்.

ஆனால், தம்மிடம் உள்ள குறைந்த வளத்தை நிறைந்த பயன்தரும் வகையில் பயன்படுத்துவதில் புலிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

கிட்டுப் பீரங்கிப் படையணிக்கு புலிகளது யாழ் மாவட்ட முன்னாள் தளபதி பானுதான் பொறுப்பாக இருக்கிறார்.

> பாலம்பிட்டியை கைப்பற்றியதாக 23.03.99இல் அறிவிக்கப்பட்டது. மறுபடி 10.05.99இலும் பாலம்பிட்டியை பிடித்ததாக அறிவிக்கப்படுகிறது. எத்தனை பாலம்பிட்டிகள் இருக்கின்றன?

நகர்வுப் பாதைக்கு குறிவைத்து துல்லியமாக தாக்குதல் நடத்துவதில் புலிகளின் பீரங்கிப் படையணி வன்னிச்சமர் மூலம் தேர்ச்சி பெற்றுள்ளது.

பெரியமடுவில் இருந்து நகர்ந்த படையினரில் 200 படையினர்வரை காயமடைந்துள்ளதாக படைத்தரப்பை ஆதாரம் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. 18 படையினர் பலியானதாகவும் படைத்தரப்பு கூறியுள்ளது.

ஆனால் இழப்பு வெளியே கூறப்படுவது போன்று இருப்பதுண்டா? எனவே, ரணகோஷ 3 புலிகளது பாரிய தாக்குதலுடன் பலத்த சேதத்தை சந்தித்துள்ளது.

ரணகோஷ 1, 2 ஆகியவற்றை எதிர்ப்பின்றி அனுமதித்த புலிகள் ரணகோஷ 3 நடவடிக்கைக்கு பதிலடி கொடுத்துள்ளனர்.

பாலம்பிட்டியும் பெரியமடுவில் சில பகுதிகளும் இரு மாதங்கள் முன்னரே ரணகோஷ 02 இன்போது படையினரின் பிடியில் வந்துவிட்டன.

ஆனால் தற்போதுதான் அவற்றை முழுவதுமாக பிடித்தது போல செய்திகளில் கூறப்பட்டுள்ளது.

ரணகோஷ 02 இல் மடுவை கைப்பற்றிய பின்னர் பாலம்பிட்டியை கைப்பற்றி மூன்றுமுறிப்போடு இணைப்பை ஏற்படுத்திமிருந்தனர்.

அதன்போது பெரிய மடுவில் சில பகுதிகளும் படையினர் வசம் சென்றன.

எனவே ரணகோஷ 03 இல் பெரியமடுவின் மேலும் சில பகுதிகள் மட்டுமே படையினரின் கைகளுக்குள் சென்றுள்ளன.

ரணகோஷ 2 இன்போதே இதனை செய்திருக்கலாம். புலிகளது எதிர்ப்பும் அப்போது இருக்கவில்லை.

தென்மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்திற்கும் தேவைப்படும் என்று கருதி பெரிய மடுவில் சில பகுதிகளை பிடிக்காமல் விட்டு வைத்தது போலத் தோன்றுகிறது.

ரணகோஷ 3 இன் முழுமையான திட்டம் பெரிய மடுவில் இருந்தும் மன்னாரில் இருந்தும் முன்னேறி பள்ள மடுவில் இரு அணிகளும் ஒன்று சேருவதுதான்.

ஆனால் அத் திட்டம் புலிகளது தாக்குதலால் நிறைவேறாமல் போய்விட்டது. எனவே பாலம்பிட்டி, பெரியமடு கைப்பற்றலாக செய்திகள் கூறப்பட்டுள்ளன.

பள்ளமடுவையும் கைப்பற்றி பெரியமடுவுடன் இணைப்பை ஏற்படுத்த படையினர் நினைப்பதற்கு இராணுவரீதியான காரணமும் இருக்கிறது.

வவுனியா-யாழ் சாலைக்கு மேற்கே உள்ள இரணை இலுப்பைக் குளம், பொக்காவன்னி, அங்கிருந்து வடமேற்கே உள்ள பாலம்பிட்டி, பெரியமடு போன்றவை படையினர் வசம் உள்ளன. அங்கிருந்து மேற்காக பள்ளமடு உள்ளது.

இந்த ஊர்கள் எல்லாம் மன்னார்-பூநகரி சாலையின் கிழக்குப்புறமாக நேர் வரிசையில் சிறிய சாலையால் தொடுக்கப் பட்ட ஊர்களாகும். (வரைபடத்தை பார்க்கவும்)

பள்ளமடுவில் இருந்து இரணை இலுப்பைக் குளம் வரையான ஐந்து ஊர்களையும் இணைத்தபடி நாயாறு எனப்படும் ஆறு செல்கிறது. இந்த ஆறு வவுனியா-மன்னார் சாலைக்கு சமாந்தரமாக 18 கிலோ மீட்டர் தொலைவாக செல்கிறது.

பள்ளமடுவையும் பெரியமடுவையும் இணைத்து விட்டால் பள்ளமடுமுதல் இரணை இலுப்பைக் குளம் வரை நேராக இராணுவ வேலி அமைத்துவிடலாம்.

இதன்மூலம் 900 சதுரகிலோ மீட்டர் பரப்பளவான நிலப்பரப்பு படையினரது கட்டுப்பாட்டில் வந்துவிடும்.

இதனால் படையினருக்கு என்ன இலாபம்?

1) வவுனியா-மன்னார் சாலையில் புலிகளது ஊடுருவல் கட்டுப்படுத்தப்படும்.
2) மன்னார்-பூநகரி சாலையை கைப்பற்றி நிலைகொள்ளும்போது புலிகளது ஆட்டிலெறி தாக்குதலில் இருந்து தப்பலாம்.
3) மன்னார் தள்ளாடி முகாம் ஆட்டிலெறி தாக்குதலில் இருந்து பாதுகாக்கப்படும்.
4) உயிலங்குளத்திலும், முருங்கனிலும் படைநிலைகள் பாதுகாக்கப்படும்.

இந்த இலாபங்கள் படையினருக்கு ஏற்படாது தடுப்பதற்கே பள்ளமடுவில் பாரிய தரைச்சண்டையையும், பெரியமடுவில் இருந்து படையினரை முன்னேற விடாது பீரங்கித் தாக்குதலையும் புலிகள் தொடுத்தனர்.

இதேவேளை மூன்று முறிப்பில் இருந்து ஒலுமடு நோக்கி படையினர் முன்னேற முயன்றதாக செய்திகள் வெளியாகின அது தவறான செய்தி.

மூன்று முறிப்பு வவுனியா-யாழ் சாலைக்கு மேற்கே உள்ள பகுதி. ஒலுமடு சாலைக்கு கிழக்கே உள்ள பகுதி. பூகோளத்திற்கு மாறாகவும் செய்திகள் வருகின்றன.

ரணகோஷ 03 நகர்வு பாரிய இழப்பை சந்தித்தபோதும், மற்றொடு நகர்வில் ஈடுபடவும் படையினர் முயலலாம்.

தென்மாகாண சபைத் தேர்தலுக்கு ரணகோஷ 03 இன் தற்போதைய விளைவு போதாது என்றால், படை நகர்வுக்கு அரசு உத்தரவிடும். ■

நாரதர்

## அதிரடி அப்பாத்துரை



***ராஜீவ் காந்தி*** கொலை வழக்கின் தீர்ப்பு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சாதகமாக முடிந்திருக்கிறது என்பது யாவரும் அறிந்த சங்கதி. அது மட்டுமல்ல, கொலையில் ரெண்டு எழுத்தாரின் சம்பந்தம் நிருபணமாகவில்லை என்றும் கனம் கோட்டார் அவர்கள் கூறியுள்ளனர். இதெல்லாம் ரெண்டு எழுத்தாருக்கு சந்தோசமான செய்திகள்தானே? ஆனால் சில தமிழ்க் கட்சிகள் தீர்ப்பையும் படிக்காமல், இருண்டது விடிஞ்சது தெரியாமல், தீர்ப்பைப் பாராட்டி 'இது புலிகளுக்கு எதிரான திருப்பம்' என்று பேட்டி கொடுத்த கதை தெரியுமோ? இந்தியப் பத்திரிகை நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு கொழும்பில் இருந்து கொடுத்த பேட்டிதான் அது. பார்த்தியளோ, எதையும் நுனிப் புல் மேய்ந்து திருப்திப்பட்டுக் கொள்ளுவதே இவைக்கு வழக்கமாகப் போச்சது! 26 பேருக்கு தூக்கு முன்பு! 4 பேருக்கு மட்டும் தூக்கு இப்போது! நிலவரங்களைக் கணிப்பிடத்தான் தெரியவில்லை; கணக்கிடக்கூடத் தெரியவில்லையோ?

***வவுனியாவில் இனிமேல்*** இயக்கங்களுடன் கடிதம் மூலமோ, தொலைபேசி மூலமோதான் தொடர்பு கொள்ள வேணும் என்று சனம் கதைக்குதாம். பின்னே என்ன, இயக்கச் சண்டை வந்தால், போட்டுத் தள்ள ஆள் கிடைக்காது போனால், மற்ற இயக்கத்தோடு சும்மா சிரித்துப் பேசியவரைக் கண்டாலும் போட்டி இயக்கத்தினர் மண்டையில் போடுகினமல்லோ! அதனால் எந்த இயக்கத்தோடும் வெளிப்படையாக சிரிப்பதுகூட இனி ஆபத்துதான்!

***கிரிக்கெட் போட்டி*** பார்க்க இங்கிலாந்து செல்ல விசா கேட்போருக்கு தூதரகத்தில் சின்னதாக ஒரு பரீட்சை நடத்தியவை. கிரிக்கெட் பற்றிய கேள்விகளுக்கு பதில் சொல்ல வேணுமாம். கனடா கடவுச் சீட்டு, மலேசியா கடவுச் சீட்டு போன்றவற்றில் தலை மாற்றி பயணம் போறவை நம்ம ஆட்கள். அப்படிப் போகும்போது கடவுச் சீட்டுக்குரிய நாட்டைப் பற்றி ஆதியோடு அந்தமாய் படித்துவிட்டுத்தான் போறவை. அப்படிப்பட்ட கில்லாடிகளுக்கு கிரிக்கெட் பற்றி கேள்வி கேட்டால் ஊதித் தள்ளிவிட சொல்லியோ தரவேணும்?!

***கொழும்பில் யாழ் மத்திய*** கல்லூரி பழைய மாணவர் சங்கம் இராப்போசன விருந்து நடத்தினவை. மத்திய கல்லூரி பழைய மாணவரான சட்டத்தரணி ஒருவர் தன்னுடன் அரசியல்வாதி ஒருவரையும் அழைத்துப் போனாராம். விருந்தில் கலந்துகொண்ட பழைய மாணவர் ஒருவர் அரசியல்வாதியைக் கண்டதும் கோபம் கொப்பளிக்க கேள்விக் கணைகள் தொடுத்தாராம். அரசியல்வாதி கூட்டத்தோடு கூட்டமாக மறைந்து கொள்ள துரத்தித் துரத்தி திட்டினாராம் அந்தப் பழைய மாணவர். அரசியல்வாதி யார் என்றோ கேட்கிறியள்? 'ஞானப்பால் உண்டவர்.'

***கொழும்பு மாளிகாவத்தையில்*** ஏழு முஸ்லிம்கள் சந்தேகத்தில் கைதானதும், சனம் காவல் நிலையத்தை மற்றுகையிட்டதும் தெரிந்த கதை. அதே நாளில்தான் கொழும்பில் இரு இயக்க கடுபாடும் நடந்தது. அதனால்தான் சீருடையினர் கைதுகள், தேடுதல்களில் உடன் அக்கறை காட்டவில்லையாம். அவைக்கே பிரச்சனை. அவை யார் பிரச்சனையைத் தீர்க்கிறது?

***கழகத்தின் பத்திரிகை*** விற்பனை செய்த சிறுவன் ஒருவன் உட்பட நான்கு பேரைத்தான் பழிக்குப் பழி என்று வெட்டியும், சுட்டும் மற்றைய 'இயக்கம்' போட்டுத் தள்ளியிருக்குது.

***"குகனைப் போட்டுவிட்டுத்தான்*** அந்த இயக்கத்தோடு பேசப்போவேன்!" என்று கழக முக்கியஸ்தர் பலரிடம் கூறினவராம். குகனோடு போடப்பட்டவரில் ஒருவர் முன்னர் கழகத்தோடு தொடர்பில் இருந்த வர்த்தகராம். "ரெண்டு எழுத்து அமைப்புக்கு மாற்றான தலைமை உருவாக்குவது நாம்தான்!" என்று கழக மாணிக்கம் பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார். அதனை நிரூபிக்கத்தான் தலைநகரிலேயே டுமீல், டுமீல்!

***அதிகாரத் தரப்பு*** சக்தியானவர் வடக்கு-கிழக்கு முன்னாள் முதல்வருடன் ஒன்றரை மணிநேரம் பேசியிருக்கிறார். முன்னாள் முதல்வருடன் வேறு சகாக்கள் எவரும் செல்லவில்லை. செயலாளரையும் அழைத்து வரவேண்டாம் என்று சக்தியானவர்தான் கூறியிருப்பாராக்கும்! அந்தளவுக்கு அவர்மீது ஒரு அபிப்பிராயம். அடுத்தடுத்து அதிரடியான அரசியல் முயற்சிகளில் குதிக்கப்போகிறாராம் முன்னாள் முதல்வர். எந்த உதவியும் தரத்தயார்; புகுந்து விளையாடுங்கள் என்று அதிகாரத் தரப்பு கூறிவிட்டதாகவும், அவரைக் கைக்குள் போட்டுவிட்டனர் என்றும் அவருக்கு எதிரான வட்டாரம் பத்திரிகையாளர் ஒருவருக்கு கூறியுள்ளதாம். அவரைப் பற்றி நாலு சாத்து சாத்தி எழுதுமாறும் கேட்கப்பட்டதாம். பார்த்தியளோ, ஒரே கட்சிக்குள்ளேயே இத்தனை கழுத்தறுப்பு! இவை இயக்கங்கள் மத்தியில் ஒற்றுமை பற்றிப் பேசுகினம்!

***இவ்வாரப் பொன்மொழி***

> "பிறரைப் பாராட்டுவதிலும் அங்கீகரிப்பதிலும் சிக்கனம் காட்டாதீர்கள்!" ■


படிப்பகம்

www.padippakam.com



## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# ராஜீவ் கொலை வழக்கு

# கருணை மனுவை ஏற்பாரா இந்திய ஜனாதிபதி

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் குற்றச்சாட்டுக்கள் எத்தகைய பலவீன மானவை என்பதை கடந்த சில வாரங்களாக இத் தொடரில் இடம்பெறச் செய்திருந் தோம்.

அவை வெளியாகி முடிவுறும் தறுவாயில் ராஜீவ் கொலை வழக்கில் உச்சநீதிமன்ற தீர்ப்பு 11.05.99 செவ்வாய்க் கிழமையன்று வெளியாகியுள்ளது.

நான்கு பேருக்கு மரண் தண்டனை விதித்ததோடு, மூன்று பேருக்கு ஆயுள் தண்டனை தரப்பட்டுள்ளது. ஏனைய 19 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் 26 பேருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட மரண தண்டனைகளையும், ஆயுள் தண்டனைகளையும் வழங்கிய முன்னைய தீர்ப்பு தள்ளுபடியாகிவிட்டது.

தற்போதைய தீர்ப்புக்கூட குற்றச் சாட்டுக்கள் ஆதாரபூர்வமாக இருந்தமை யால் வழங்கப்பட்ட தீர்ப்பாக கருத இயலாது.

மொத்தம் 26 எதிரிகள்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அவர்களில் முதலாம், இரண்டாம், மூன் றாம் எதிரிகளுக்கும், 18வது எதிரிக்கும் தூக்குத் தண்டனை கொடுத்துள்ளனர்.

அதுபோல 9வது, 10வது 16வது எதிரிகளுக்கே ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

இந்தியாவின் முக்கிய தலை வர்களது படுகொலைகள் தொடர் பாக குற்றம் சாட்டப்பட்டவர் களுக்கு தூக்குத்தண்டனை போன்ற கடும் தண்டனைகள் கொடுப்பதை இந்திய நீதிமன்றங் கள் வழக்கமாகக் கொண்டுள் ளன.

அந்த அடிப்படையில்தான் குறைந்தது நான்கு பேருக்காயி னும் தூக்குத் தண்டனை கொடுக்க உச்ச நீதிமன்றம் நினைத்திருக் கிறது.

ஏற்கனவே 26 பேருக்கும் தூக்குதண்டனை வழங்கப்பட்ட நிலையில், நான்கு பேருக்காவது தூக்குத் தண்டனை கொடுக்காது விட்டால், தீர்ப்பு கடும் விமர் சனத் திற்கு உள்ளாகலாம் என்றுகூட நீதிபதிகள் எண்ணியிருக்கலாம்.

ஆனாலும் 26 பேருக்கும் கடும் தண்டனை கள் முன்னர் விதிக்கப்பட்டதால், உச்ச நீதிமன்ற தீர்ப்பும் முன்னைய தீர்ப்பை தலைகீழாக மாற்றப் போவதில்லை என்றே எதிர்பார்க்கப்பட்டது.


ஆனாலும் எதிர்பாராத வகையில் 19 பேரை தூக்கு தண்டனைகளில் இருந்து உச்ச நீதிமன்றம் விடுவித்துள்ளது.

தமது விருப்பு வெறுப்புப்படி அல்லாது குற்றச்சாட்டுக்கள், சட்ட வாதங்கள் என்ப வற்றையே உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பெரிதும் கவனத்தில் எடுத்து தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

முன்னைய தீர்ப்பை வழங்கிய நவநீதம் தனது விருப்பு வெறுப்புப்படியே தீர்ப்புக் கூறியுள் ளார் என்பதை பலமுறை இதே தொடரில் நாம் குறிப்பிட்டதை வாசகர்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

மூன்று பேருக்கு ஆயுள் தண்டனை வழங் கப்பட்டுள்ளது. அவர்கள் விரைவில் விடுதலை யாக சந்தர்ப்பம் இருக்கிறது. ஏற்கனவே எட்டு ஆண்டுகள் சிறையில் இருந்துவிட்டதால் மேலும் சில ஆண்டுகளில் தண்டனைக் கழிவு களுடன் விடுதலையாகிவிடுவர்.

தூக்குத் தண்டனை தரப்பட்ட நான்கு பேர் விடயத்தில் உச்சநீதிமன்றம் தனது முடிவை மாற்றுமா என்பது கேள்விக் குறியே. ஒருவேளை நளினி விடயத்தில் இரக்கம் காட்டக் கூடும்.



(தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முருகன்)

### கருணைமனு

ஜனாதிபதிக்கு கருணை மனுப் போட்டாலும், அது ஏற் கப்படக்கூடிய சூழல் இருப்ப தாகத் தெரியவில்லை.

இன்றைய இந்திய ஜனாதி பதி நாராயணன் காங்கிரஸ் அனுதாபி.

பாரதிய ஜனதா அரசை கவிழ்ப்பதில் காங்கிரசுக்கு உதவியிருக்கிறார் என்றும், சோனியா காந்தி ஆட்சி அமைக்க போதிய அவகாசம் கொடுத்திருந்தார் என்றும் இந் திய ஜனாதிபதிமீது புகார்கள் கிளம்பியுள்ளன.

இவ்வாறான ஜனாதிபதி காங்கிரஸ் தலைவ ரான ராஜீவ் காந்தியின் கொலையில் தூக்குத் தண்டனை பெற்றவர்களுக்கு கருணை காட்டு வார் என்று எதிர்பார்க்க முடியாது.

சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு இத் தீர்ப்பு பேரிடியாக இருக்கும். காங்கிரஸ் கட்சி வட்டாரங்களும் திருப்தி தெரிவிக்கவில்லை.

இத் தீர்ப்பால் சோனியாவுக்கு அனுதாபம் ஏற்படுமா? என்ற கேள்விக்கே இடமில்லை.

தமிழ் நாட்டில் ராஜீவ் கொலை மறக்கப்பட்ட ஒன்றாக மாறிவிட்டது. ஏனைய பகுதிகளைப் பொறுத்தவரை ராஜீவ் கொல்லப்பட்ட பின்னர் கூட அனுதாப அலை வீசவில்லை. காங்கிரஸ் கட்சி தோல்விதான் கண்டது.

ஏனைய கட்சிகளது உதவியுடன்தான் காங்கிரஸ் ஆட்சியமைத்தது. நரசிம்மராவ் பிரதமராக பதவியேற்றார்.

ராஜீவ் மரணத்தால் அனுதாப அலையடித்து காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்கும் என்று அப்போதும் பலர் எதிர்பார்த்தனர். அப்படி எதுவும் நடக்கவில்லை.

ஆக, தமிழ்நாட்டில் மட்டுமே, கொலை நடைபெற்ற மாநிலம் என்றளவில் அனுதாப அலை வீசியது.

26 தமிழர்களுக்கு தூக்குத் தண்டலை வழங்கப்பட்டது மிகப் பெரிய அநியாயம் என்று தமிழ்நாட்டில் ஈழத் தமிழர் ஆதரவு அமைப்புக் கள் பிரசாரம் செய்து வந்தன.

அப் பிரசாரத்திற்கு ஆதரவு ஏற்பட்ட தோடு, வழக்காடுவதற்கான நிதி திரட்டலுக் கும் வரவேற்புக் கிடைத்திருந்தது.

தமிழர் உயிர்காப்புக் குழு மற்றும் தமிழர் நிதிக் குழு ஆகியவற்றின் புரவலராக இந்திய பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்தான் செயற்பட்டுவருகிறார். பழ நெடுமாறன் உட்பட பல்வேறு தமிழர் அமைப்புக்கள் இக் குழுவில் செயற்பட்டன.

ராஜீவ் கொலை வழக்கில் புலிகள் சம்பந்தப் பட்டுள்ளனர் என்பதற்கு எந்த ஆதாரமும் சமர்பிக்கப்படவில்லை என்று உச்சநீதிமன்றம் கூறி யுள்ளமை தமிழக புலி ஆதரவாளர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது.

ராஜீவ் கொலை இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதச் செயல் அல்ல என்றும் உச்சநீதி மன்றம் தெரிவித்துள்ளது.

### சுவாமிகளுக்கு சிக்கல்

ராஜீவ் கொலை வழக்குத் தீர்ப்பு வெளி யானதும் பாரதிய ஜனதா கட்சி புதிய பிரச்சனை ஒன்றை கிளப்பியுள்ளது.

ராஜீவ் கொலையோடு சந்திராசாமி, சுப்பிரமணியம் சுவாமி ஆகியோருக்குள்ள தொடர்பு பற்றி விசாரிக்க வேண்டும் என்று கூறுகிறது பாரதிய ஜனதா.

ராஜீவ் கொலை பற்றி ஆராய்ந்த ஜெயின் கமிஷன் சந்திராசாமி, சுப்பிர மணியம் சுவாமி ஆகியோர்மீதும் சந்தேகம் தெரிவித்திருந்தது.

இந்த இருவருக்கும் இஸ்ரேலிய உளவு நிறுவனமான மொசாட்டுடனும், மற்றும் புலிகளோடும் உள்ள தொடர்பை ஆராய வேண்டும் என்று ஜெயின் கமிஷன் கூறியிருந்தது.

ஜெயின் கமிஷன் ஏற்படுத்திய குழப்பங் களில் இதுவும் ஒன்று. சுப்பிரமணிய சுவாமியை புலிகள் தம்மிடம் அண்டவே விடுவதில்லை. அரசியல் கோமாளி என்பது தான் அவரது பட்டப் பெயர்.

ஆயுத வியாபாரிகளுடன் தொடர் புடைய சந்திராசாமிக்கும், சுப்பிரமணியம் சுவாமிக்கும் இடையே உறவு இருக்கிறது. இருவரும் மர்ம ஆசாமிகள்.



சுப்பிரமணியம் சுவாமியும், சந்திராசாமியும்

ஆனால் ராஜீவ் கொலைக்கும் அவர் களுக்கும் தொடர்பு எதுவும் கிடையாது. பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியைக் கவிழ்க்க முன்னின்றவர் சுப்பிரமணியம் சுவாமி.

அதனால் சுவாமிக்கு ஒரு குட்டுக் குட்ட ஜெயின் கமிஷனின் அறிக்கையை உபயோகிக்கிறார்கள்.

சிவராசனுக்கு பெங்களூரில் வீடு வாடகைக்கு கொடுத்திருந்தவர் ரங்கநாத். இவருக்கும் முன்னர் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

தற்போது இவரும் விடுதலையாகி இருக்கிறார்.

ராஜீவ் கொலை தொடர்பான சில தகவல்களை கூறப்போவதாக ரங்கநாத் மிரட்டியிருக்கிறார்.

அவரை பயன்படுத்தி காங்கிரஸ் அரசியல்வாதிகளுக்கு சிக்கலை ஏற்படுத் தும் வாக்குமூலங்கள் வெளியிடப்படலாம்.

ரங்கநாத் கூறுவதெல்லாம் உண் மையோ இல்லையோ பெரும் குண்டுகளாக பரபரப்பை ஏற்படுத்தவும்கூடும்.

சிவராசனை என்னிடம் அறிமுகப் படுத்தியவர்கள் யார்? பெங்களூர் இந்திரா நகரில் சிவராசன் முதன் முதலில் யார் வீட்டில் தங்கினார்? போன்ற விபரங்களை வெளியிடுவேன் என்று முன்பே கூறியிருந் தார் ரங்கநாத்.

பெங்களூரில் உள்ள காங்கிரஸ் புள்ளிகள் சிலரை சர்ச்சைக்குள் இழுத்து விடப்போகிறாரோ தெரியவில்லை.

எப்படியோ, ராஜீவ் கொலை வழக்கு பெரும்பாலும் முடிவுக்கு வந்துவிட்டது. நம் தொடரில் ராஜீவ் கொலையும், ராஜீவ் வழக்குத் தீர்ப்பும் ஒரே சமயத்தில் வந்தது தனிச் சிறப்பு.

(தொடர்ந்து வரும்)

## யாருக்கு எவ்வளவு தண்டனை

26 தமிழர்கள்மீதான குற்றச்சாட்டுக்களை குறிப்பிட்டு 28.01.98 அன்று சிறப்பு நீதிமன்ற நீதிபதி நவநீதம் வழங்கிய தண்டனைகள் இவைதான்:

| பெயர் | குற்றச்சாட்டு | தண்டனை |
|---|---|---|
| 1. நளினி | கொலை | மரணதண்டனை |
| | தடா | மரண தண்டனை |
| | | ஆயுள் தண்டனை |
| | சதி திட்டம் | மரண தண்டனை |
| | கடுமையான காயங்கள் ஏற்படுதுதல் | 3 வருடம் ஜெயில் |
| | லேசான காயம் ஏற்படுதுதல் | 1 வருடம் ஜெயில் |
| 2. சின்ன சாந்தன் | சதி திட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 3. முருகன் | சதி திட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| | வயர்லெஸ் சட்டம் | 2 வருடம ஜெயில் |
| 4. சங்கர் | சதி திட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 5. விஜயானந்தன் | சதிதிட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 6. சிவரூபன் | சதி திட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள தண்டனை |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 7. கனகசபாபதி | சதி திட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 8. ஆதிரை | சதி திட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 9. ராபர்ட் பயஸ் | சதி திடடம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| 10. ஜெயக்குமார் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருத்தல் | 2 வருடம் ஜெயில் |
| 11. சாந்தி | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருத்தல் | 2 வருடம் ஜெயில் |
| 12. விஜயன் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வயர்லெஸ் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 13. செல்வலட்சுமி | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வயர்லெஸ் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 14. பாஸ்கரன் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வயர்லெஸ் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 15. சண்முகவடிவேலு | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| 16. ரவிச்சந்திரன் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வெடிபொருள் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| | சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருத்தல் | 2 வருடம் ஜெயில் |
| 17. சுசீந்திரன் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வெடிபொருள் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| | சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருத்தல் | 2 வருடம் ஜெயில் |
| 18. பேரறிவாளன் | சதி | மரண தண்டனை |
| | கொலை | மரண தண்டனை |
| | பலத்த காயம் ஏற்படுத்துதல் | 3 வருடம் ஜெயில் |
| | லேசான காயம் ஏற்படுத்துதல் | 1 வருடம் ஜெயில் |
| | வாயர்லெஸ் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| | பாஸ்போர்ட் சட்டம் | 3 மாத ஜெயில் |
| 19. இரும்பொறை | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | பாஸ்போர்ட் சட்டம் | 3 மாதம் ஜெயில் |
| 20. பாக்கியநாதன் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| 21. பத்மா | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வயர்லெஸ் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 22. சுபா சுந்தரம் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | சாட்சியம், தடயங்களை மறைத்தல் | 2 வருடம் ஜெயில் |
| 23. தனசேகரன் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| 24. ரங்கன் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 25. விக்கி | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 26. ரங்கநாத் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |



படிப்பகம்

www.padippakam.com

# மாணவர் எழுச்சி மற்றுமொரு திருப்பம்

## அலசுவது - இராஜதந்திரி

யாழ் குடாநாட்டில் மாபெரும் மாணவர் எழுச்சியொன்று நடைபெற்றுள்ளது. 11.5.99 அன்று யாழ் குடாநாட்டு மாணவர்கள் பாடசாலைகளை ஒட்டுமொத்தமாக பகிஷ்கரித்தனர்.

யாழ் குடாநாட்டை சூரியக்கதிர் மூலம் படையினர் கைப்பற்றிய பின்னர், படையினருக்கு எதிராக நடைபெற்றுள்ள முதலாவது பாரிய போராட்டமாகவும் இது அமைந்துள்ளது.

கிருஷாந்திமீதான பாலியல் வல்லுறவு, படுகொலை சம்பவத்துக்கு எதிராகவும் மாணவர்கள் போராட்டம் நடைபெற்றிருந்தது.

அன்றிருந்ததைவிட யாழ் குடாநாட்டில் தற்போது படையினர்மீதான அதிருப்திகளும், வெறுப்பும் அதிகரித்துள்ளதின் எடுத்துக் காட்டாகவே சமீபத்திய மாணவர் போராட்டம் அமைந்திருந்தது.

யாழ் குடாநாட்டு மக்களது மனக்குமுறலையும், எதிர்ப்புணர்வையும் எடுத்துக் காட்டும் ஒரு அடையாளமாகவும் இதனைக் கூறமுடியும்.

1971இல் தமிழ் மாணவர்கள் தரப்படுத்தலுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். அந்த எழுச்சியும், கொந்தளிப்புமே தனி ஈழக் கோரிக்கையை கூட்டணியினர் முன்வைப்பதற்கும் தூண்டுகோலாக விளங்கியிருந்தது.

1971 இல் ஏற்பட்ட தமிழ் மாணவர் எழுச்சியே ஆயுதப் போராட்ட எண்ணங்களுக்கும் வித்திட்டிருந்தது.

துரோகிகள் ஒழிப்பு என்பதை முதலில் தமிழ் மாணவர் பேரவையினரே ஆரம்பித்து வைத்தனர்.

அப்போது மாணவர்கள் எழுச்சியை கூட்டணியினர் தமது அரசியலுக்கு பயன்படுத்திக் கொண்டனர்.

ஆனால் 1980களில் மற்றுமொரு மாணவா எழுச்சி ஏற்பட்டது. இதில் ஈழமாணவர் பொதுமன்றம் (G.U.E.S.) முக்கிய பாத்திரம் வகித்திருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அரசியல் ரீதியில் பெரும் சவாலாக முதலில் உருவெடுத்த அமைப்பு ஈழமாணவர் பொது மன்றமேயாகும்.

1981ம் ஆண்டு யாழ் திறந்த வெளி அரங்கில் மாணவர் ஒன்றியம் என்ற பெயரில் ஈழமாணவர் பொதுமன்றம் நடத்திய பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் 95 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர். மு.டேவிற்சன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றிருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியை அரசியல் ரீதியாக நிராகரிக்குமாறு இக்கூட்டத்தில் ஈழமாணவர் பொதுமன்றத்தை சேர்ந்த ரமேஷ் உரையாற்றினார்.

இக் கூட்டத்தை அடுத்தே ஈழமாணவர் பொதுமன்றம்மீது கூட்டணி செயலதிபர் அமிர்தலிங்கம் காட்டமான கண்டனங்களை தொடுக்க ஆரம்பித்தார்.

இக் காலகட்டத்தில் இராசநாயகம் தலைமையில் செயற்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவர் அவையும் கூட்டணிக்கு எதிரான அரசியல் நிலைப்பாடுகளை முன்னெடுத்தது.

அமிர்தலிங்கம் போன்றோரின் கொடும்பாவிகள் யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் எரிக்கப்பட்டன. 'குற்றவாளிக் கூண்டில் கூட்டணி' போன்ற பட்டிமன்றங்களும் யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அப்போதிருந்த பலமான தளங்களை அரசியல் ரீதியாக பலவீனமாக்குவதில் இத்தகைய மாணவர் அமைப்புக்களது நடவடிக்கைகளே முதலில் முக்கிய பாத்திரம் வகித்தன.

1980 களில் வடக்கு-கிழக்கில் நிலவிய சூழலும் இன்று வடக்கு-கிழக்கில் நிலவும் சூழலும் பெரும்பாலும் ஒத்திருக்க காணப்படுகிறது.

1977 பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கில் கூட்டணியே பெரும் வெற்றியீட்டியிருந்தது. வடபகுதியில் சகல ஆசனங்களையும் கூட்டணியே கைப்பற்றியிருந்தது.

ஆயினும் ஐ.தே.கட்சி ஆட்சியாளர்களும், ஜே.ஆரும் கூட்டணியினரை ஆட்டமிழக்கச் செய்யும் விதமாக கச்சிதமாக பந்து வீசினார்கள்.

அமிர்தலிங்கத்தின் பாதுகாப்பில் தனக்கு அதிக அக்கறை இருப்பதுபோல ஜே.ஆர். காட்டிய கரிசனை, அமிர்தலிங்கத்தைக்கூட ஆட்டமிழக்கச் செய்திருந்தது.

'ஜே.ஆர். நல்லவர், வல்லவர்' என்று அமிர்தலிங்கம் புகழ்ந்துரைத்திருந்தார். 'ஜே.ஆர். அவர்கள் இனப்பிரச்சனையை தீர்த்து வைப்பாரேயானால் அவருக்கு தமிழ் மக்கள் சிலை வைப்பார்கள்' என்று அமிர்தலிங்கம் அவர்கள் கூறியிருந்தார்.

தமிழர் தளபதி என்று அழைக்கப்பட்ட தலைவரையே வளைத்துப் போட்டுவிட்டு, அவரது தலைக்கு மேலாக இன ஒடுக்குமுறைகளை கச்சிதமாக மேற்கொள்ளும் அதி புத்திசாலியாக ஜே.ஆர். விளங்கியிருந்தார்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனேயால் இனப்பிரச்சனையை தீர்க்க முடியாது என்பதையோ, இராணுவ ஒடுக்குமுறைகள் ஊடாக தமிழ் பேசும் தரப்பை மண்டியிட வைக்க அவர் முனைப்புக் காட்டியதையோ கூட்டணியினர் அறியாதவர்களல்ல. அந்தளவு குறைவாக அவர்களது அரசியல் அனுபவத்தை மதிப்பிடலாகாது.

ஆயுதப் போராட்ட அமைப்புக்களது வளர்ச்சியும், கூட்டணித் தலைமையை அவர்கள் கேள்விக்குள்ளாக்கியதும் கூட்டணியினரை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருந்தது.

இந்தப் போக்கு தொடருமானால் தமது பாராளுமன்ற அரசியலுக்கு ஆபத்து ஏற்படும் என்று அச்சமடைந்தனர்.

அரசை எதிர்த்து போராட்டங்கள் நடத்துவதும், மக்களிடையே எதிர்ப்பை வளர்ப்பதும் ஆயுதப் போராட்ட இயக்கங்களுக்கு சாதகமாகவும், தமக்குப் பாதகமாகவும் அமையும் என்று கலக்கமடைந்தனர்.

எனவேதான் மக்களது எதிர்ப்புணர்வை படிப்படியாக தணித்து, தமது பாராளுமன்ற அரசியலுக்கு ஏற்ற சூழல் ஒன்றை உருவாக்க முனைந்தனர்.

ஆனால் தமிழ் பேசும் மக்களை இரண்டாம்தர பிரஜைகளாக்குவதிலும், தமிழ் பேசும் தரப்பின் போராட்டத்தை ஒடுக்குவதிலும் ஆட்சியாளர்கள் காண்பித்த அக்கறையும், வேகமும் கூட்டணியினரின் தந்திரத்தை தவிடுபொடியாக்கின.

கைதுகள், சித்திரவதைகள், கடத்திச் சென்று கொலை செய்து வீசுதல் போன்ற நடவடிக்கைகள் பரவலாகிக் கொண்டிருந்தன.

கூட்டணியினர் இவற்றை எதிர்க்கத் துணியாதபோது, பல்கலைக்கழக மாணவர் பேரவை, ஈழமாணவர் பொதுமன்றம் போன்றவை வெகுஜனப் போராட்டங்களை நடத்த ஆரம்பித்தன.

இதுதவிர மதகுருமார்கள், புத்திஜீவிகள் ஆகியோர் வடக்கில் கைதானபோது மக்கள் தாமாகவே உண்ணாவிரதங்கள், ஊர்வலங்கள் என்பவற்றை நடத்த ஆரம்பித்தனர்.

கூட்டணித் தலைமை மக்களின் முன்னால் நின்று வழிநடத்தும் சக்தியை இழந்தபோது, மக்கள் தன்னிச்சையாகவே போராட ஆரம்பித்தனர். தமக்காக போராடும் மாணவர்களுக்கு ஆதரவும் காட்டினார்கள்.

ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் படையினரைத் தாக்கியபோது மக்களுக்கு புது நம்பிக்கை ஏற்பட ஆரம்பித்தது.



வன்னியில் மாணவர்கள் போராட்டம்

தாம் அநியாயமாக பாதிக்கப்படுகிறோம் என்று மக்கள் உணரும்போது, பதிலடி கொடுக்கும் ஆவேசமும் மக்களிடையே தோன்றியே தீரும்.

தம்மால் பதிலடி கொடுக்க முடியாதபோது, பதிலடியில் ஈடுபடும் ஆயுதப் போராட்ட அமைப்புகளுக்கு மக்கள் ஆதரவளிக்க முன்வருகின்றனர். இதுதான் உலகில் எங்கும் காணப்படும் பொது நிகழ்வாகும்.

எனவே 1980களில் கூட்டணியினரால் கை கழுவிவிடப்பட்ட மக்களது பிரச்சனைகளை மாணவர் அமைப்புக்கள் கையில் எடுத்திருந்தன. அடக்குமுறைகளுக்கு எதிராக போராட முன்வந்திருந்தன. அப்போராட்டங்கள் ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் எழுச்சிகளுக்கும் சாதகமாக அமைந்திருந்தன.

தற்போதும் அதே நிலைதான் யாழ் குடாநாட்டில் நிலவுகிறது. சூரியக் கதிரின் பின்னர் யாழ் குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்டது.

அதன்பின்னர் யாழ் குடாநாட்டில் செயற்பட ஆரம்பித்த தமிழ்க் கட்சிகள் அங்குள்ள மக்களை தமது பாராளுமன்ற அரசியலுக்கு தோதாக பதப்படுத்தவே முயன்றன.

எந்த ஒரு போராட்டத்திலும் வெற்றி தோல்வி என்பது சகஜமானதே. எனினும் தோல்வி ஏற்படும்போதும், புதிய நெருக்கடிகளின்போதும் மக்களில் ஒரு பகுதியினர் விரக்தியுறுவதும், நம்பிக்கை இழப்பதும் இயல்பானதேயாகும். ஆனால் இது தற்காலிகமான ஒன்றேயாகும்.

தோல்விக்குப் பின்னரும் தொடரும் போராட்டங்களும், ஆட்சியாளரின் அடக்குமுறைகளும் போராட்டம் தவிர்க்கமுடியாதது என்ற நம்பிக்கையை மறுபடி உருவாக்கவே செய்யும். இனப்பிரச்சனை சார்ந்த விடயத்தில், அப் பிரச்சனை தீரும்வரை அரசுக்கும், இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் மக்களுக்கும் இடையே பகை முரண்பாடு நிலவிக்கொண்டிருப்பது தவிர்க்க முடியாதது.

பெரும்பான்மை இனத்தின் வாக்கு வங்கிகளை நம்பியிருக்கும் அரசினால், பெரும்பான்மை இனத்தினரைக் கொண்ட துருப்புக்களை பயன்படுத்தி இராணுவத்தீர்வு முயற்சி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எனவே, இன முரண்பாடு மேலும் தீவிரமடைவதும், அரசுக்கும், தமிழ்பேசும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடைவதும் தவிர்க்க முடியாததாகும்.

இந்த உண்மைகளுக்கு புறம்பாக, தங்கள் சொந்த ஆசைகளின் அடிப்படையில் நிகழ்ச்சிப்போக்குகளை மாற்றிவிடலாம் என்று தமிழ்க் கட்சிகள் கற்பனை உலகில் அமிழ்ந்து போயுள்ளன.

மக்களது விரக்திகளை ஊக்கப்படுத்தி, போராட்டங்கள்மீது நம்பிக்கை இழக்கச் செய்வதன் மூலமே, தமது புரோக்கர் அரசியலுக்கு ஆதரவு கிட்டும் என்று இக் கட்சிகள் கருதியுள்ளன.

இதன் காரணமாகவே மக்கள் போராட தலைப்படும்போதும், அரசு வாக்குறுதி வழங்கியிருப்பதாகக் கூறி, அந்த எழுச்சிகளை மழுங்கடிப்பதிலும் தமிழ்க் கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன.

யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் விடயத்திலும், செம்மணி புதைகுழி விவகாரத்திலும் அரசின் சார்பாக வாக்குறுதிகளைக் கூறி அப்பிரச்சனைகளை தணித்ததும் தமிழ்க் கட்சிகளே.

யாழ் குடாநாட்டில் மறுபடி எழுச்சியோ, போராட்ட குணமோ தலையெடுக்கக்கூடாது என்பதில் படையினருக்கு உள்ள அதே அக்கறை தமிழ்க் கட்சிகளுக்கும் இருக்கிறது.

எனவேதான், புலிகள் என்ற சந்தேகத்தில் கைதாகும் அப்பாவிகள் குறித்தோ, குடாநாட்டில் இறுகிவரும் கெடுபிடிகள் குறித்தோ இக் கட்சிகள் துளியும் அக்கறை காண்பிக்காதுள்ளன.

பத்து வயது சிறுவனுக்கு பாஸ் வழங்கும் நடைமுறையை எந்தவொரு தமிழ்க் கட்சியும் எதிர்க்க முன்வரவில்லை.

ஏனெனில், பத்து வயதுச் சிறுவனிடம் இக் கட்சிகளுக்கும் அச்சம் ஏற்பட்டுள்ளது. அதனால் அவர்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது இக் கட்சிகளுக்கும் உடன்பாடானதாக இருக்கிறது. மடியிலே கனம் உள்ளதால் இக் கட்சிகளுக்கு மக்கள்மீதும் பயம் தோன்றியுள்ளது.

எனவே, படையினர் நன்றாக தேடுதல் நடத்தி கைது செய்ய வேண்டியவர்களை கைது செய்தால் தமக்கும் பிரச்சனை இருக்காது என்பதே இக் கட்சிகளது இன்றைய விருப்பமாகும்.

1980இல் கூட்டணியினர் என்ன செய்தனரோ, என்ன நினைத்தனரோ, அதையேதான் இத் தமிழ்க் கட்சிகளும் இன்று செய்கின்றன. நினைக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிக்காவிடம் தாம் பேசினால் எல்லாம் நடந்துவிடும் என்பது போன்று மக்களை ஏமாற்றவதுடன், அரசும், எதிர்க்கட்சியும் இணக்கம் கண்டு தீர்வைக் காண்பார்கள் என்று உலகப் பொய்களையும் கூறிவருகின்றன.

இவ்வாறு கூறினால்தான் மக்கள் எதிர்ப்புணர்வு கொள்ளாது எதிர்ப்பார்ப்புடன் இருப்பார்கள். தமது சரணடைவு அரசியலை இனம் காணமாட்டார்கள் என்று கருதியே அவ்வாறு கூறிவருகின்றன.

ஆனால், இக் கட்சிகளது தந்திரங்கள் தோல்வி காணத் தொடங்கிவிட்டன. இவர்களது இயலாமை அம்பலமாகிவருகிறது.

யாழ் குடாநாட்டில் மூன்று மாணவர்கள் கைதானார்கள். அவர்களை விடுவிக்குமாறு கோரியபோது படையினர் அலட்சியம் செய்தனர்.

பின்னர் பல்கலைக்கழக மாணவர்கள் போராடத் தலைப்பட்டபோதே, அம்மாணவர்கள் இருவரும் விடுதலையானார்கள்.

அதன்பின்னர் பாடசாலை மாணவன் சிவரூபனை விடுதலை செய்யுமாறு ஆசிரியர்கள் மன்றாடிக் கேட்டிருந்தனர். படையினர் அக் கோரிக்கையை அலட்சியம் செய்ததுடன், அம் மாணவர் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதையும் கூறமறுத்திருந்தனர்.

இறுதியில் பாடசாலைகளை பகிஷ்கரித்து மாணவர்கள் போராட்டத்தில் குதித்த பின்னரே சிவரூபன் விடுதலையானார்.

இந்த நடவடிக்கைகள் எவற்றிலும் தமிழ்க் கட்சிகள் தலையிடவில்லை. அநியாயக் கைதுகளை எதிர்த்து போராடிய மாணவர்களுக்கு ஆதரவு தரக்கூட முன்வந்திருக்கவில்லை.

இந்நிலையில் மாணவர் போராட்டம் வெற்றியளித்தமையானது தமிழ்க் கட்சிகளது முகங்களில் கரிபூசியதாகவும் அமைந்துள்ளது.

மக்கள் போராடத் தயாரில்லை என்று இக் கட்சிகள் சில கூறிய காரணங்களையும் அம்பலமாக்கியுள்ளது.

மக்கள் தத்தமது பிரச்சனைகளுக்கு போராடத் தயாராகவே உள்ளனர். அவர்களை வழி நடத்தவோ, அரசை எதிர்க்கவோ இக் கட்சிகள் தயாராக இல்லை என்பதே உண்மையாகும்.

எனவே இக் கட்சிகளை தமிழ் மக்கள் நிராகரிக்க தொடங்கியுள்ளனர். அதன் ஆரம்பம்தான் மாணவர்கள் தாமாக நடத்திய போராட்டமாகும். இப் போராட்டம் யாழ் குடாநாட்டில் தம்மை தூக்கி எறிவதில் சென்று முடியலாம் என்று தமிழ்க் கட்சிகள் கலக்கமுற்றுள்ளன.

இன்னொன்றையும் குறிப்பிட்டாக வேண்டும், 1977, 1980ம் ஆண்டுகளில் மாணவர்கள் போராடக்கூடிய சூழல் இருந்தது. ஆனால் தற்போது யாழ் குடாநாடு முற்று முழுதாக படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

காவலரண்கள், கண்காணிப்புக்கள், பகிஸ்கரிப்பில் ஈடுபடாமல் தடுக்கும் அச்சுறுத்தல்கள் என்று பல்வேறு நெருக்கடிகள் மத்தியிலும், எந்த அமைப்பு பலமும் இன்றி, வெற்றிகரமான பாடசாலை பகிஷ்கரிப்பை யாழ் மாணவர்கள் நடத்திக் காட்டியிருப்பது முன்னைய மாணவர் போராட்டங்களைவிட உயர்ந்த நிகழ்வேயாகும்.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

### விக்கெட்டடைச் சாய்க்காத பந்து!

'படையில் சேர தமிழ் இளைஞர்கள் யாரும் முன்வரவில்லை!' என்பது தற்போதைய செய்தி.

இதனை நம்பி, 'ஆஹா தமிழர்கள் யாரும் படையில் சேரவில்லையாமே' என்று புல்லரித்தால், முட்டாள்களாகிவிடுவீர்கள்.

உண்மையாகவே தமிழ் இளைஞர்களை படையில் சேர்க்க நினைத்தால் நாடெங்கும் குறைந்தது நூறு பேர்கூட சேரமாட்டார்களா? குடாநாட்டில் பத்துப்பேர்கூட கிடைக்க மாட்டார்களா?

படையுடன் இணைந்து செயற்படும் இயக்கங்களில் ஆட்கள் இருக்கும்போது, படையுடன் சேர மட்டும் எவரும் முன்வரவில்லை என்பது அமோகமான தமாசு.

படையில் தமிழ் இளைஞர்களை சேர்க்க ஆர்வம் காட்டுவதுபோல ஒரு பாவனை நடந்து கொண்டிருக்கிறது. துண்டுப்பிரசுரம் கொடுத்திருக்கிறோம். சுவரொட்டி ஒட்டியிருக்கிறோம். படையில் சேர்ப்பதில் உண்மையாக அக்கறை காட்டுகிறோம் என்று ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவை செய்திகளாக வரும்போது தமது தந்திரத்தை எண்ணி சம்பந்தப்பட்டவர்கள் கொடுப்புக்குள் சிரிக்கிறார்கள்.

'கொசோவோ' பிரச்சனைக்குப் பின்னர்



இலங்கை அரச தரப்பு கடுமையாக யோசிக்க ஆரம்பித்துள்ளது.

தாம் இனவாத அரசல்ல, படைகள் பல்லினப் படைகள்தான் என்று நம்ப வைக்கும் பிரசார உத்திகளில் படையில் தமிழ் இளைஞர்களை சேர்க்கும் திட்டம் பற்றிய ஆரவாரமும் அடக்கம்.

மட்டக்களப்பில் ராசிக் குழுவைக் கூட தனி ஒரு பிரிவாக வைத்துத்தான் பயன்படுத்துகின்றனர். படைகளோடு கலக்க விடவில்லை. அந்தளவுக்கு முன் ஜாக்கிரதை. இந்நிலையில் படைக்குள் தமிழ் இளைஞர்களை அதுவும் வடக்கு கிழக்கு இளைஞர்களை இணைக்கத் துணிவர் என்பது நம்பக்கூடிய கதையல்ல.

தமிழ் மக்கள் மத்தியில் படைக்கு சேர தயாராக உள்ளோர் இல்லாமலில்லை. படைக்கு தகவல் கொடுக்க ஆளிருக்கிறார்கள். படையோடு புலி வேட்டைக்கு செல்லும் தமிழ் இயக்கங்களது உறுப்பினர்கள் உள்ளனர். கூலியும் பெறுகின்றனர்.

எனவே படையில் சேர தமிழ் இளைஞர்கள் தயாரில்லை என்பது புல்லரிக்க வைக்கும் சமாச்சாரமல்ல. நம் காதில் பூவைக்கப்படும் சமாச்சாரம்.

அதெல்லாம் இருக்கட்டும், தமிழர்களை படையில் சேர்ப்பதானால் வடக்கு-கிழக்கில் மட்டும் ஆரவாரம் செய்வானேன்? தென்னிலங்கையிலும் மலையகத்திலும் ஏன் முயலவில்லை? நாடகத்தில் தம்மையறியாது செய்த தவறு இது.

•••

சர்வதேச அரங்கில் தமிழ் பேசும் தரப்பை ஓரம்கட்ட எத்தனையோ முயற்சிகள் நடந்து வருகின்றன. இது பற்றி 'முரசு' பல உதாரணங்களை கூறியுள்ளது.

இன்னொரு உதாரணம். 'அவுஸ்திரேலிய நடுவருக்கு புலிகள் மிரட்டல்' என்று வெளியான செய்தி.

அவுஸ்திரேலியாவில் இலங்கை கிரிக்கெட் அணிமீது கடும் வெறுப்பு. சமீபத்தில்கூட அவுஸ்திரேலிய அணி வீரர்கள் இலங்கை அணி தலைவரை காரசாரமாக வசைபாடியுள்ளனர்.

கிரிக்கெட் பிரச்சனையால் ஏற்பட்ட இந்த விரிசலை புலிகள் பயன்படுத்தி விடுவார்களோ என்று இலங்கை வெளிநாட்டமைச்சு அஞ்சுகிறது.

இதன் பின்னணியில் நோக்கும்போது, புலிகளோடும் அவுஸ்திரேலிய ரசிகர்களை பகைக்க வைக்கும் தந்திரமாக இது இருக்கலாம்.

அது தவிர, உலகக் கிண்ணப் போட்டியில் உலகின் மொத்தக் கவனமும் திரும்பியுள்ளது. இதற்கு இடையூறு செய்யும் குழுவாக புலிகளை சித்தரித்தால், உலகெங்கும் புலிகளுக்கு அபகீர்த்தி எற்படும். பயங்கரவாத அமைப்பை தடை செய்யுமாறு இலங்கை அரசு கோருவதற்கு ஆதரவு கிட்டும். இப்படியொரு தந்திரமும் விளையாடி இருக்கிறது.

ஆனால், உடனடியாக வெளியான மறுப்புக்கள், இத் தந்திரத்தை முறித்துப் போட்டுவிட்டன.

சர்வதேச அரங்கில் தமிழ்பேசும் தரப்பை நோக்கி வீசப்பட்ட பந்தொன்று விக்கெட்டை சாய்க்காது விரயமாகிவிட்டது. இன்னமும் பந்துகள் வைத்திருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 62

**கடந்தவாரம்**

**பெண் மந்திரவாதி**
**தனது பணியாளன் ஒருவனுடன்**
**காமக்களியாட்டத்தில் ஈடுபடுவதை**
**அமீன் நேரடியாகக் காண்கிறான்.**
**மந்திரவாதியையும் அவளது**
**உதவியாளர்களையும்**
**மாளிகையில் வைத்துப் பூட்டி**
**தீ வைக்கிறான்.**
**தீ விபத்தில் பலி என்று**
**அவர்கள் கதை முடிகிறது.**

**இனி...**

# இடி அமீன்

**நா**ட்டின் பொருளாதார நிலை நலிவடைந்துள்ள நிலையில், அமீன் போயிங் விமானம் வாங்குவதற்கு முடிவு செய்திருந்தது சியம்பாவுக்கு எரிச்சலாக இருந்தது.

ரோம் நகரம் பற்றி எரிந்தபோது பிடில் வாசித்த மன்னனையும் அமீன் மிஞ்சிக் கொண்டிருக்கிறானே என்றுதான் சியம்பாவுக்குள் எண்ணம் உதித்தது.

போயிங் விமான விற்பனை முகவரான ஸிக்லருக்கும், அமீனுக்கும் இடையே சியம்பாதான் மொழி பெயர்ப்பாளராக செயற்பட்டார்.

இரண்டு மாதங்களுக்குள் விமானத்தை கொண்டு வந்து சேர்ப்பதாக ஸிக்லர் உத்தரவாதம் கொடுத்தார்.

ஸிக்லர் சென்ற பின்னர் சியம்பாவும் தனது அமைச்சின் அலுவலகத்திற்கு புறப்பட ஆயத்தமானார்.

அப்போதுதான் அமீனின் உதவியாளர் ஒருவர் அமீனிடம் வந்தார். அந்த உதவியாளருக்கு அமீன் கூறிய வேலையைக் கேட்டதும் சியம்பாவுக்கு பற்றிக்கொண்டு வந்தது. இப்படியும் ஒரு ஜனாதிபதியா? என்று வெறுப்பாக இருந்தது.

அதனையெல்லாம் உணராத அமீன், பிரீஃப் கேசை எடுத்து திறந்தான்.

அதற்குள் இருந்து ஒரு கத்தை அமெரிக்க டொலர்களை எடுத்து அந்த உதவியாளரிடம் கொடுத்தான்.

"விரைவாகத் திரும்பி வந்துசேர். இல்லையானால் என்னை அவள் தின்று விடுவாள்" என்று இடிச்சிரிப்பை உதிர்த்தபடி சியம்பாவைப் பார்த்து கண்ணடித்தான்.

"மிஸ்டர் சியம்பா! என் குடும்பங்களுக்கு சில பொருட்களை வாங்க இவன் இலண்டன் போகிறான்.



உமக்கு ஏதாவது தேவையாக இருந்தால் சொல்லும். வாங்கிவரச் சொல்கிறேன்" என்றான்.

உள்ளே எழுந்த சினத்தை கட்டாயமாக மறைத்துக் கொண்டு: "நன்றி, எனக்கு எதுவும் தேவையில்லை" என்றார் சியம்பா.

எப்படியாவது தன் கருத்தை அமீனிடம் கூறிவிடவேண்டும் என்று அசட்டுத் துணிச்சல் வந்துவிட்டது சியம்பாவுக்கு.

உதவியாளர் விடைபெற்றுச் சென்றதும், "நாடு இன்றிருக்கும் நிலையில் இவையெல்லாம் தேவைதானா? என்று தாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். போயிங் விமானம் ஏற்கனவே ஒன்று எம்மிடம் இருக்கிறது!" என்றார் சியம்பா.

அமீன் தன் குடும்பத்திற்கு பொருட்கள் வாங்குவதற்கு இலண்டனுக்கு ஆள் அனுப்புவது பற்றி சியம்பா எதுவும் கூறவில்லை.

தனிப்பட்ட விவகாரத்தில் கருத்துக் கூறினால் அமீன் கோபப்படக்கூடும் என்பதால், அது பற்றிய தனது அதிருப்தியை சியம்பா வெளிக்காட்டவில்லை.

போயிங் விமானக் கொள்வனவு பற்றி சியம்பா கூறியதைக் கேட்ட அமீன், சிறிது நேரம் யோசித்தான்.

"உமது துணிச்சல் எனக்குப் பிடித்திருக்கிறது. என்னோடு வேறு யாரும் இப்படி பேச மாட்டார்கள். ஆனால் உமது கருத்து எனக்கும் பிடிக்கவில்லை. நாட்டின் பாதுகாப்புக்காகத்தான் போயிங் வாங்குகிறேன். நான் பயணம் செல்லவா வாங்குகிறேன்? பாதுகாப்புக்காக செலவு செய்வது தவிர்க்கமுடியாதது!" என்றான்.

அசட்டுத் துணிச்சலில் தனது அப்பிராயத்தை முதலில் கூறிய சியம்பா, அமீன் பதில் கூறும்போது தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

வம்பை விலை கொடுத்து வாங்குவானேன்?! என்று மனதை மாற்றிக்கொண்டார்.

அமீனது பதில் தனக்கு திருப்தியளித்தது போல மௌனமாக இருந்துவிட்டார்.

"ஏன் மௌனமாகிவிட்டீர்? நான் கூறியது பிடிக்கவில்லையா?" என்றான் அமீன்.

"இல்லையில்லை, நீங்கள் கூறுவதிலும் அர்த்தம் இருக்கிறது" என்று அப்பட்டமாகப் பொய் சொன்னார் சியம்பா.

உலகின் மிகக் கொடிய சர்வாதிகாரி முன்பு தான் அமர்ந்திருக்கிறோம், இங்கு அபிப்பிராயங்களைவிட அடங்கிபோவதே புத்திசாலித்தனம் என்று சியம்பா தீர்மானித்துவிட்டார். தான் அவசரப்பட்டு அப்பிப்பிராயம் சொன்னதற்காக வருத்தப்பட்டுக் கொண்டார்.

சியம்பாவின் பதிலில் உண்மையில்லை என்பதை அமீன் புரிந்து கொண்டான். அப்படிப் புரிந்துகொண்ட நொடியில் சியம்பாமீது சந்தேகமும் அவன் மனதில் உதித்தது.

சிரித்தபடியே சியம்பாவுக்கு விடை கொடுத்தனுப்பிய அமீன், தனது மேசையில் இருந்த சிவப்பு நிற தொலைபேசியை சுழற்றினான்.

புலனாய்வுப் பிரிவுடன் நேரடி தொடர்புக்கு அந்தத் தொலைபேசியைத்தான் அமீன் உபயோகப்படுத்துவான்.

மறுமுனையில் பவ்வியமாக வணக்கம் சொன்ன புலனாய்வுப் பிரிவின் பொறுப்பாளரிடம் அமீன்: "கலாசார அமைச்சர் சியம்பாமீது ஒரு கண் இருக்கட்டும். அவரது தொலைபேசிகளிலும் காதை வைத்திருக்க வேண்டும். 24 மணிநேரமும் கண்காணிப்பில் இருக்க வேண்டும், அவரும் அவரது குடும்பமும்!"

அமீனின் உத்தரவின்படி சியம்பா கடும் கண்காணிப்புக்கு உள்ளானார். சியம்பாவுக்கும் தன்னை கண்காணிக்கிறார்கள் என்பது ஓரளவு புரிந்துவிட்டது.

இடி அமீனுடன் தொடர்பு கொண்ட சியம்பா: "எனக்குப் பயமாக இருக்கிறது!" என்றார்.

"எனது அமைச்சர் நீங்கள்! உங்களுக்கே பயமா?" என்று சிரித்தவன், "நான் இருக்க பயம் எதற்கு?" என்றான்.

"சந்தேகத்துக்குரிய சிலர் என்னை பின் தொடர்கின்றனர். என் உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்று பயமாக இருக்கிறது!" என்றார்.

"உங்கள் உயிருக்கு யார் குறிவைக்கப் போகிறார்கள். உங்களுக்குத்தான் எதிரிகளே கிடையாதே" என்ற அமீன்: "எதற்கும் இப்போதே உங்களுக்கு பாதுகாப்பை அதிகரிக்க உத்தரவிடுகிறேன். அஞ்சாது இருங்கள்" என்றான்.

உடனடியாக புலனாய்வுப்பிரிவுப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்ட அமீன்: "எந்த வேசி மக்களை சியம்பாவை கண்காணிக்க அனுப்பினாய்?" என்றான்.

**தருவது**
**ரசிகன்**

புலனாய்வுப் புரிவுப் பொறுப்பாளர் அதிர்ந்து போய்; "தாங்கள்தானே கண்காணிக்குமாறு உத்தரவிட்டீர்கள்" என்று தயங்கித் தயங்கி பவ்வியமாகக் கூறினான்.

"நீ புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பாக இருப்பதைவிட... பிடுங்கிக் கொண்டிருக்கலாம்" என்று கத்திய அமீன், "நாம் கண்காணிக்கிறோம் என்பதை சியம்பா கண்டுபிடித்துவிட்டார். நாம்தான் கண்காணிக்கிறோம் என்று தான் அறியாததுபோல என்னிடமே புகார் கூறுகிறார். இதுதான் உங்கள் புலனாய்வுத் துறையின் இலட்சணமா?" என்றான். மறுமுனை மௌனம் சாதித்தது.

"இனி அந்த முட்டாள்களை அனுப்ப வேண்டாம். பாதுகாப்பை அதிகப்படுத்துவதாக கூறியிருக்கிறேன். பாதுகாப்புப் பிரிவு போல உனது ஆட்களை சீருடை அணிவித்து அனுப்பிவை!" என்று உத்தரவிட்டான்.

பாதுகாப்பு என்ற போர்வையில் பெரும் வலை ஒன்றை விரித்துவிட்டான் அமீன் என்று சியம்பா உணர்ந்து கொண்டார்.

கலாசார அமைச்சுக்கு அலுவல் ஒன்றின் நிமித்தமாக இராணுவ அதிகாரி ஒருவர் வந்திருந்தார். அவர்தான் முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பிரிவுக்கு பொறுப்பானவர். சியம்பாவுக்கு நன்கு அறிமுகமானவர்.

"உங்களுக்கு நான் நன்றி கூறவேண்டும்" என்றார் சியம்பா. "எதற்கு?" என்று புருவம் உயர்த்தினார் அதிகாரி.

"என் பாதுகாப்புக்கு உங்கள் ஆட்களை அனுப்பியதற்கு" என்ற சியம்பாவை, ஆச்சரியமாக நோக்கிய அதிகாரி; "நான் யாரையும் அனுப்பி வைக்கவில்லையே, தவிரவும், உங்களுக்கு பாதுகாப்பு கொடுக்குமாறு எவரும் எனக்கு உத்தரவிடவில்லையே" என்றார்.

சியம்பாவுக்கு தன் சந்தேகம் சரியானது என்று தெரிந்துவிட்டது.

"ஓ..அப்படியா, சரி, சரி, ஜனாதிபதி தனது பாதுகாப்பு பிரிவில் இருந்து ஆட்களை அனுப்பி இருக்கலாம்" என்று சமாளித்தார் சியம்பா.

உண்மை தெரிந்தால் அந்த அதிகாரியும் தன்னை மதிக்கமாட்டார் என்பதால் அந்த சமாளிப்பு.

மறுநாள் சியம்பாவை அமீன் அழைத்திருந்தான். வெகு சரளமாக அவருடன் உரையாடினான்.

"வாருங்கள் உலாவிவிட்டு வரலாம்" என்று சியம்பாவை அழைத்துக் கொண்டு ஜனாதிபதி மாளிகைக்குள் இருந்த பூங்காவுக்கு சென்றான்.

அங்கு லாண்ட் ரோவர் வண்டி ஒன்று நின்றது. புத்தம் புதியவண்டி அது. அதனை சியம்பாவிடம் காண்பித்தான். "நேற்றுத்தான் வாங்கினேன்" என்றான்.

லாண்ட் ரோவரில் ஒலிபரப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. அதற்கான விளக்கத்தையும் அமீனே கூறினான்; "பார்த்தீர்களா, ஒரு வானொலி நிலையமே இங்கு இருக்கிறது. உகண்டா வானொலி நிலையத்தை எதிரிகள் சுற்றிவளைத்தால்கூட நான் இங்கிருந்தே நாட்டு மக்களுக்கு உரையாற்றுவேன். அத்தனை வசதி இதில் இருக்கிறது" என்று கூறினான்.

பின்னர் சியம்பாவை அழைத்துச் சென்று புதிதாக அமைக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகத்தை காண்பித்தான். "தினமும் நீச்சலடிப்பது உடல் நலனுக்கு ஏற்றது!" என்று சியம்பாவின் தோளில் பலமாக தட்டினான்.

போயிங் விமானத்தை வாங்குவதையே அநியாயமான செலவீனம் என்று அப்பிப்பிராயம் கூறிய தன்னிடமே, நீச்சல் தடாகத்தை அமீன் காண்பிக்கிறான். லாண்ட் ரோவர் வாகத்தை காண்பிக்கிறான். இதற்கு என்ன அர்த்தம், என்று யோசித்தார் சியம்பா.

தனக்கு யாரும் புத்தி சொல்லக்கூடாது. தான் நினைத்ததை செய்து முடிப்பேன் என்று காண்பிக்கும் வீம்புத்தனம்தான் இதுவெல்லாம் என்று நினைத்தார்.

அவரது நினைப்பை மெய்யாக்குவது போல, "என்ன, இதெல்லாம் வீண் ஆடம்பரமாகத் தெரிகிறதா?" என்று கேட்டான்.

"அப்படியல்ல, சில வசதிகள் தேவைதான்!" என்றார் சியம்பா. அதற்கு அமீன் சிரித்த சிரிப்புக்கு அர்த்தம் கேலியா, திருப்தியா என்று சியம்பாவால் இனம் காணமுடியவில்லை.

கம்பாலாவில் உள்ள சர்வதேச ஹொட்டலில் பிரத்தியேகமான 'மசாஜ் கிளினிக்' ஒன்றை அமீன் அமைத்திருந்தான்.

"வாரம் ஒரு தடவையாவது உடம்பை மசாஜ் பண்ண வேண்டும். அதனால் உடல் மட்டுமல்ல, உள்ளமும் உற்சாகம் பெறும். நீரும் அங்கு செல்லலாம். பதினாறில் இருந்து முப்பது வயது வரை அழகிகள் விதம் விதமாக, ரகம், ரகமாக இருக்கிறார்கள். உடம்பெங்கும் அவர்கள் கைகள் விளையாடுவதே தனிச் சுகம் தான்" என்று விஷமமாகப் புன்னகைத்தான்.

தான் அபிப்பிராயம் கூறியது எத்தனை பெரிய மடைத்தனம் என்று நொந்து கொண்டார் சியம்பா.

சில நாட்களின் பின்னர் வானொலியைத் திருப்பிய சியம்பாவுக்கு மற்றுமொரு அதிர்ச்சி காத்திருந்தது.

வானொலியில் அமீனின் செய்தியை வாசித்தார்கள்.

"நாட்டின் பொருளாதார நிலை வீழ்ச்சியடைந்துள்ளது. அதனால் மக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். சிக்கனமான வாழ்க்கை வாழ்வதற்கு பழகிக்கொள்ள வேண்டும். நாட்டு நலனுக்கு இவை மிக முக்கியமாகும்" என்று அமீன் தெரிவித்ததாக வானொலி கூறியது.

இக் காலகட்டத்தில் அமீன் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

(இடி தொடரும்)

# மாட்டினார் கிளின்ரன்



**அ**மெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் மற்றுமொரு செக்ஸ் புகாரிலும் வசமாக மாட்டிக் கொண்டார்.

கேத்லீன் வில்லே என்னும் பெண் அமெரிக்க அதிபர் தன்னிடம் முறைகேடாக நடந்தார் என்று புகார் கூறியிருந்தார்.

இவரிடம் அமெரிக்க புலனாய்வுத் துறை முதற்கட்ட விசாரணை நடத்தியது. ஒருவர் பொய் சொல்கிறாரா என்பதைக் கண்டறியும் கருவி இந்த விசாரணையில் பயன்படுத்தப்பட்டது.

ஆனாலும் உண்மையைக் கண்டறிய முடியவில்லை. இதனால் கடந்த செப்டம்பர் மாதம் இரண்டாம் கட்ட விசாரணை நடந்தது.

அப்போதும் குறிப்பிட்ட கருவி பயன்படுத்தப்பட்டது. கேத்லீனிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் தற்போது அறிக்கையாக வெளியிடப்பட்டுள்ளன.

கேத்லீன் சொன்னது உண்மை என்று குறிப்பிட்ட கருவி முலம் கண்டறியப்பட்டுள்ளதாக அறிக்கை கூறுகிறது.

இதனையடுத்து கேத்லீன் கூறிய தகவல்கள் பகிரங்கமாகியுள்ளன. கிளின்ரன் தன் மார்பில் கைவைத்து அழுத்தியதாகவும், தொடையும், அடி வயிறும் சந்திக்கும் பகுதியில் கைவைத்ததாகவும் கேத்லீன் கூறியுள்ளார்.

# வயாக்ராவால் துணிச்சல்

**'வ**யாக்ரா' மாத்திரை ஒரு பெண்ணுக்கு வில்லனாகிவிட்டது. சீனாவைச் சேர்ந்த அந்தப் பெண் தைவான் நாட்டில் குடியேறியிருந்தாள். 41 வயது.



71 வயதான முதியவர் ஒருவரை அவள் மணந்து கொண்டாள். தைவான் நாட்டு குடியுரிமைக்காகவும் விண்ணபித்தாள்.

அதற்கு அனுமதி கிடைப் பதற்குள் பேரிடியாக அந்தச் செய்தி கிடைத் தது. முதியவர் மண்டையைப் போட்டுவிட் டாரா? என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை.

வேறு ஒரு இளம் பெண்ணை மணந்து கொண்டார் ஆசாமி. முதல் மனைவியை நிராகரித்துவிட்டார்.

'வயாக்ரா' மாத்திரை அவர் கையில் கிடைத்ததால் தான் துணிந்து இளம் பெண்ணை மணந்திருக்கிறார் என்று நிராகரிக்கப்பட்ட பெண் குற்றம் சாட்டியிருக்கிறார்.

சமீபத்தில்தான் தைவான் நாட்டில் வயாக்ரா விற்பனைக்கு வந்துள்ளது.

# மடோனாவும் மருதாணியும்



**அ**மெரிக்காவின் கவர்ச்சிப் புயல் மடோனாவுக்கு இந்திய கலாசாரம் மீது திடீர் பற்றுதல் ஏற்பட்டுள்ளது.

'செக்ஸ் உறவு' பற்றி பல்வேறு கோணங்களில் போஸ் கொடுத்து புத்தகம் வெளியிட்டு, உலகைக் கலக்கியவர் மடோனா.

ஆண் நண்பர் ஒருவருக்கு பணம் கொடுத்து தன்னுடன் உறவு கொள்ள வைத்து குழந்தை பெற்றும் பரபரப்பை ஏற்படுத்தியவர்.

தற்போது தன் அதிரடி அங்க அசைவு நடனங்களை நிறுத்திவிட்டு, 'ஓம் சாந்தி' என்னும் சமஸ்கிருத சுலோகங்களை பயன்படுத்தி இசை ஆல்பம் ஒன்றை தயாரித்துள்ளார்.

இதில் மடோனா பொட்டு வைத்து, மருதாணி பூசி அழகாகத் தோன்றினார்.

இதற்கு கிடைத்த வரவேற்பை பார்த்துவிட்டு, அமெரிக்காவில் இசைக் கலைஞர்கள் பலர் இந்திய கலாசார பின்னணியில் நிகழ்ச்சிகளை அமைக்க ஆரம்பித்துள்ளனர்.

மடோனாவுக்கு 40 வயது. ஆனால் யாரும் நம்பமாட்டார்கள். அமெரிக்க இளைஞர்கள் அவரது இளமைத் துடிப்பான அசைவுகளில் கட்டுண்டு கிடக்கிறார்கள்.

# இடுகாட்டில் காதல் ஜோடி

**மெ**ச்சிக்கோவில் உள்ள இடுகாடு ஒன்றில் சோகச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.



இந்த இடுகாட்டில் வேலை செய்பவர் கோஸ் அகஸ்டின் நோ. அவருக்கு அனாமரியா என்னும் காதலி இருந்தாள்.

சமீபத்தில் மாலை மயங்கிய வேளையில் மரியா காதலனை தேடி இடுகாட்டுக்குச் சென்றார்

இருள் சூழ்ந்த வேளையில் இருவரும் தம் நிலை மறந்தனர் உணர்ச்சி வசப்பட்டனர்.

இருவரும் பிணங்களை எடுத்துவரப் பயன்படுத்தும் வண்டிக்குள் சென்றனர். குளிரூட்டியை போட்டுவிட்டு இருவரும் இன்பம் அனுபவித்தனர்.

காரியம் முடிந்ததும் வண்டியை விட்டு இறங்கினார்கள். அதன் அருகில் படுத்துத் தூங்கினார்கள். ஆனால் வண்டியின் இயக்கத்தை நிறுத்த மறந்தனர். அதனால் அந்த வண்டியில் இருந்து வெளியேறிய புகை கிடங்கில் மண்டியது. உறங்கிப்போனவர்களது மூக்கின் வழியே சென்று உயிரைப் பறித்தது.

இடுகாட்டிலேயே காதல் ஜோடி பிணமாகியது.

# டெண்டுல்கர் மூன்றாமிடத்தில்

**பெ**ப்சி நிறுவனம் வெளியிட்டுள்ள உலக கிரிக்கெட் வீரர்கள் தரவரிசையில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் மூன்றாவது இடத்தில் இருக்கிறார்.

முதலிடத்தில் இருந்து வந்த டெண்டுல்கர் முதுகுவலி காரணமாக ஏறக்குறைய 10 வார காலம் போட்டி எதிலும் பங்கேற்காததே இந்தப் பின்னடைவுக்குக் காரணம்.

முதலிடத்தில் அவுஸ்திரேலியாவின் மைக்கல் பெவன் உள்ளார். இவர் 9,486 புள்ளிகளைச் சேர்த்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் லான்ஸ் குளுசெனர் 7629 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப்பிடித்துள்ளார். டெண்டுல்கர் 7335 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

அவுஸ்திரேலியாவின் லேஹ்மன் 4வது இடத்திலும் இங்கிலாந்தில் கிரஹாம் ஹிக் 5வது இடத்திலும் உள்ளனர்.

அடம் கில்கிறிஸ்ட் (அவுஸ்திரேலியா),



இன்ஸமாம்-உல்-ஹக் (பாக்கிஸ்தான்), ஹன்சி குரோன்ஞ் (தென்னாபிரிக்கா), இஜாஸ் அஹமட் (பாகிஸ்தான்), ரிக்கி பொன்டிங் (அவுஸ்திரேலியா) ஆகியோர் 6லிருந்து 10 இடங்களில் உள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com


# தகவல் பெட்டி



## கொம்புடன் குழந்தை

↑ உலகில் அபூர்வமான சங்கதிகளை தேடிப்பிடித்து, அவற்றை புத்தகமாக வெளியிட்டவர் ஜோ மாக் நீலி. 'ஃபோர்டின் ரைம்ஸ்' என்ற பெயரில் அவற்றை புத்தகமாக வெளியிட்டார். இவருக்கு ஜீன் வாத்துக்கினிஸ் என்பவர் உதவியாக இருந்தார். பல நாடுகளுக்கு சென்று, மிகுந்த சிரமங்கள் மத்தியில் அபூர்வமான சம்பவங்களை பற்றிய விபரங்களை திரட்டினார்கள். இந்த அரிய முயற்சியை பாராட்டி அமெரிக்காவில் விழா கொண்டாடப்பட்டது.

அப்புத்தகத்தில் தலையில் கொம்புடன் பிறந்த குழந்தையின் படமும் வெளியாகியுள்ளது. கை விரல்கள் போல இவை முளைத்திருக்கின்றன. மேலும் பல அதிசய செய்திகளும் இப் புத்தகத்தில் உள்ளன.





## சாதனையும் சோகமும்

↑ **1983ம்** ஆண்டு உலகக் கோப்பை போட்டிகள் இங்கிலாந்தில் நடைபெற்றன.


அப்போட்டியில் உலகக் கிண்ணம் இந்தியாவுக்கு கிடைக்கும் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை. அனைவரையும் திகைப்பில் ஆழ்த்திவிட்டு, கிண்ணத்தை கைப்பற்றியது கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி. அந்த வெற்றிக்கு கபிலின் புயல்வேக ஆட்டமே கைகொடுத்தது. இறுதிப்போட்டிக்குத் தெரி வாக வேண்டுமானால் இந்தியா ஸிம்பாப்வேயை வென்றாக வேண்டும் என்ற நிலை. 17 ஓட்டங் களுக்கு 5 விக்கெட்டை பறிகொடுத்து இந்தியா திணறிக்கொண்டிருந்தது.

அடுத்து களமிறங்கினார் கபில். புயல்வேக ஆட்டம். 16 பவுண்டரிகள். 6 சிக்ஸர்கள். மொத்த ஓட்டங்கள் 175. அவுட்டாகாது வெற்றியுடன் திரும்பினார். 'ட்ரெண்ட் பிரிட்ஜ் வெல்ஸ்' மைதானமே ஆச்சரியத்தில் உறைந்துபோனது. இதில் மகா சோகம் என்ன தெரியுமா? கபிலின் இந்த ஆட்டத்தை புகைப்படத்தில் மட்டுமே காண முடியும். ரி.வி. கமராக்களால் பதிவு செய்யவில்லை. கறுப்பர்கள் ஆடும் போட்டி என்று கருதி அப் போட்டிக்கு ரி.வி. படப்பிடிப்பாளர்கள் செல்லவில்லை. விளையாட்டிலும் நிறவெறி.



## முச்சக்கரவண்டியோடு கிரிக்கெட்

↑ இங்கிலாந்தில் வலது குறைந்தோருக்கான பலவிளையாட்டுச் சங்கங்கள் உருவாகியுள்ளன. கண்பார்வையற்றவர்கள், காது கேளாதவர்கள் மற்றும் கைகாலகளை இழந்தவர்களுக்கெல்லாம் கிரிக்கெட் அணிகள் இருக்கின்றன. உலகின் பல பாகங்களிலுமுள்ள வலது குறைந்தோர் விளையாட்டுக் கழகங்களுடன் இணைந்து வலது குறைந்தோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதற்கு விரிவான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அங்கவீனர்கள் முச்சக்கர வண்டிகளில் இருந்தபடி கிரிக்கெட் விளையாடும் காட்சியே இதுவாகும்.



## பயிற்சி-முயற்சி

↑ கிரிக்கெட் வீரர்களுக்கு மிகப் பிரதானம் உடற்பயிற்சியும், உடல் கட்டுக்கோப்பும்தான். இலங்கை அணி வீரர்கள் சிலருக்கு இது பொருந்தாது. கப்டன் ரணதுங்காகூட தொப்பையுடன்தான் காட்சி தருகிறார். இங்கு கடும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர் இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் மைக்கல் ஆர்தட்டன். இவருக்கும் டெண்டுல்கருக்கு ஏற்பட்டது போன்று முதுகுவலி. அதற்குத்தான் இப் பயிற்சி.

எனினும், இங்கிலாந்து அணியில் உலகக் கிண்ணப் போட்டியில் இவரை கழட்டி விட்டுள்ளனர். உடல் தயார் நிலை சரியில்லையாம்.



## ஆடுகளம்

↑ தெருவையும், வீதிகளையும், மைதானங்களையும் போர்வையாக மூடிய கனத்த பனி. கட்டி கட்டியாக ஐஸ். அப்படியிருந்தும் கிரிக்கெட் ஆடியாக வேண்டும் என்று இளசுகளுக்கு துடிதுடிப்பு.

பனிமூடிய தரையில் ஐஸ் கட்டிகளை அகற்றி ஆடுகளம் ஒன்றை தயார் செய்து விளையாடுகிறார்கள். இந்த ஆடுகளத்தை உருவாக்க எத்தனை சிரமப்பட்டிருப்பார்கள். கிரிக்கெட்டுக்காக எதையும் செய்யும் இதயங்கள் இவர்களுக்குள் துடித்துக் கொண்டிருக்கிறது.

## பெண்கள் கிரிக்கெட்

↘ கிரிக்கெட் இப்பொழுது பெண்களையும் வெகுவாகக் கவர்ந்துவிட்டது. "ஆண்கள் மட்டும் தான் கிரிக்கெட் வீரர்கள் என்ற பெயர் எடுக்க வேண்டுமா? ஏன் எங்களாலும் கிரிக்கெட்டில் சாதனைகள் பல புரிய முடியும்!" என்று பல நாடுகளிலும் கிரிக்கெட் வீராங்கனைகள் புறப்பட்டுவிட்டனர். இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலும் பெண்கள் கிரிக்கெட் அணிகள் இருக்கின்றன.

அண்மையில் இங்கிலாந்தில் பல பெண்கள் கிரிக்கெட் அணிகள் ஒன்றுடன் ஒன்று மோதிய காட்சி இரசிகப் பெருமக்களை வியப்பில் ஆழ்த்தியது.

இப்போட்டிகளில் சிறப்பு அம்சம் என்னவென்றால், இவை திறந்த வெளி அரங்குகளில் இடம்பெறவில்லை. உள்ளரங்குகளில் தான் இடம்பெற்றன. இங்கிலாந்தின் பெண்கள் உயர் நிலைப்பள்ளி மாணவிகளின் 21 கவுண்டி அணிகள் இப் போட்டிகளில் பங்கேற்றன.

பெண்கள் கிரிக்கெட்டுக்கு ஊக்குவிப்பு, விளம்பர அனுசரணைகள் என்பவை போதியளவு கிடைப்பதில்லை. கிடைக்குமானால் பெண்கள் கிரிக்கெட்டும் பிரபலமாகிவிடும்.




படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 104

# மந்திரவாதியிடம் ஏமாந்த நடிகர்கள்

தமிழ்நாட்டிலிருந்து **மயன்**

இங்கு வெளியாகும் வார இதழ் ஒன்றில் பில்லி, சூனிய விவகாரங்களோடு பரிச்சயமுடைய ஒருவர் வெளியிட்ட தகவல் இது:

'சினிமா உலகில் அந்த ஆக்ஷன் ஹீரோ உச்சியில் இருந்த நேரத்தில் ஹீரோயின் ஒருவருடன் தொடர்பு ஏற்பட்டது.

திடீரென காதல் கசந்துவிட்டதால் ஹீரோயின் நடிகை இந்தக் காதல் விஷயமாக ஹீரோவுடன் பெரிய தகராறையே நடத்திவிட்டுப் போனார்.

அதன்பின்னர் அந்த நடிகருக்கு அடுத்தடுத்து படங்கள் தோல்வியடைந்தன. இதனால் அரண்டுபோன அந்த ஹீரோவை நண்பர்களும், படப்பிடிப்பு குழுவினரும் தேற்றிக் கொண்டிருக்க, உற்ற நண்பர்களில் ஒருவர்தான் 'மந்திரவாதி' ஒருவரது விலாசத்தை தந்து வழிகாட்டினார்.

மந்திரவாதியிடம் சந்திப்புக்கான அனுமதி பெற்றுக்கொண்டு, மறுநாள் சந்திக்கப்போனார் ஹீரோ.

"அந்த நடிகைதான் உனக்கு சூன்யம் வைத்துவிட்டார். அதனை முறித்துக் காட்டுகிறேன்" என்று அந்த மந்திரவாதி கூற, ஹீரோவுக்கு ஆச்சரியமோ ஆச்சரியம்.

ஆனால் அந்த மந்திரவாதிக்கு கோடம்பாக்கத்தில் வாடிக்கையாளர்கள் உண்டு. அவர்களிடம் ஹீரோவின் சிக்கல்கள் பற்றி முன்கூட்டியே தெரிந்து வைத்துக்கொண்டு, எடுத்த எடுப்பிலேயே பேசி ஹீரோவை தனது வலையில் விழவைத்தார்.

பின்னர் அந்த ஹீரோவிடம் பெரும் தொகையைப் பிடுங்கியிருக்கிறார் அந்த மந்திரவாதி.

இந்த சந்திப்புக்கு பின்னர் ஹீரோ நடித்து வெளிவந்த படம் ஓரளவுக்கு (இயல்பாகவே) வெற்றிகரமாக ஓட, 'எல்லாம் மாந்திரீக மகிமைதான்' என்று அந்த உற்ற நண்பரும் ஜால்ரா போட்டார். ஹீரோவும் தொடர்ந்து நம்ப ஆரம்பித்தார்.

அந்த ஹீரோயின் நடிகையும் இன்னொரு நடிகருடன் போய்விட்டார்.

இந்த ஹீரோவுக்கு நிம்மதி. அதன்பிறகும் அந்த மந்திரவாதியை சந்தித்து, அடுத்து என்ன செய்தால் நல்லது என்று கேட்டு வருகிறார். ஆனால் என்ன, இப்போது அந்த ஹீரோவின் மார்க்கெட் டல்தான்.

## பணம் கறந்தார்

நகைச்சுவை நடிகர் ஒருவர் தனது அடுத்தடுத்த படங்கள் தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து தானும் ஒரு மந்திரவாதியைச் சந்தித்திருக்கிறார்.

அவர் என்ன நினைத்தாரோ, அதன்படியே 'அடிதடி நகைச்சுவை நடிகர்தான் சூன்யம் வைத்துவிட்டார்' என்று அந்த மந்திரவாதியும் சொல்லியிருக்கிறார்.

கணிசமான பணத்தைக் கொடுத்து சூன்யத்தை அகற்ற ஸ்பெஷல் பூஜை நடத்தினார் அந்த நகைச்சுவை நடிகர்.

நாளாவட்டத்தில் அந்த அடிதடி நகைச்சுவை நடிகரின் மார்க்கெட் 'டல்' அடிக்க ஆரம்பித்தது. அதே சமயம் மந்திரவாதியிடம் போன நடிகரின் மார்க்கெட்டும் திடீரென்று மேலும் சரிய ஆரம்பித்தது.

அதிர்ந்துபோன நகைச்சுவை நடிகர் தனது மந்திரவாதியிடம் ஓடினார்.

"நாம் எதிர் சூன்யம் வைத்தது தெரிந்து அந்த அடிதடி நகைச்சுவை நடிகர் மலையாள மாந்திரீகங்கள் மூலமாக பதிலுக்கு பெரிய அளவில் சூன்யம் வைத்துவிட்டார். நாமும் பதிலடி கொடுக்க வேண்டும்" என்று கூறி திரும்பவும் சில லகரங்களை கறந்து விட்டாராம். இதுதான் அந்த இதழில் வெளியான தகவல்.

முதலில் குறிப்பிடப்பட்டுள்ள ஹீரோ, ஹீரோயின் காதல் பற்றி முன்பே இப்பகுதியில் தெரிவிக்கப்பட்டிருந்ததை மறந்திருக்க மாட்டீர்கள். நடிகர் தனது பெயரில் வெற்றியை கொண்டிருப்பவர். நடிகை ரயில் நடிகை என்று அழைக்கப்படுவர். மூன்றெழுத்துப் பெயர் கொண்டவர்.

நகைச்சுவை நடிகர் இந்து மதக் கடவுள் ஒருவரது ஆயுதத்தை தன் பெயரில் வைத்திருக்கிறார். அடிதடி நகைச்சுவை நடிகர் என்பது யார் என்பது உங்களுக்கே தெரிந்திருக்கும்.

## நடிகைக்கு அதிர்ச்சி

தமிழ்நாட்டின் இரண்டெழுத்து தொலைக்காட்சியில் பிரபலமான அந்த மூன்றெழுத்து தொடர் பலராலும் விரும்பிப் பார்க்கப்பட்டது. பின்னர் இறுதிப் பகுதியில் சலிப்பூட்ட ஆரம்பித்தது.

தயாரிப்பாளர், இயக்குநர் ஆகியோரின் சபலத்தால் ஏற்பட்ட தடுமாற்றமே தொடர் தடுமாறுவதற்கு காரணமானது.

தொடரின் பிரதான கதாபாத்திரத்தில் 'பா' நடிகை திறம்பட நடித்து வந்தார். அவருக்கு திருமணமாகிவிட்டதால், முன்னர் போல அல்லாமல் அனுசரிப்புக்களை தவிர்க்க ஆரம்பித்தார்.

பல நடிகர்களுடன் சந்தோசத்தை பகிர்ந்து கொண்டவர்தானே என்ற நினைப்பில் அவரை தன் ஆசைக்கு இணங்க வைக்க தயாரிப்பாளரும், அவருக்கு உதவியாக இயக்குநரும் நடிகையை தொல்லைப்படுத்த ஆரம்பித்தனர்.

திருமணத்தின் பின்னராவது இத்தகைய அனுசரிப்புக்கள் இல்லாமல் இருக்கலாம் என்று முடிவெடுத்த நடிகை அவர்களுக்கு இணங்க மறுத்து விட்டார்.

நடிகையின் கதாபாத்திரம் இல்லையானால் தமது தொடரே தொய்ந்து போகும் என்பதால் தயாரிப்பாளரால் அவரை தொடரில் இருந்து தூக்கியெறியவும் முடியவில்லை.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் ஒருவரையே ஆட்டிப்படைத்த அந்த நடிகையின் பரிச்சயம் தயாரிப்பாளருக்கு கிட்டியது.

அவருக்கு ஒரு பாத்திரம் கொடுக்குமாறும், படிப்படியாக 'பா' நடிகையின் முக்கியத்துவத்தை குறைத்து ஓரம் கட்டும்படியும் இயக்குநருக்கு உத்தரவிட்டார் தயாரிப்பாளர்.

தயாரிப்பாளரை மட்டுமல்ல இயக்குநரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார் அந்த நடிகை. தெரிந்த கலைகள் அனைத்தையும் பிரயோகித்தார்.

## விபத்து

இக் கட்டத்தில் 'பா' நடிகையின் கணவருக்கு விபத்து ஏற்பட்டது. காலில்தான் காயம். கணவரைப் பார்க்க வெளிநாடு போன 'பா' நடிகை விரைவாகத் திரும்பத் தயாராக இருந்தார்.

"ஒன்றும் அவசரமில்லை. வேறு காட்சிகள்தான் எடுத்து வருகிறோம். நீங்கள் தேவையாக இருக்கும்போது பயணச்சீட்டு அனுப்பி நாமே கூப்பிடுகிறோம்" என்று 'பா' நடிகைக்கு கூறினார் இயக்குநர். அதனை நம்பி கணவரோடு தங்கியிருந்தார் நடிகை.

ஆனால் இங்கோ, சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கதையையே மாற்றினார்கள். 'பா' நடிகை இறப்பதாக கதையை முடித்துவிட்டனர்.

இத் தகவல்கூட பத்திரிகையாளர் ஒருவர் கூறித்தான் வெளிநாட்டிலுள்ள நடிகைக்கே தெரியவந்தது.

சமயம் பார்த்து நன்றாக பழிவாங்கிவிட்டனர் என்பதை புரிந்து கொண்டார் நடிகை. உண்மையான காரணத்தை எப்படிக் கூற முடியும்?


மிகவும் ஈடுபாட்டோடு தான் நடித்த தொடரில் இப்படி பழிவாங்கி விட்டார்களே என்று மனதுக்குள் அழுவது தவிர வேறு வழி?



மாவீரன்-காரைக்குடி சிட்டு
படம்: புண்ணியவதி



ரஜினி
படம்: படையப்பா





ஷாருக்...

இளம் நட...

"என்னைப் பே...

"இன்னமும் பதிலை... இன்று தமிழ்ப்பட உல... ருக்கிறார்கள். நிறைய... பயப்படுவதாகக்கூட அ... தப் பயம் வரவில்லை.

இப்போது நான் ... அவர்களை செய்யச் ... பார்ப்போம். நான் சினி... விட்டே விலகிவிடுகிறே... சவால் விட்டுள்ளது ய... விஜயகாந்த்.

சமீபத்தில் சில பட... யால் தன் மார்க்கெட் ச... பதை விஜயகாந்த் ஒப்பு...

"நான் காயம்பட்டு ... னோடு நடிப்பதற்கு ப... திருக்கிறார்கள். ஆரம்ப... நடி' என்றார்கள். கண்... தேன். பிறகு கதாநாயக... எனக்கென்று ஒரு இ... பிடித்தேன்.

அதனால் என்னுடை... களின் தோல்வி என்னை... காது." என்று கூறியிரு... விஜயகாந்த்.

"தேக்கம் எல்லோ... உண்டு. 'அண்ணாமலை ... கோயம்புத்தூர் ஏரியாவி... யாரும் தயாராக இல்லை... தர் பிலிம்ஸ்தான் (விஜய... டைய நிறுவனம்) வா... அதேபோல எனக்கும் ... உண்டு. இனி சரியாகி... என்று தன்னம்பிக்கை... பேசுகிறார் விஜயகாந்த்.

முகப்பில்

அஜித்குமார்

இஷாகோபிகா...

---

சினிமா விமர்சனம்

# கண்ணில்லாத தேவயாணி

| | |
|---|---|
| படம் | : நிலவே முகம் காட்டு |
| நடிப்பு | : கார்த்திக், தேவயாணி, ராம்கி, நிழல்கள்ரவி, மணிவண்ணன், சரத்பாபு, வடிவேலு, ஸ்ரீவித்யா, டெல்லிகணேஷ். |
| இயக்கம் | : மு. களஞ்சியம் |
| இசை | : இளையராஜா. |
| ஒளிப்பதிவு | : அப்துல் ரகுமான். |

சிறுவயதிலேயே விபத்தில் தாயைப் பறிகொடுக்கிறார் கார்த்திக். அவரை தனது நண்பனாக அன்பு காட்டி வீட்டுக்கு அழைத்துப் போகிறார் ராம்கி. பணக்காரரான நிழல்கள் ரவிக்கு தன் மகன் ராம்கி கார்த்திக்குடன் பழகுவது பிடிக்கவில்லை. ராம்கியின் பிடிவாதத்தால் கார்த்திக்கை சகித்துக் கொள்கிறார் நிழல்கள்ரவி.

ராம்கி அமெரிக்காவுக்கு கல்வி கற்க செல்கிறார். அதுதான் தக்க நேரம் என்று கார்த்திக்கை விரட்ட திட்டம் போட, அதனையறிந்து கார்த்திக் தானாகவே வீட்டைவிட்டுப் போகிறார்.

அதன்பின்னர் கண்பார்வையற்ற பூக்காரியான தேவயாணியை சந்திக்கிறார். காதல் மலர்கிறது. தேவயாணிக்கு கண் பார்வை கிடைக்க ஏற்பாடு செய்கிறார் கார்த்திக். திருட்டுப் பழி ஒன்றில் சிக்கி கார்த்திக் சிறை செல்கிறார். கண்பார்வை வந்ததும் கார்த்திக்கின் முகத்தைப் பார்க்க துடிக்கிறார் தேவயாணி.

அமெரிக்காவில் இருந்து வரும் ராம்கி தேவயாணியை காதலிக்கிறார். சிறையிலிருந்து வரும் கார்த்திக் தன் உயிர் நண்பனுக்காக காதலை தியாகம் செய்யத் துணிகிறார். ராம்கிக்கு உண்மை தெரியவருகிறது. இருவரையும் சேர்த்து வைக்கிறார் ராம்கி. சுபம். இதுதான் கதை.

'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தின் சாயல் சில காட்சிகளில் தெரிவதை தவிர்க்க முடியவில்லை.

சில காட்சிகள் தொய்வாக இருந்தாலும் கதையை நன்கு நகர்த்திச் சென்றுள்ளார் இயக்குநர். பாடல்களும், ஒளிப்பதிவும் இனிமை, பசுமை. கார்த்திக்குக்கு அந்தத் தொப்பியும், கோட்டும் கச்சிதமாக பொருந்துகிறது. ராம்கியும் அலட்டல் இல்லாமல் நடித்துள்ளார். துள்ளாத மனம் சிம்ரானை இதில் கண்ணில்லாத பெண்ணாக நடித்து ஓரம் கட்டிவிட்டார் தேவயாணி. டில்லிகணேஷ் தேவயாணியின் குடிகார அப்பாவாக சில காட்சிகள் மட்டும் தோன்றி, விபத்தில் உயிரிழந்து அனுதாப வாக்குகளை அள்ளுகிறார்.

மணிவண்ணன், வடிவேலு நகைச்சுவை சிரிக்கக் கூடியதாக உள்ளது. கண்தெரியாதவராக வடிவேலு தோன்றும் காட்சிகள் கல கல. ஸ்ரீவித்யா காந்தக் கண்களால் பாந்தமாக நடித்திருக்கிறார். அவரது கணவராக சரத்பாபு ஜாடிக் கேற்ற மூடி.

அப்பிரமான படம் என்று சொல்ல முடியாது. ஆனால் பார்க்கலாம். குடும்பத்தோடு அமர்ந்து பார்க்கக்கூடிய படம். நகைச்சுவையில் மட்டும் கொஞ்சம் விரசம்.

# எடை குறைந்த சிம்ரான்

'கண்ணுபடப் போகுதய்யா' படத்தில் விஜயகாந்த்துக்கு ஜோடி சிம்ரான். சிம்ரானுக்கு ஈடுகொடுப்பதற்காக தன் உடலை தயார் படுத்தியிருக்கிறார் விஜயகாந்த். பல நாட்கள் பட்டினி கிடந்து மெலிந்திருக்கிறார். எட்டு கிலோ குறைந்துவிட்டாராம்.

அதே சமயம் சிம்ரானும் தன் உடல் எடையை குறைத்திருக்கிறார். "தமிழில் நடிகைகள் கொஞ்சம் தளதளப்பாக இருந்தால்தான் எடுபடும். ஆகவே உடம்பை குச்சியாக்காதே" என்று சிம்ரானுக்கு அறிவுரை கூறினாராம் விஜயகாந்த்.

நடன இயக்குநர் ராஜு சுந்தரத்தை காதலித்தாலும், தன்னுடன் இணைந்து நடிக்கும் நடிகர்களுடனும் தாராளமாக நடந்து கொள்கிறார் சிம்ரான். நெருக்கமான காட்சிகளில் கதாநாயகர்களின் சில்மிஷங்களையும் கண்டும் காணாதிருக்கிறார்.

அதனால்தான் சகல கதாநாயகர்களும் சிம்ரானுக்கு சிபாரிசு செய்கின்றனர். அவரது வெற்றியின் இரகசியமும் அதுதான்.

# பிரபு–பிரகாஷ்ராஜ்

பிரபு நடித்த 'டுயட்' படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் பிரகாஷ்ராஜ். பின்னர் அதிரடி வில்லனாகி, கதாநாயகனாகி பல அவதாரம் எடுத்துவிட்டார்.

தற்போது பிரபுவின் படம் ஒன்றில் இன்னொரு கதாநாயகனாக நடிக்கிறார். பிரபு, பிரகாஷ்ராஜ் நடிக்கும் இப்படத்தின் பெயர்: 'வசந்த காலம்.'

'குருபார்வை' படம் மூலம் பிரகாஷ்ராஜுக்கு திருப்பத்தை ஏற்படுத்தியவர் இக்குநர் மனோஜ்குமார். அவர்தான் இப்படத்தை இயக்குகிறார். இசை: தேவா.

ரஞ்சித், மணிவண்ணன், டி.பி.கஜேந்திரன், இந்து, ரேஷ்மா, தாமு, வையாபுரி ஆகியோருடன் பிரபல நடிகை ஒருவர் கதாநாயகியாக நடிக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

## ர்களுக்கு சவால் ் சண்டையிட முடியுமா?"

வருடகாலம் கதாநாயகனாக நடிப்பேன்.
திறைய இளைஞர்கள் வந்து கொண்டி
டகர்கள் அவர்களைப் பார்த்து
றன். ஆனால் எனக்கு அந்

றி சண்டையை
ல்லுங்கள்
றையை
இப்படி
தெரியுமா?

ன் தோல்வி
ருக்கிறது என்
ள்ளவில்லை.
ழ்ந்தவன். என்
யகிகள் மறுத்
'வில்லனாக
க மறுத்
நடித்து
தைப்

## ஷாருக்கானின் ஜோடி

'ஹேராம்' படத்தில் ஷாருக்கான் கௌரவ நடிகர்போல சில காட்சிகளில்தான் தோன்றுகிறாராம்.

தனக்குரிய ஜோடியையும் ஷாருக்கானே சிபாரிசு செய்துவிட்டார்.

மும்பாய் மொடல் அழகி ஸ்ரீ கிருபாதான் ஷாருக்கானுக்கு ஜோடி. 'மிஸ் இந்தியா' அழகிப் போட்டியில் ஐந்தாவது இடத்தைப் பிடித்தவர் இந்த ஸ்ரீ கிருபா.

'மோக்ஷ்' படத்தில் மனிஷா கொய்ராலாவுடன் தற்போது நடித்து வருகிறார். அடுத்த படம் 'ஹேராம்'.

ஸ்ரீ கிருபாவுக்கு 19 வயது. இந்தியாவின் 'லக்மே' அழகு சாதனப் பொருட்களுக்கு இரண்டு வருஷத்துக்கு இவர்தான் மொடலிங். அதற்கான ஊதியம் என்ன தெரியுமா? அறுபது இலட்ச ரூபாய். அது இந்திய பண மதிப்பில். பொருத்தமான ஆளாகப் பார்த்துத்தான் சிபாரிசு செய்திருக்கிறார் ஷாருக்கான்.

## ரஜினியின் கிரிக்கெட் அலசல் குடும்பத்தோடு இலண்டன் பயணம்

'இந்த முரசு' கிரிக்கெட் ஸ்பெஷல் என்பதால், சினிவிசிட்டிலும் கிரிக்கெட் செய்தி.

ரஜினிகாந்த் குடும்பத்தோடு இங்கிலாந்துக்கு சென்றிருக்கிறார். கிரிக்கெட் போட்டிகளை கண்டு களித்துவிட்டுத்தான் திரும்புவார்.

இந்திய அணியின் தமிழக வீரர்களான ரொபின் சிங், ரமேஷ் இருவரும் ரஜினியை சந்தித்து ஆசி பெற்றனர். தமிழக பத்திரிகை ஒன்று இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தது.

அந்தச் சந்திப்பில் ரஜினி கிரிக்கெட் பற்றி பேசிய விபரங்களைக் கேட்டு ரொபின்சிங்கும், ரமேசும் ஆச்சரியப்பட்டனராம்.

"நான் உலகக் கிண்ணப் போட்டிகளை கவனித்து வருகிறேன். உலகக் கிண்ணப் போட்டி வந்தாலே அணிகளில் பல திருப்பங்கள்.

1992இல் பாருங்க, பாகிஸ்தான் அணி லீக் ஆட்டங்களில் தட்டுத்தடுமாறியது. ஆனால், அரைமிறுதி வந்தபிறகு அவர்கள் ஆட்டத்தில் அதிரடி மாற்றம். முடிவு என்னாச்சு, அவுஸ்திரேலியாவிடம் இருந்து உலகக் கோப்பையை தட்டிப் பறித்தது.

1996இல் மற்றவர்களால் அரைமிறுதிக்குக்கூட கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாத அணி இலங்கை. ஆனால் யாரும் எதிர்பாராமல் உலகக் கோப்பையை கைப்பற்றியது.

அதேபோல அபாரமாக ஆடிக் கொண்டிருந்த இந்திய அணி சச்சின் இல்லாமல் தோற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒன்பதாவது இடத்திலிருந்த பாகிஸ்தான் அணி அக்ரமின் அதிரடி கப்டன் பொறுப்பால் தொடர்ந்து ஜெயிக்கிறார்கள். அவர்களது வெற்றிக்கு அடித்தளமிட்ட மியன்டாட் இப்போது இல்லை.

மேற்கிந்திய தீவின் சகலதுறை ஆட்டக்காரர் கார்ல் ஹூப்பர் ஓய்வு பெற்றுவிட்டார். இத்தனை பரபரப்போடு உலகக் கிண்ணப் போட்டி ஆரம்பமாகுது." என்று முச்சுவிடாம அலசினாராம் ரஜினி. 'சச்சின் ஆட்டத்தைப் பார்க்கத்தான் இலங்கிலாந்துக்கு போகிறேன்' என்றும் கூறியிருக்கிறார்.



கார்த்திக்-தேவயாணி
படம்: நிலவே முகம் காட்டு

## வவ்வால் ரம்பா

சினிமாவில் நடிகைகள் நிலைக்க வேண்டுமானால் அனுசரிப்பு என்பது முக்கியம். பெரிய குடும்ப பின்னணி உள்ள சிலர் விதிவிலக்காக இருக்கலாம். அவர்களுக்கு நடித்துத்தான் சம்பாதிக்க வேண்டிய அவசியம் இருக்காது. அதனால் நிர்ப்பந்தங்களுக்கு பணியத் தேவையில்லை. நடிப்பையே நம்பி இருப்பவர்கள் நிலைதான் பரிதாபம்.

சினிமாவில் 'அனுசரிப்பு' பற்றி ரம்பா என்ன கூறுகிறார் தெரியுமா?

'வவ்வால் வாழும் இடத்துக்குப் போனால், தலை கீழாகத் தொங்கித்தான் ஆகவேண்டும்.'




சசிகுமார்-சௌந்தர்யா
படம்: எங்க வீட்டு மகாலட்சுமி

## மினி சினி

- பிரபு-மோகன்லால் நடித்த 'சிறைச்சாலை' படமாக்கப்பட்ட அந்தமான் தீவில் இப்போது சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் 'அடிமைகள்' படமாக்கப்பட்டு வருகிறது.
- பார்த்திபன்-அஜித்குமார் நடிக்கும் 'நீ வருவாய் என..' படத்தில் தேவயாணி கதாநாயகி. இதில் முக்கிய வேடத்தில் சுவலட்சுமி நடிக்கப்போகிறார்.
- 'உல்லாசம்' படத்தில் இடம்பெறும் பாடல் ஒன்றைப் பாடியுள்ள பிரபுதேவா, கின்னஸ் சாதனைக்காக தயாராகும் 'சுயம்வரம்' படத்திலும் சொந்தக்குரலில் பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.
- 'இன்டிபெண்டன்ட்' என்ற மலையாளப்படத்தில் குஷ்பு கதாநாயகியாக நடிக்கிறார். வினயன் என்பவர் இயக்கும் இப்படத்தில் குஷ்புவுக்கு பொலிஸ் அதிகாரி வேடம்.
- 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தை இயக்கிய எழில் அடுத்து அஜித் நடிக்கும் படத்தை இயக்குவதான இருந்தது. இப்போது அஜித்திற்குப் பதிலாக அந் வேடத்தில் விஜய் நடிக்கவுள்ளார்.
- விஜயகாந்த் இரட்டை வேடத்தில் நடிக்கும் 'கண்ணுபடப் போகுதய்யா' படத்தில் நாயகியாக சிம்ரான் நடிக்கிறார். தற்போது சுவாதியையும் நடிக்க வைத்துள்ளனர்.
- சத்யராஜின் 'மாமன் மகள்' படத்தில் நடனமாடிய பஞ்சாபி பாடகர் குர்தாஸ் மான், இந்தி 'காதல் கோட்டையில்'யில் 'வெள்ளரிக்கா...' பாடலுக்கு நடனமாடியுள்ளார்.
- கார்த்திக் நடித்த 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' தெலுங்கில் வெங்கடேஷ் நடித்து 'ராஜா' என்ற பெயரில் வெளியானது. ஆனால் எதிர்பார்த்தளவுக்கு படம் ஓடவில்லை.
- இந்திப் படங்களை இயக்கிவரும் மலையாள இயக்குநர் பிரியதர்ஷன். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மலையாளத்தில் மம்முட்டி நடிக்க 'மேகம்' என்ற படத்தை இயக்குகிறார்.
- 'ஹவுஸ்ஃபுல்' படத்திற்குப் பின் 'சுயம்வரம்' படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக நடித்துள்ளார் ஐஸ்வர்யா. முதலில் ஐஸ்வர்யா வேடத்தில் நடிப்பதாக இருந்தவர் ரம்யா கிருஷ்ணன்.

## பரணியாக முரளி

முரளி-ரம்பா இணைந்து நடித்து படுதோல்வி கண்ட படம் 'தேசிய கீதம்'. வழக்கமாக தோல்விப்பட ஜோடி மறுபடி இணைந்து நடிப்பது அபூர்வம்.

ஆனால் முரளி-ரம்பா மறுபடி ஜோடி சேருகிறார்கள். 'தாமிரபரணி' என்று படத்திற்கு பெயரிடப் பட்டுள்ளது.

'காதலே நிம்மதி' படத்தை இயக்கிய இந்திரன் இப்படத்தை இயக்குகிறார். 'தாமிரபரணி' என்பது ஒரு ஆற்றின் பெயர். ஆனால் படத்தில் முரளியின் பெயர் பரணி. ரம்பா தாமரை என்னும் பாத்திரத்தில் நடிக்கிறார்.

வினுச்சக்கரவர்த்தி, ஜெய்கணேஷ், வடிவேலு, தலைவாசல் விஜய், மனோரமா, வடிவுக்கரசி உட்பட பலர் நடிக்கின்றனர். இசை: தேவா.



இந்திரஜா

## காதோடு சொல்லுகிறோம்

**சு**ந்தரமான இயக்குநர் ஒருவர் இரகசிய உளவாளிகளை வைத்திருக்கிறாராம். வேறு இயக்குநர்களது கதை விவாதங்களில் தகவல் திரட்டுவதுதான் அவர்களது வேலையாம். இவ்வாறு தகவல் திரட்டி, தனது படங்களில் சில காட்சிகளை புகுத்திவிடுகிறார். இதனால் பல இயக்குநர்கள் அதிர்ச்சியில் இருக்கின்றனர்.

**கா**தலுக்கு கவிதை சொன்ன படத்தில் 'கஸ்தூர' நடிகையை தாராளமாகக் காண்பித்தார் இயக்குநர். அவருடன் தாராளமாகவும் நடந்து கொண்டார் நடிகை. ஆனால் பேசிய ஊதியத்தில் இதுவரை பாதிதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடும் கொதிப்பில் இருக்கிறார் நடிகை.

**தா**டிக்கார இயக்குநரின் படம் பப்படமாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் அப் படத்தில் 'தொப்புள்' காட்டிய நடிகைகள் காட்டில் அடை மழை. ஏராளமான சம்பாத்தியமாம். அவர்கள் பிழைப்பதற்கு விளம்பரம் தேடிக்கொடுத்திருக்கிறார் சகலகலா வல்லவர்.

**ர**ம்யமான நடிகை 'கார்' நடிகருடன் மீண்டும் ஐக்கியமாகிவிட்டார். சூப்பரின் படத்தில் நடிப்பதற்காக 'கார்' நடிகரின் படத்திற்கு அல்வா கொடுத்து ஏமாற்றினார். இப்போது அதே படத்தில் நடிக்கிறார். 'கார்' நடிகரை எக்கச்சக்கமாக குளிர்வித்து மறுபடி வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்.

## இன்னுமொரு படம்

சத்யராஜின் உறவினரான சத்யன் 'இளையவன்' படத்தில் நடிப்பது பழைய செய்தி. அப்படத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போதே மற்றுமொரு படவாய்ப்பு கிடைத்திருக்கிறது.

'கண்ணா உன்னை தேடுகிறேன்' என்ற படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். இதில் சத்யனுக்கு ஜோடி சுவலட்சுமி. ரஞ்சித், பாரி வெங்கட், அம்பிகா ஆகியோரும் உண்டு.

மலையாளத்தில் 200 நாட்கள் ஓடிய படம் ஒன்றின் கதையை தழுவியே தமிழில் எடுக்கிறார்கள். இயக்கம் பி.ஏ. செல்வராஜ்.

அசப்பில் சத்யராஜ் போலவே இருக்கும் சத்யனிற்கு யோகம்தான்.

## யார் மாதவன்?

மணிரத்தினத்தின் 'அலைபாயுதே' படத்தின் வேலைகள் மிக இரகசியமாக நடந்து வருகின்றன.

இப்படத்தின் கதாநாயகன் மாதவன் புதுமுகம் என்றே அறிவிக்கப்பட்டாலும், திரைக்கு பழைய முகம்தான். கன்னடத்தில் அப்பால் கதாநாயகனாக நடித்த 'சாந்தி சாந்தி சாந்தி' படத்தில் கதாநாயகனின் நான்கு நண்பர்களில் ஒருவராக தோன்றியவர்தான் இந்த மாதவன்.

நான்கு மாதத்தில் படத்தை திரையிடத் திட்டமிட்டு, படப்பிடிப்புக்கள் வேகமாக நடந்து வருகின்றன.

அரவிந்தசாமியை கதாநாயகனாக நடிக்கவைக்க முதலில் நினைத்தாராம். பின்னர் அந்த முடிவை மாற்றிக் கொண்டாராம் மணிரத்னம். அரவிந்தசாமியுடன் மணிக்கு ஏதோ மனக்கசப்பு என்றும் பேசப்படுகிறது.

## ஆத்மாவில் அன்பை ஏந்தியவன்

ஒரு பொன் வேளையின்
இறுதிக் காலமிது;
உனைப் பிரியப்போகும்
உள்ளத்தினுள்ளே
ஏதோ ஒரு சோகம்
அலை மோதியழுகிறது!
..
உல்லாசத்தையும்
உவகையையும்
அள்ளித் தந்த கல்லூரி,
நீல வானத்தினிடையே
ஒற்றையாய் நின்று
கை காட்டும் சவுக்கு மரம்,
மாவும் வேம்பும்
நிழல் பரப்பிய முற்றங்கள்,
எனது சோகங்களைத் துடைத்த
நட்பின் கரங்கள் என
கல்லூரி வாழ்வின்
அத்தனை தடயங்களோடும்
உன்னையும் பிரிகிறேன்!
..
ஆயிரம் கதைகள்
அங்கங்கே எழுந்தாலும்
அன்பை மட்டுமே சொன்ன
எனதன்பை உனக்காகவும்
எனதுள்ளம் நிறைந்த
பிரார்த்தனைகளையும்
வாழ்த்துக்களையும்
உனது நாளைய வாழ்வின்
ஆனந்த நிகழ்வுகள்
அத்தனைக்காகவும்
தந்துவிட்டு விடைபெறுகிறேன்!
..
எனதண்ணா,
உனைப் பிரிந்து நான்
நீள் தூரம் போனாலும்
உனது அன்பை
இருவிழிகள் போல்
என்னுள்ளே காத்திடுவேன்;
உனது நல்ல நடத்தைகளை
எனது விழுமியங்களாக
இனி ஏற்றிடுவேன்!
..
வருடத்தில் ஒரு வாழ்த்துமடல்
வாரத்தில் ஒரு
தொலைபேசி அழைப்பு என
உனது பிரிவின் பின்னர்
நான் எண்ணிய நிகழ்வுகள்
எத்தனை காலத்துக்கு
என்னோடு தொடருமோ?
..
உனதான அன்பின் பெறுமானங்கள்
என்னுள்ளே
விசாலமாக வியாபித்திருக்கையில்
பாசத்தின் வேர்கள்
பாறையைத் துளைக்காதென
எப்படி நீ வாதம் செய்வாய்?
..
எனதண்ணா,
நான்
தொலைதூரம் போயினும்
எனக்குரிய வாழ்வு
எப்படி எப்படி வாய்த்திடினும்
நேரம் வாய்க்கும்
நேரங்களிலெல்லாம்
துளியும் மாறாத பாசத்தைக்
கவிதையாக்கி உனக்களிப்பேன்!
..
மூடிவைத்த துயரமும்
அதன் பின் நிரந்தரப்பிரிவுமென
விடைபெறும் நாளில்
உன்னெதிரே நான்
கண்ணீரைச் சிந்தமாட்டேன்!
..
இறுதிப் பிரிவின் பின்னர்
மீண்டும் உனைச் சந்தித்தால்
அது எனது வாழ்வில்
அற்புத நிகழ்வாக
அரிய சந்தர்ப்பமாக
அளவற்ற மகிழ்வுக்குரியதாக
அமையுமென்பதை
அறிவேன் அண்ணா!

பஹீமா ஜஹான்-அட்டாளைச்சேனை.

## செய்தியும் துணிக்கையும்...

படை நகர்வு
வன்னி மக்கள்
அகதிகளாகி
உணவின்றி அவதி...
ஆட்டிலெறிகள்
கொள்முதல்...!
...
சரக்கு கப்பல்
போக்குவரத்து
இடைநிறுத்தம்..
யாழ் மக்கள்
பட்டினியால் தவிப்பு...
மோட்டார் ஷெல்கள்
கொள்முதல்...!
...
தெற்கே
வெள்ளப்பெருக்கு
உணவு தட்டுப்பாடு
பசியின் பிடியில்
மக்கள்...
விமான எதிர்ப்பு பீரங்கிகள்
கொள்முதல்...!
...
மேற்கு கடலோர பகுதியில்
தொடர்ந்து புயல்...
மீனவர்கள் வீட்டில்
அடுப்பெரிந்து
ஐந்து நாள்...
மிதி வெடி, ரொக்கட் லோஞ்சர்கள்
கொள்முதல்...!
...
புரிகிறது..
இவையெல்லாம்
"தனியொருவனுக்கு
உணவில்லையேல்
ஜகத்தினை அழித்திடுவோம்!"
என்ற
கோட்பாட்டின் படிதானே...?

ராம். யுவராஜ்- கண்டி.

## யார் இவர்?



இங்கு சிறுவர்களுக்கு மத்தியில் மிகக் குட்டிச் சிறுவனாக நிற்பது யார் தெரிகிறதா? இந்திய திரையுலகில் இன்றைய பிரபல கதாநாயகன். தமிழிலும் ஒரு படத்தில் கதாநாயகனாக நடித்து கலக்கியவர். தற்போது தமிழிலும் தயாராகும் படம் ஒன்றில் நடித்து வருகிறார். என்ன கண்டுபிடித்து விட்டீர்களா? விடை உதவி 18ம் பக்கம்.

## தேன் கிண்ணம்

### நானும் மனிதன்

உதிரத்தை
உப்பாக்கி,
உடம்பைச
சாறு பிழிந்து
ஒவ்வொரு ரூபாயாய்
உழைத்த
பணம்
என்னிடம்
கொஞ்சம் உண்டு.
**
நண்பா வா!
உன்னிடம்
எவ்வளவு உண்டு?
**
இரண்டு பேரும்
ஆயுதம் விற்கும்
இடத்திற்குப் போவோம்!
**
கை நிறைய
வாங்குவோம்,
ஏன்,
முதுகிலும்
இடுப்பிலும் கூடச்
சொருகுவோம்!
**
இப்போது வா!
இரண்டு பேரும்
மாறி மாறி
ஆளையாள்
யுத்தம் புரிவோம்!
**
நிச்சயம்
நம்மில் ஒருவர்
இறந்திருப்பர்....
**
எஞ்சிய ஆயுதங்களை
எதிரியிடம்
கொடுத்து
உன்னையே
சுடச் சொல்!
**
இப்போது
உன் ஆத்மா,
என் ஆத்மா,
எம் இனத்தின் ஆத்மா
எல்லாமே
சாந்தியடைந்திருக்கும்!

மாரிமுத்து யோகராஜன்-
மட்டக்களப்பு.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கானா'

23.05.99 முதல் 29.05.99வரை

**மேடம்:**
ஜென்மவீட்டில் சனியும் குருவும் இணைவது உடலில் நோய் துனபங்களைக் கொடுக்கும். எடுத்த விடயங்கள், கல்வி முயற்சிகள் பின்தள்ளிப் போகும். மனதில் உறுதி காணப்படமாட்டாது. பரணி நட்சத்திரக்காரர் அவதானமாக நடக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 2
அதிஷ்ட திகதிகள் : 29, 25.

**இடபம்:**
கிரக பலம் ஓரளவு உள்ளதால் எதிர்பார்த்த ஒரிரு விடயங்கள் கைகூடும். குடும்ப அமைதி காணப்படும். தொழில், பண விடயங்கள் சிறுசிறு சிக்கல்களைக் கொடுக்கும். உறவினர்களின் உதவி கிடைக்கும். ரோகினி நட்சத்திரக்காரர்களுக்கு சிறிதளவு பணம் வந்து சேரும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இள மஞ்சள்; எண்: 1.
அதிஷ்ட திகதிகள் : 23, 24.

**மிதுனம்:**
வியாழன், சனி முறையே 11ம் வீட்டில் கிரக ஸ்தான பலம் கொள்வதால் தடைப்பட்ட கருமங்கள் கைகூடும். புதிய முயற்சி கைகொடுக்கும். தொழில், கல்வி, பண உதவி என்பன சீர்சிறப்படையும். திருவாதிரை நட்சத்திர திருமணமாகாத ஆண், பெண்களுக்கு திருமண பந்த அமைப்பைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம் பச்சை; எண்: 9.
அதிஷ்ட திகதிகள் : 23, 27.

**கடகம்:**
கிரகசாரச் செறிவு குறைவதால் எதிலும் பதற்றம் காணப்படும். மனதில் சிக்கல் தோன்றும். உறவினர்களிடையே கருத்து மோதல்களைக் கொடுக்கும். பணச் செலவுகள் இருக்கும். கல்வி, தொழில் சீராக அமையும். பூச நட்சத்திரக்காரருக்கு ஓரளவு இலாபம் கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இள ஊதா; எண்: 1.
அதிஷ்ட திகதிகள் : 23, 28.

**சிம்மம்:**
சனிவியாழன் 7ம் வீட்டில் பாக்கியஸ்தானத்தில் உள்ளதால் எடுத்த கருமங்கள் வெற்றியளிக்கும். பிரயாணங்கள் கைகூடும். காதல் திருமண தடைகள் விலகும். மக நட்சத்திரக்காரர்களுக்கு யோகமான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம்: மருண் வர்ணம்; எண்: 1.
அதிஷ்ட திகதிகள் : 28, 24.

**கன்னி:**
அட்டமஸ்தானத்தில் கிரகபலம் குறைவது மனதில் கஷ்டத்தைக் கொடுக்கும். எதிலும் நம்பிக்கை வர மாட்டாது. தொழில், பண நிலைகள் நெருக்கடிகளைக் கொடுக்கும். அத்த நட்சத்திரப் பெண்கள் அவதானமாக நடந்து கொள்ளவும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண் : 4.
அதிஷ்ட திகதிகள் : 26, 28.

**துலாம்:**
வியாழன் களத்திர ஸ்தானம் புகுவதும் கிரக சிறப்புப் பெறுவதும் குடும்பத்தில் தடைப்பட்ட விடயங்கள் கைகூடும். திருமண மற்றும் காதல் தடைகள் புதிய முயற்சிகள் கைகூடும். நெடுநாள் கனவு பலிக்கும். சுவாதி நட்சத்திரப் பெண்களுக்கு யோகமான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : ரோஸ் வர்ணம்; எண் : 5.
அதிஷ்ட திகதிகள் : 23, 28.

**விருட்சிகம்:**
எதிலும் அவசரப்படாது செயற்படவும். நெடுநாள் எதிர்பார்த்த செய்தி அல்லது விபரம் கிடைக்கப் பெறும். பண வரவு, நன்றாக அமையும். கேட்டை நட்சத்திரக்காரருக்கு குடும்பத்தவருக்கு சுப செய்திகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இள நீலம்; எண்: 6
அதிஷ்ட திகதிகள் : 24, 29.

**தனசு:**
வியாழன் 3ம் இடம் செல்வதாலும் சனி 'கிரக' பலம் நீசம் அடைவதாலும் புதிய வசதி வாய்ப்புக்கள் தோன்றும். கல்வி முன்னேற்றம் அடையும். பணம் வந்து சேரும். உத்திராடம் 1ம் பாத நட்சத்திரக்காரர்களுக்கு பண உதவி கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண் : 3.
அதிஷ்ட திகதிகள் : 29, 28

**மகரம்:**
எதிலும் கவனத்துடன் செயல்படவும். மனதில் சிக்கல் அவ்வப்போது வந்து போகும். கல்வி ஓரளவு நன்றாக இருக்கும். திருவோண நட்சத்திரம் கொண்டோர் கவனம் செலுத்தவும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை, எண் : 6.
அதிஷ்ட திகதிகள் : 24,27.

**கும்பம்:**
உடலில் நோய் துன்பங்கள் காணப்படும், எதிர்பார்த்த உதவி கிடைக்காது. மனதில் விரக்தியான நிலை காணப்படும். அவிட்டம், சதய நட்சத்திரப் பெண்கள் கவனமாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : சாம்பல் வர்ணம்; எண் : 3.
அதிஷ்ட திகதிகள் : 23, 28.

**மீனம்:**
வியாழன் 2ம் இடம் குடும்பஸ்தான அமைப்பும் ஏழரைச் சனி தாக்க குறைவும் முகம் மலர்வைக் கொடுக்கும். எதிலும் நம்பிக்கை பிறக்கும். எடுத்த கருமங்கள் கைகூடும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 5.
அதிஷ்ட திகதிகள் : 26,27.

27.05.1999 வியாழன் வக்கிர கதியில் மேட ராசியில் புகுவதால் அவர் 02.06.2000 வரை மேடராசியில் நிற்பார்.
* மீனம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு இராசியினருக்கு நற்பலன்களையும் சிறப்பையும்,
* கடகம், மகர இரசியினருக்கு மத்திம பலன்களையும்
* மேடம், இடபம், கன்னி, விருட்சிகம், கும்பம் இராசிக்காரருக்கு அசுப பலன்களையும் கொடுக்கும்.

## முரசின் 300 பரிசுமழையில் வெற்றியீட்டியவர்கள் இவர்கள்தான்!

1. ரி.சதானந்தன்,
இல.207, பஸார் வீதி, சிலாபம்.
2. ச.கிருஷ்ணன்,
தீகவாபி வீதி, மாணிக்கமடு, இறக்காமம்.
3. மு.முகுந்தன்,
வன.இலாகா, பசறை வீதி, பதுளை.
4. எம்.பரமேஸ்வரி,
ஐஸ் லெபி எஸ்டேட், பண்டாரவளை.
5. ந.விமலராணி,
இல.56, பன்சல வீதி, அட்டன்.
6. ஞா.பாக்கியராஜா,
கோளாவில்.01, அக்கரைப்பற்று.கி.மா.
7. து.சிறிஸ்கந்தா,
இல. 532/1, கண்டி வீதி,
தெலியாகொன்ன, குருநாகல்.
8. அ.கேதீஸ்வரன்,
118/37, அந்தோனியார் வீதி,
நீர்கொழும்பு வீதி, வத்தளை.
9. எம்.எம்.பி.ருபீஸ்,
661, கெப்பிடிய, கலேவல.
10. ருவைஸா ராபி,
62, முஸ்லிம் கொலனி, கதுருவெல,
பொலன்னறுவை.
11. ஆ.உதயகுமார்,
மல்டி அச்சகம், 54, மன்னார் வீதி,
புத்தளம்.
12. பாத்திமா ரொசானா,
70/12, மலபார் வீதி, கம்பொல.
13. ஏ.முகமட் ராபி,
நெடுந்தீவு-06, கிண்ணியா.
14. எ.எம்.எஸ்.துர்காதாரணி,
கல்வித் திணைக்களம், வவுனியா.
15. ஜே.பலீலா,
இல.6, யூ.சி.விடுதி, காந்தி நகர்,
திருகோணமலை.
16. எஸ்.அர்ச்சுனன் மரியசெலீனா,
டின்சின் தோட்டம், பொகவந்தலாவ.
17. எஸ்.எ.்.ப்.றிஸானா,
பாடசாலை வீதி, புதிய காத்தான்குடி-01.
18. திருமதி தெய்வானை வீரையா,
இல.50/30, ஜினவம்ச மாவத்தை,
அவிசாவளை.
19. எல்.பிலிப்குமார்,
டெல்வின் 'பி' பிரிவு, இறக்குவானை.
20. க.வசந்தி,
32/10, மலபார் வீதி, கம்பளை.
21. எம்.ஐ.ஹரிதா,
இல. 91, மதரசா வீதி, கல்முனை-06.
22. பி.டி.கே.வில்லியம்,
316, பாடசாலை வீதி, கொதலாவெல,
கடுவெல.
23. எஸ்.தங்கராஜா,
மொட்டிங்ஹேம் எஸ்டேட், பிரவுன்ஸ்விக்
குருப், மஸ்கெலியா.
24. டி.தமிழரசி,
இல.22, 14வது வீதி, மஸ்கெலியா.
25. எம்.எ.்.ப்.செய்த்துன்,
41, பகல கம்மெந்த, குமுக்கந்துறை, தெல்தெனிய.
26. ச.துஷாந்தினி,
டபிள்யூ,பி.எல்.தரவளை சப் ஒப்பீஸ், டிக்கோயா.
27. வி.ஞானேஸ்,
தொட்டுலாகலை கிராமம், அப்புத்தளை.
28. எம்.ஸ்ரீதேவி,
றை, இல.01, பலாங்கொடை.
29 எஸ்.பிரபாகன்,
மாதெனிய ரி.டி., வறக்காபொல.
30. எம்.சுசிதரன்,
125/21, கடற்கரைத்தெரு, நீர்கொழும்பு.
31. சீ.சிவநேசன்,
இன்பருட்டி பிள்ளையார் வீதி, பருத்தித்துறை.
32. எஸ்.சோபா,
மத்திய வீதி, பட்டித்திடல், தோப்பூர்.
33. இரா.ரமேஷ்காந்தன்,
விபுலாந்த வீதி, வாழைச்சேனை.
34. ஜெ.தினகரன்,
8ம் வட்டாரம், பேசாலை, மன்னார்.
35. அ.இந்திரா,
இல.178, சுங்க வீதி, திருகோணமலை.
36. ஈ.ஏ.சர்வேஸ்வரன்,
துறைநீலாவணை-08, துறைநீலாவணை (கி.மா)
37. ருக்ஷிகா தேவராஜா,
357/1, திருமலை வீதி, தாண்டவன்வெளி,
மட்டக்களப்பு.
38. யு.கணபதி,
அம்பாறை வீதி, மல்வத்தை-01.
39. எம்.ஆர்.எம்.சஹீல்,
27/4, 14வது ஒழுங்கை, ஜினானந்த
மாவத்தை, கொட்டாஞ்சேனை.
40. ஏ.கே.சாஜஹான்,
றியோ டெக்ஸ், குருநாகல் சந்தி, தம்புள்ள.
41. ஜி.சகுந்தலா,
இல.70, குரேசட் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
42. எம்.எ.்.ப்.எம்.பாயிஸ்,
43கே, புதிய பள்ளிவாசல் வீதி, களுத்துறை.
43. ஜெஸிந்தா அந்தனி,
294,1/1, காலி வீதி, கொழும்பு-04.
44. எஸ்.என்.தமயந்தி,
3/3, தபாலக வீதி, பதுளை.
45. ஆர்.மகேஸ்வரி,
17, பெரெக் வீதி, கொழும்பு-02.
46. கே.பாலசந்திரன்,
42, பொஸ்வல் பிளேஸ், வெள்ளவத்தை.
47. முகமட் முஸ்னி,
இல.2, கண்டி வீதி, மடவளை பஸார்.
48. ஏ.ஜெ.ஏ.அஸ்ஜதி,
794, பிரதான வீதி, கதுறுவெல.
49. A.NANTHARUBAN
7 PASSAGE DE LA MAIN D'OR, 75011 PARIS,
FRANCE.
50. S.SUGIRTHA
USTERSTRASSE-46, 8330 PRAFFIKON ZH, SWISS.

ஏனையோர் விபரம் அடுத்த முரசில்

## நில்-கவனி-முன்னேறு



மீசை வைத்துக் கொள்ளத் தடை விதித்தால் பல அராஜகங்கள் குறையக் கூடும்.

மீசை இருந்தாலும் இல்லாவிட்டாலும் மனிதன், மனிதனாக இருக்கலாம். தனது அச்சத்தைப் போக்கிக் கொள்ளவோ பிறரை அச்சப்படுத்தவோதான் மனிதன் மீசை வளர்க்கிறான்.

ஆண்மை என்பது மீசையில்தான்- அதுவும் கொடுவாள் மீசையில்தான் இருக்கிறது என்று எண்ணுவது தவறு. பெண்களுக்கு அப்படியெல்லாம் மீசை கிடையாது. அவர்களில் எவ்வளவோ பேர் பிரதமராகவோ, அமைச்சராகவோ, பொலிஸ் உயர் அதிகாரியாகவோ திறம்படப் பணியாற்றியிருக்கிறார்கள். சாதனை புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

மீசைக்கும், வீரத்துக்கும் துளியும் சம்பந்தம் கிடையாது.

கொள்ளைக்காரன், கொலைகாரன் என்றால் அவனுக்கும் பிரம்மாண்ட மீசை- யாரோ பழக்கி விட்டார்கள்.

மனிதனின் அகங்காரத்திற்கும் முடி வளர்ப்புக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டுபோலும். அதனால் தான் கடவுளுக்கு முடியைக் காணிக்கையாக்குகிறோம்.

சிறையில் கைதிகளுக்கு மொட்டை அடிப்பதும் அவர்களது திமிரைக் குறைக்கத்தான்.

பௌத்த சன்னியாசிகளும் துறவிகளும் மழுங்க மொட்டையடித்துக் கொண்டது தங்களது அகங்கார மமகாரங்களை நீக்கிக் கொள்ளவே.

இந்த ரிஷிகள் மீசையுடன் தாடியும் வளர்த்தார்கள். மீசையின் கர்வத்தையும் மிடுக்கையும் தாடி சமனப்படுத்தி விடுகிறது. மீசை தனியாக இருந்தால் ரொம்பத் துள்ளும். ஆனால் தாடியின் அடர்த்தியில் அது இருக்குமானால் அது அடக்கமாகவே இருக்கும்.

ஐயோ, நமக்குப் போதுமான அளவு மீசை வளரமாட்டேன்கிறதே என்று யாரும் கவலைப்பட வேண்டாம். அது வளர்வானேன்? நீங்கள் அதை முறுக்கிக் கொண்டு கர்வத்துடன் திரிவானேன்?

**பிரகஸ்பதி**



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## சமையலோ சமையல்



* காய்கறிகளை வாடவிடாமல் சமையலுக்குப் பயன்படுத்துங்கள். வாடிப்போகும் காய்கறிகளால் உடலுக்குப் பலன் ஒன்றுமில்லை.

* காய்கறிகள் வாடிப்போனால், அதனைச் சமைப்பதற்கு முன் 10 நிமிடம் வினிகர் கலந்த தண்ணீரில் வைத்திருங்கள். காய்கறிகள் புதிதுபோல் ஆகிவிடும்.

* பெரிய வெங்காயத்தை நறுக்கி விட்டு மிச்சம் இருந்தால் வெட்டப்பட்ட பகுதியில் சிறிதளவு வெண்ணெய் தேய்த்து வையுங்கள். கெட்டுப்போகாது.

* டின்களில் அடைத்து வைத்திருக்கும் 'பிஸ்கட்' நமுத்துப் போகாமல் இருக்க அதில் சில அரிசிகளைப் போட்டு வையுங்கள்.

* முட்டையின் வெளி ஓட்டில் சிறிதளவு எலுமிச்சம்பழச்சாற்றைப் புரட்டிவிட்டு, வேக வைத்தால் வேகும்போது முட்டை உடையாது.

* துவரம் பருப்பு ஒன்றாக, நன்றாக வேக வேண்டுமானால் அத்துடன் ஒரு துண்டு தேங்காய் சேர்த்து வேக வையுங்கள்.

* வாழைக்காய் நறுக்கும்போது கையில் கறை படியாமல் இருக்க, கையில் சிறிதளவு உப்புநீர் புரட்டிக் கொள்ளுங்கள்.

* பெரிய வெங்காயத்தை வெட்டிக் கத்தியில் தேய்த்தால், கத்தியில் இருக்கும் துருவும் அழுக்கும் நீங்கும்.

* வாணலியில் அழுக்கும் எண்ணெய்த் தன்மையும் அதிகம் இருந்தால் அதிக உப்புத்தூள் சிதறிச் சூடாக்கி, பேப்பரால் துடைத்து எடுத்தால் நீங்கிவிடும்.

* சூப், தண்ணீர்போல் இருந்தால் உருளைக்கிழங்கை வேகவைத்துப் பிசைந்து சேர்த்துக் கொள்ளுங்கள்.

## இரத்த சோகை

பெண்களை அதிகம் பாதிக்கும் நோய்களில் ஒன்று இரத்தச் சோகை. கர்ப்பிணிப் பெண்களில் 50 சதவீதம் முதல் 80 சதவீதம் பேர் வரையானோர் இரத்தச் சோகையில் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

இரத்தச் சோகையைத் தடுக்க 10முதல் 19 வயது வரையான பெண்களுக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இவர்களுக்கு இரும்புச்சத்துள்ள மாத்திரைகள் வழங்கப்படுகிறது. இதனால் இரத்தச்சோகை நோயைக் குணப்படுத்தலாம்.

இந்தப் பெண்கள் பின்னர் கர்ப்பமாகும் போது இரத்தச் சோகை இல்லாமல் இருப்பதற்காகவே இளம் வயதில் இவர்களுக்கு இந்த நடவடிக்கை பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்றது. இதை 'யுனிசெப்' அமைப்பு நடத்தி வருகின்றது.

இளம்பெண்கள் தானியங்கள், பயறு வகைகள் மற்றும் கீரை வகைகளை அதிகம் உண்ண வேண்டும். கர்ப்பிணிப்பெண்களின் உடல் நிறை குறைந்த பட்சம் 42 கிலோவாக இருக்கவேண்டும்.

மேலும், இரும்புப் பாத்திரங்களில் உணவு சமைத்து உண்பவர்களுக்கு இரும்புச் சத்து கூடுதலாக இருக்கும். குறிப்பாக காய்கறிகளை இரும்புச்சட்டிகளில் சமைத்துண்ண வேண்டும்.

## கர்ப்பிணிகளுக்கு...

* கர்ப்பமாக உள்ள பெண்கள் அஸ்பிரின் கலந்த மருந்துகளை உபயோகிப்பதால் பிறக்கும் குழந்தைகளுக்கு மஞ்சள் காமாலை நோய் வர வாய்ப்பு உள்ளது.

* கர்ப்பமாய் இருக்கும் பெண்கள் நாள்தோறும் சுண்ணாம்புச்சத்து உள்ள பொருட்களைச் சேர்த்து வந்தால், இரத்தக் கொதிப்பு தனக்கும், குழந்தைக்கும் வராமல் தடுக்கலாம்.

* கர்ப்ப காலத்தில் விட்டமின் மாத்திரைகளை அதிக அளவில் பயன்படுத்துவதால் பிறக்கிற குழந்தைகளுக்கு பார்வைக் கோளாறு, மூளைக்கோளாறு ஆகியவை ஏற்பட வாய்ப்புண்டு.

## வெள்ளரிக்கா பிஞ்சு வெள்ளரிக்கா



❊ வத்தகைப்பழம் (தர்ப்பூசணி) வறட்சியைத் தணித்து, உடலுக்கு நல்ல குளிர்ச்சியை அளிக்கவல்லது. சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கும், பசியின்மை, மலச்சிக்கல் முதலியவற்றிற்கும், பெண்களின் மாதவிடாய் கோளாறுகளுக்கும் வத்தகைப் பழச்சாறு மிக நல்லது.

❊ வெள்ளரிக்காய்களை துண்டு துண்டாக வெட்டி ஒரு பாத்திரத்தில் போட்டு மோர் ஊற்றி, அதில் கொத்துமல்லி இலை அல்லது கறிவேப்பிலையுடன் இஞ்சியையும் மணக்கப்போட்டு உச்சிநேர வெய்யிலில் இரண்டு டம்ளர் பருகிப் பாருங்கள். குளுகுளு என்று குளிர்ச்சியாக இருக்கும். கோடை கால வெப்பத்தால் சிறுநீரகம் பாதிக்கப்படாமல் பாதுகாப்பாக இருக்க வெள்ளரிக்காயிலுள்ள பொட்டாசியம் உதவுகின்றது.

❊ நன்னாரி வேர்களை சிறு சிறு துண்டுகளாக வெட்டி பானை நீரில் அதனைப் போட்டுக் குறைந்தது ஆறு மணிநேரம் நன்கு ஊறியபின் பருகி வர, கோடை கால வெப்பத்தால் உடம்பில் தோன்றும் வேர்க்குருவும், வேனல் கட்டிகளும் வராது. உடலும் குளிர்ச்சியாக இருக்கும்.

❊ மீதமாகும் சோற்றில் இரவு தண்ணீர் ஊற்றி, மதிய வேளையில் சிறிது நல்லெண்ணெய் ஊற்றி சாப்பிடுங்கள். சுவையாக இருப்பதுடன், இது பலவித சத்துக்களும் கொண்டது. இதில் உடலுக்கு சத்துச் சேர்க்கும் விட்டமின்களும், அமைலேஸ் புரொட்டியோஸ், மீத்தியோனைன், சில்டைன், தயமின் போன்ற என்சைம்களும் உள்ளன.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FT

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 29-05-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

**88** புவனா



இளவரசி டயானா பாரிசில் வந்து இறங்கி விட்டார் என்ற தகவல் ஃபிரான்ஸ் அரசுக்கும் எட்டியிருந்தது.

ஃபிரான்ஸ் நாட்டுக்கு வரும் வெளிநாட்டுப் பிரமுகர்கள், இராஜதந்திரிகள் ஆகியோருக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக தனியான அமைப்பு ஒன்று இருக்கிறது.

சிறப்புப் பயிற்சி பெற்ற உறுப்பினர்கள் அதில் உள்ளனர். அதனை ஆங்கிலத்தில் SPHP என்று அழைப்பார்கள்.

இளவரசி டயானா பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் முன்னாள் உறுப்பினர் என்பதாலும், வரும் காலத்தில் ஆட்சி பீடம் ஏறப்போகும் இளவரசர்களது தாய் என்பதாலும் சிறப்புப் பாதுகாப்பு படையினர் அவருக்கு பாதுகாப்பு கொடுக்க முன்வந்தனர்.

சிறப்புப் பாதுகாப்பு பிரிவின் அதிகாரி டோடி குடும்பத்துடன் தொடர்பு கொண்டார்.

"ஏதாவது உதவி தேவையாக இருக்கிறதா? பாதுகாப்பு தேவையா?" என்று கேட்டிருக்கிறார்.

"தனிப்பட்ட ஓய்வுக்காக இங்கு வந்துள்ள இளவரசி, வேறு குறுக்கீடுகளை விரும்பவில்லை" என்று அந்த அதிகாரிக்கு கூறப்பட்டது.

உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்பட்டால்தான் அவர்கள் பாதுகாப்பு கொடுக்க முடியும். எனவே ஒதுங்கிக் கொண்டனர்.

அவர்களுக்கு மட்டும் அனுமதி கொடுத்திருந்தால், டயானாவின் விபத்தில் ஏற்பட்ட

ஒருவரை ஒருவர் இறுக அணைத்தபடி ஒருவர் காதுக்குள் ஒருவர் இன்ப வார்த்தைகளை ஓதிக்கொண்டிருந்தனர்.

டோடியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பணியாளர்கள் சிலரே அங்கிருந்தனர். டோடியும் டயானாவும் ஆரத்தழுவுவதும், உதடுகளை உரசி மகிழ்வதும் பணியாளர் கண்களுக்கும் தென்பட்டது.

உணவு அருந்தும்போது டயானா தன் உதட்டில் ஆப்பிள் துண்டு ஒன்றை வைத்திருக்க, டோடி தன் உதடுகளால் அதனை சுவைத்து மகிழ்ந்தார்.

பணியாளர்களது நடமாட்டம் பற்றி அவர்கள் பொருட்படுத்தவில்லை. இருவருமே உலகை மறந்துபோகுமளவுக்கு அதீதமான சந்தோசத்தில் மிதந்து கொண்டிருந்தனர்.

## இனிமையான நாள்

அன்று நடைபெறும் ஒவ்வொரு சம்பவத்தையும் இருவரும் ஆழ்ந்து இரசித்தனர். மறக்க முடியாத சம்பவங்களாக எண்ணி மகிழ்ந்தனர்.

டோடியின் ஆசைகளுக்கு எவ்வித மறுப்பும் சொல்லாது இசைவு காட்டினார் டயானா.

டயானாவின் மடிமீது தலைவைத்து கண்களை மூடியபடி நீண்டநேரம் படுத்துக் கிடந்தார் டோடி.

பின்னர் டயானாவை அணைத்தபடி படுக்கை அறைக்குள் புகுந்துகொண்டார். ஒரு மணி நேரத்தின் பின்னரே அறையை விட்டு வெளியே வந்தார் டோடி.

பானம் கொண்டுவருமாறு பணியாளர்களிடம் கூறினார். அதன் பின்னர் களைத்திருந்த டயானா சிறிது நேரம் தூங்கினார்.

அந்த நேரத்தில் தனது நண்பர்கள் சிலருடன் மிக மகிழ்ச்சியாக தொலைபேசியில் டோடி உரையாடினார்.

"திருமணச் செய்தி விரைவில் அறிவிக்கப்படும். அந்தப் பொன்னாளுக்காக காத்திருங்கள்!" என்று தனக்கு மிக நெருக்கமான நண்பர்கள் சிலரிடம் கூறினார்.

## பயணம்

டயானா குட்டித்தூக்கம் போட்டு எழுந்ததும், ரிட்ஸ் ஹொட்டலுக்குப் புறப்பட

# விலை உயர்ந்த மோதிரம்

சந்தேகங்களுக்கும், மர்மத்துக்கும் இடமிருந்திருக்காது.

## அல் ஃபாயிட் பெருமிதம்

பாரிஸ் நகரில் ரிட்ஸ் ஹொட்டல் இயக்குநரான பிராங் கிளிங்க் டோடியின் தந்தையின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்.

அல் ஃபாயிட் தனது பல வர்த்தக நிறுவனங்களது பொறுப்பை ஃபிராங் கிளிங்கிடம் ஒப்படைத்திருந்தார்.

தனது மகன் டோடி இளவரசி டயானாவை கைப்பிடிக்கப் போகிறார் என்றும், இருவரும் வின்சர் கோமகனின் மாளிகையில் வாழப்போவதாகவும் அவரிடம் அல் ஃபாயிட் கூறியிருந்தார்.

டயானாவுக்காக டோடி செய்திருந்த மோதிரம் பற்றியும் அல் ஃபாயிட் தனது நண்பரிடம் கூறத்தவறவில்லை.

பாரிசில் உள்ள பிரபல நகைமாளிகையான 'அல்பேட்டோ ரெப்பொஸ்ஸி' என்ற நகை மாளிகையில்தான் மோதிரம் செய்யப்பட்டது.

அதனை செய்து முடிக்க 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

தங்கத்தாலான அம் மோதிரத்தில் வைரக்கற்கள் முக்கோண வடிவில் அமைக்கப்பட்டிருந்தன. அதன் நடுவே மரகதக் கல் ஒன்றும் பொருத்தப்பட்டிருந்தது.

சாள்ஸ், டயானா திருமணத்தில் டயானாவுக்கு சாள்ஸ் அணிவித்த மோதிரம் பற்றியும் பெரிதாகப் பேசப்பட்டிருந்தது.

அதனைவிட விலை உயர்ந்ததும், அழகியதுமான மோதிரமாக இருக்க வேண்டும் என்பதே அல் ஃபாயிட்டின ஆசை. டோடியின் ஆசையும் அதுதான்.

## புறப்படமுன்னர்

தமக்குச் சொந்தமான ரிட்ஸ் ஹொட்டலுக்கு டயானாவை அழைத்துச் செல்ல டோடி விரும்பினார். அங்கு அல் ஃபாயிட் அவர்களுக்காக காத்திருந்தார்.

ஹொட்டலுக்கு புறப்பட முன்பாக டோடி தன் காதலை மென்மையான வார்த்தைகளால் விபரித்தார்.

அந்த வார்த்தைகளை பல நாட்களாக யோசித்து யோசித்து தேடிப்பிடித்து வைத்திருந்தார் டோடி.

தனக்குள் இன்பத்தை வாரியிறைத்த டோடியின் காதல் வார்த்தைகள் டயானாவுக்கு ஆனந்தமாயிருந்தன.

டோடியின் மடியில் தலைவைத்து சாய்ந்து கொண்டார் டயானா. இருவரும்



ஆயத்தமானார்கள்.

மீண்டும் ஒரு தடவை இருவரும் பிரமாண்டமான குளியலறையில் சேர்ந்து குளித்தனர்.

டயானாவின் உடற்கட்டு மிக வசீகரமானது. உடற்பயிற்சிகளால் அங்கப் பொலிவுகளை எடுப்பாக வைத்திருந்தார். டோடிக்கு டயானாவுடன் நீரில் களியாட்டம் போடுவதும், சீண்டி விளையாடுவதும் இன்பமாக இருந்தது.

குளித்து முடித்ததும் இருவரும் ரிட்ஸ் ஹொட்டலுக்கு காரில் புறப்பட்டனர்.

ரிட்ஸ் ஹொட்டலில் இருந்து நேராக விமான நிலையம் சென்று, மறுநாள் தன் பிள்ளைகளை சந்திக்க முடிவு செய்திருந்தார் டயானா.

தனது பிள்ளைகளிடம் தனது திருமண முடிவை மறுநாள் அறிவித்துவிட்டு, அதன் பின்னரே உலகறிய தெரிவிக்க வேண்டும் என்று டயானா திட்டமிட்டிருந்தார்.

அந்த முடிவை டோடியும் ஏற்றுக் கொண்டார். "பத்திரிகைகள் வாயிலாக அவர்கள் அறிவது முறையல்ல. அதனால் அவர்களது மனநலம் பாதிப்படையும். முதலில் அவர்களுக்கு நல்ல முறையில் கூறிவிட்டு பின்பு பகிரங்கமாக கூறலாம்" என்று டோடியும் அபிப்பிராயப்பட்டார்.

## ஒற்றுமை

தனக்கும் டோடிக்கும், பல விடயங்களில் கருத்து ஒற்றுமை இருப்பதை எண்ணி டயானா மகிழ்ந்தார்.

புறப்படமுன்னர் பணியாளர்கள் அனைவருக்கும் தன் அன்பை தெரிவித்தார் டயானா.

இளவரசி தம்மீது அன்பு காட்டியதை எண்ணி பணியாளர்கள் மகிழ்ந்தனர்.

"என் ஞாபகமாக இங்கு கரடிப் பொம்மை ஒன்றையும், முயல் பொம்மை ஒன்றையும் விட்டுச் செல்கிறேன்" என்று கூறினார்.

என்றென்றும் அது ஞாபகச் சின்னமாக மாறப்போகிறது என்பதை அப்போது அவர் அறிந்திருக்கவில்லை.

கையசைத்தபடி காரில் ஏறி, டோடிக்கு அருகே அமர்ந்தார் டயானா.

ரிட்ஸ் ஹொட்டலை நோக்கி பாரிஸ் நகர சாலைகளில் கார் வழுக்கிச் சென்று கொண்டிருந்தது.

**(அடுத்த வாரமும் வரும்)**

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### திஹாரிய வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் ☞ | எம்.ஏ.எஸ்.றினோஸா, 421/1, துல்மல, திஹாரிய. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## அம்மன் ஜுவல்ஸ்–முரசு இணைந்து வழங்கும்

### வைர மோதிரப் போட்டி

- முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
- பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
- இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன்–முரசு ௭ வைர மோதிரப் போட்டி





படிப்பகம்

www.padippakam.com



அறிவு கொண்ட மனித உயிர்களை
அடிமையாக்க முயல்பவர் பித்தராம்;
நெறிகள் யாவிலும் மேம்பட்டு மாநிடர்
நேர்மை கொண்டு உயர் தேவர்கள்
ஆவதற்கே!

-சுப்பிரமணிய பாரதியார்.



# வறுமையை விற்றவர்

**பாப்பா முரசு சிறுகதை**

நெடுமாறன் என்ற மன்னன் நாள்தோறும் காலையில் முதலாவதாக எந்தப் பொருளைக் கொண்டுவந்து விற்றாலும் அதை வாங்கிக்கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தான்.

நெடுமாறன் ஆட்சி புரிந்த நாட்டில் ஓர் ஏழை அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் தன் குடும்பத்தைக் காப்பாற்ற மிகவும் கஷ்டப்பட்டார்.

அதனால் தன் வறுமையை இல்லா தொழிக்க என்ன செய்யலாம் என்று யோசித்தார். மன்னன் நெடுமாறனின் வழக்கத்தைக் கேள்விப்பட்ட அந்தணர் தன் வறுமையை மன்னனுக்கு விற்பது என்று தீர்மானித்தார்.

ஒருநாள் அதிகாலையில் அவர் தனது வீட்டில் இருந்த கிழிந்த துணிக்குள் கந்தல் துணிகளையும் பழைய செருப்புக்களையும், உடைந்த பானைத்துண்டுகளையும் வைத்து மூட்டையாகக் கட்டினார்.

அந்த மூட்டையைத் தலைமேல் தூக்கிக்கொண்டு அரண்மனையை நோக்கி நடந்தார்.

அரண்மனை வாயிற்காப்போன், அந்தணரை உள்ளே செல்லவிடாமல் தடுத்தான்.

"மன்னருக்கு அபூர்வப் பொருட்களை விற்கப் போகிறேன்" என்று சொல்ல அவனும் அவரை உள்ளே செல்ல அனுமதித்தான்.



மன்னரும் அந்தணர் என்ன பொருட்களைக் கொண்டு வந்திருக்கிறார் என ஆவலோடு துணி மூட்டையைப் பிரித்துக் காட்டச் சொன்னான்.

அந்தணர் மூட்டையைப் பிரிக்க உள்ளே இருந்தவற்றைப் பார்த்த மன்னன்,

"என்ன இது?" என்று கேட்டான்.

"அபூர்வப் பொருட்கள்" என்று சொன்னார் அந்தணர்.

"இவை அபூர்வப் பொருட்களா?" என்று ஆச்சரியமாகக் கேட்டான் மன்னன்.

"ஆமாம் மன்னா! இது என் வறுமை. பரம்பரையாக எங்களோடு இருக்கும் சொத்து," என்று கூறினார் அந்தணர்.

மன்னன் நெடுமாறனுக்கு அந்தணரின் வறுமை நிலை நன்கு விளங்கியது. அவன் அந்தணரைப் பார்த்து,

"சரி. இதன் விலை என்ன?" என்று கேட்டான்.

அதற்கு அந்தணர்,

"மன்னா! இதன் விலை ஆயிரம் பொற்காசுகள்" என்று சொன்னார்.

மன்னனும் சரியென்று அந்தணரிடம் இரண்டாயிரம் பொற்காசுகள் கொடுத்து மூட்டையை வாங்கிக் கொண்டான்.

அதன் பின்னர் அந்தணர் வறுமை நீங்கி மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்.

# அதிசயம் - ஆனால் உண்மை!

➡ இத்தாலியில் உள்ள முஸ்லோ அரண்மனை மலைமீது அமைந்துள்ளது. கீழிலிருந்து உச்சிவரை வழி நெடுக பல கோட்டைகள், தூபிகள், கோபுரங்கள் உள்ளன. கோபுரங்களுடன் ஒரு நீண்ட மதில் உள்ளது. இது கீழிலிருந்து மேல்வரை வளைந்து வளைந்து செல்கிறது.





⬅ இங்கிலாந்து குதிரை போட்டியாளர் மைக்கல் மாரிலே குதிரைப் பந்தயம் நடக்கும்போது தனது குதிரையிலிருந்து ஒரே தாவலில் பாய்ந்து ஓடிக் கொண்டிருந்த வேறொரு குதிரையின் மீது அமர்ந்தான்.



➡ வொட்டே ஃப்சுட்டிகன் என்ற சிறுமி சுவிற்ஸர்லாந்தில் பனி மூடிய 13 ஆயிரத்து 234 அடி உயரமான மலையொன்றின்மீது 8 மணிநேரத்தில் ஏறினாள். அப்போது அவளது வயது 8.

# விசித்திர விலங்கு



படத்தில் இருக்கும் இந்த விலங்கு பார்ப்பதற்கு மான் போன்று காணப்படும்.

உண்மையில் இது மான் இனத்தைச் சேர்ந்ததல்ல. மேற்கு ஆபிரிக்காவில் வாழும் இதன் பெயர் 'செவ்ரோடைன்'.

இதன் முக்கிய உணவு புல். இது சிறு பூச்சிகளையும் உண்ணும். இது ஒரு அடி உயரமும், ஆறு இறாத்தல் நிறையும் கொண்டது. இதற்கு மான்களைப் போல் கால்களில் குளம்பும் உண்டு.

இவைக்கு ஆபத்து வரும்போது நீரில் மூழ்கி நீந்திச் செல்லும். அப்போது நீரில் அகப்படும் மீன்களைப் பிடித்து உண்ணும் குணமுடையது. இது விசித்திரமான விலங்குதான்.

# அறிவியல் தகவல்கள்

⬇ மனிதர்களின் கண்களுக்கும், விலங்குகளின் கண்களுக்கும் உடற்கூறு இயற்படி வேறுபாடு கிடையாது. பாவை எனப்படும் கண் மணியின் துவாரம் விலங்குகளுக்கு ஓரளவு பெரிதாக இருக்கும். விலங்கினங்களின் விழித்திரையின் பின்னால் ஒரு மெல்லிய உறை இருக்கிறது. அதனால்தான் விலங்கினங்களின் கண்களில் ஒளிக்கற்றை செலுத்தப்பட்டால் மிகப் பிரகாசமாகத் தெரிகிறது.



***

➡ மனிதர்களின் மூளை வளர்ச்சி 2 வயதாகும் போதுதான் ஏற்படுகின்றது. 6 வயதுவரை மேலும் சிறிது வளர்ச்சி இருக்கும். 6 வயதுக்குப்பின் மூளைக்கு எந்தவிதமான வளர்ச்சியும் இருப்பதில்லை.



***



⬅ ஓர் ஆண்டில் ஒளி செல்லும் தூரம் ஒளியாண்டு எனப்படும். இது சுமார் 6 இலட்சம் கோடி மைல்களாகும். பெரும்பாலான நட்சத்திரங்கள் பூமியிலிருந்து 100 ஒளியாண்டுகளுக்கு அப்பால் உள்ளன.

# ஜப்பான் புகையிரதச் செய்திகள்



❖ ஜப்பானில் மீன்களையும் முட்டைகளையும் ஏற்றிச் செல்வதற்கென்றே தனி புகையிரதங்கள் உள்ளன.

❖ ஜப்பான் புகையிரதங்களில், அலுவலகம் செல்பவர்களுக்கு வசதியாக ஆங்கிலம் கற்றுக் கொடுக்கிறார்கள்.

❖ உலகிலேயே ஜப்பான் புகையிரத நிலையங்களில்தான் அதிக தினசரிப் பத்திரிகைகள் விற்பனையாகின்றன.

❖ ஜப்பான் புகையிரத உணவகங்களில் மிஞ்சும் உணவுப் பொருட்களை வீணாக்காமல் அதில் கோழி உணவு தயாரிக்கிறார்கள்.

❖ ஜப்பான் புகையிரதம் தாமதமாகச் சென்றால் தாமதமாகும் ஒவ்வொரு நிமிஷத்திற்கும், பணம் கணக்கிட்டு அபராதமாகப் பயணிகளுக்குத் திருப்பிக் கொடுத்து விடுகின்றனர்.

❖ அம்பின் வேகத்தை அடிப்படையாகக் கொண்டு நியூஷிங்கான் என்ற புகையிரதம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் வேகம் மணிக்கு 285 கிலோமீட்டர்.

# முதலில் உருவான தீக்குச்சிகள்




இப்போதுள்ளது போன்ற தீக்குச்சிகள் 1805ம் ஆண்டில்தான் முதன் முதலாகச் செய்யப்பட்டது. இதனைச் செய்த ஃபிரெஞ்சுக்காரர், சிறு குச்சியின் முனையில் இரசாயனக் களிம்பைப் பூசி, ஒரு போத்தலில் உள்ள அமிலத்துல் தோய்த்தெடுத்தால் பற்றி எரியுமாறு செய்தார்.

பின் 1827ல் ஜோன் லொக்கர் என்ற இங்கிலாந்து நாட்டவர் உப்புத் தாளில் தேய்த்தால் எரியும் தீக்குச்சியைத் தயாரித்தார்.

இதன் பின்னர் 1831ல் சாள்ஸ் என்ற ஃபிரெஞ்சுக்காரர் மஞ்சள் பொஸ்பரஸ் சேர்ந்த தீக்குச்சியைச் செய்தார்.

இறுதியாக 1855ல் லண்ட்ஸ்ரோம் என்ற சுவீடன் நாட்டுக்காரர் தற்போது பாவிக்கும் பாதுகாப்பான தீக்குச்சிகளைக் (SAFETY MATCHES) கண்டுபிடித்தார்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **29.05.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **297**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 295

**பரிசுக்குரியவர்:**
ஆதிப் இஹ்தியாஸ்,
சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எஸ். சதீஸ்குமார், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு-4. | டி. எஸ். கிறிஸ்டோபர், கதிரேஷன் மத்திய மகா வித்தியாலயம், நாவலப்பிட்டி. |
| ரெட்ணச்சந்திரா சண்முக லிங்கம், ஊறணி சரஸ்வதி வித்தியாலயம், மட்டக்களப்பு. | பாதிமா நுஸ்லா, மதீனா தேசிய பாடசாலை, மடவளை பசார். |
| ஆர். விமல் பிரசாத், 51 வெகந்த வீதி, கொழும்பு-02. | த. யுவராஜா, மொட்டிங்ஹேம், தமிழ் வித்தியாலயம், மஸ்கெலியா. |
| மு. கோகிலா, அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயம், மட்டக்களப்பு. | எஸ்.எம். ரிம்லா, மாறை/ அல்மினா ம.வி, மீயல்லை, ஹக்மனை. |
| வசந்த குமார் டினுஜா, இந்து மகாவித்தியாலயம், புத்தளம். | தி. திருவைங்கரன், கோட்டைமுனை கனிஷ்ர வித்தியாலயம், மட்டக்களப்பு. |

# விடுகதைகளும் விடைகளும்

1. கொம்புகள் இரண்டு உண்டு, மாடல்ல: வேகமாய் ஓடும் மானும் அல்ல.
   அது என்ன?
2. பட்டை நீக்கி, முந்நூறு பட்டை நீக்கி, முன்னே வரும் சீமாட்டி.
   அவள் யார்?
3. காட்டில் கரிப்பானை கவிழ்ந்து கிடக்கிறது.
   அது என்ன?
4. பெட்டியைத் திறந்ததும் கண்ணன் பிறப்பான்.
   அவன் யார்?
5. வெள்ளைச் சீமாட்டிக்கு விளக்கு எரியுது தலைக்கு மேலே.
   அது என்ன?
6. அக்கா வீட்டுத் தோட்டத்தில ஊசலாடுது மஞ்சள் குருவி.
   அது என்ன?
7. இவன் வெளியே இருந்தால் உள்ளே யாரும் இல்லை.
   அவன் யார்?
8. இருவர் பார்க்க, பத்துப்பேர் எடுக்க, ஒருவர் மட்டுமே ருசித்தார்.
   அவர்கள் யார்?
9. நூல் நூற்கும் ஆனால் ராட்டை அல்ல.
   அது என்ன?
10. கிணற்றில் விழுந்தவர்களை கரண்டி கொண்டு தூக்கினார்கள்.
    அது என்ன?

**விடைகள்**

1. சைக்கிள் 2. வாழைப்பூ
3. பனங்காய் 4. கடலை
5. மெழுகுதிரி 6. எலுமிச்சம்பழம்
7. பூட்டு 8. கண்கள், விரல்கள், வாய்
9. சிலந்தி 10. பலகாரம்

தொகுப்பு: எஸ். சுபாஷினி

# 24 மணி நேரத்தில்...

மனிதனின் இதயம் 1,03,688 தடவைகள் துடிக்கின்றது. உடலில் உள்ள இரத்தம் உடல் முழுவதும் 16,80,00,000 மைல் தூரம் பயணம் செய்கிறது. 23,040 தடவைகள் சுவாசம் நடைபெறுகிறது. அப்படி சுவாசிக்கும் காற்றின் அளவு 433 கன அடி. பயனற்ற வார்த்தைகள் உட்பட ஒரு நாளைக்கு 4,800 வார்த்தைகள் பேசப்படுகிறது.

இவையெல்லாம் 24 மணிநேரத்தில் நடைபெறும் செயல்கள்.


படிப்பகம்

வர்ணாவும், பாக்கியமும் பிரமிப்போடு ஒருத்தரை யொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

பாக்கியம் ஆட்டோவை அனுப்பி விட்டு வர்ணாவுக்குப் பக்கத்தில் வந்தாள்?

"என்னடி இது...! அதிசயமாயிருக்கு. வீட்டுக்குப் போறதுக்குள்ளே நாய் செத்துப் போயிடும்னு டாக்டர்ஸ் சொன்னாங்க.. அது என்னடான்னா உன்கிட்டேயிருந்து திமிறி, துள்ளிக்குதிச்சு உள்ளே ஓடிக்கிட்டு இருக்கு..."

"அதாம்மா.... எனக்கும் புரியலை. பிங்கிக்கு வந்திருக்கிற நோய்க்கு டிஸ்டெம்பர்ன்னு பேர். இந்த நோய் வந்தா எந்த நாயும் உயிர் பிழைக்காதுன்னு டாக்டர்ஸ் அவ்வளவு உறுதியாச் சொன்னாங்களே..." வர்ணா சொல்லிக் கொண்டே உள்ளே ஓடிய நாயைப் பின் தொடர்ந்து போனாள்.



# கையில் சிக்கிய மின்னல்

"ஏய்... பிங்கி..."

ஒரு விநாடி பிங்கி திரும்பிப் பார்த்துவிட்டு வாசற் படிகளில் தாவியேறிக் குதித்துக் கதவுக்குப் பக்கத்தில் படுத்துக் கொண்டது.

வர்ணா ஓடிப்போய் இரண்டு கைகளாலும் நாய்க் குட்டியை அள்ளி அணைத்துக் கொண்டாள்.

பாக்கியம் ஆச்சரியம் தாளாமல் பக்கத்தில் வந்து பார்த்தாள்.

"வர்ணா...! என்னால நம்பவே முடியலை, நைந்துபோன பழைய துணி மாதிரிக் கிடந்த நாயா இது...?"

"நீ மொதல்ல கதவைத் திறம்மா. உள்ளே போய்ப் பேசிக்கலாம்."

பாக்கியம் கதவில் தொங்கிக் கொண்டிருந்த பூட்டுக்கு விடுதலை கொடுக்க வர்ணா, நாய்க்குட்டியோடு உள்ளே போனாள். சுவரில் இருந்த ஸ்விட்சைத் தேய்க்க ட்யூப் லைட் வெளிச்சம் ஹாலில் நிரம்பியது.

நாயைக் கீழே விட்டாள். அது ரப்பர் பந்து போல குதித்து ஹால் மாடிப் படிக்குக் கீழே அலுமீனியக் கிண்ணத்தில் ஊற்றி வைக்கப்பட்டிருந்த பாலை நோக்கி ஓடியது. ஆர்வமாய் நக்கிக் குடிக்க ஆரம்பித்தது. வால் உற்சாகத்தில் சுழன்றது.

வர்ணா பிங்கியையே சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ஹாலின் மூலையில் இருந்த டெலிஃபோனை நோக்கிப் போனாள். ரிஸீவரை கையால் எடுத்துக்கொண்டு மறுகையால் டைரக்டரியைப் புரட்டினாள்.

பாக்கியம் கேட்டாள்.

"யாருக்குடி ஃபோன்...?"

"அந்த வெடர்னரி டாக்டர் ரத்னவேலுவுக்குத்தான்."

"எதுக்கு?"

"வீட்டுக்குப் போறதுக்குள்ளே பிங்கி செத்துடும்னு சொன்னார். பிங்கி இப்போ நல்லாயிருக்கு காரணம் என்னான்னு கேட்க வேண்டாமா...?"

"எதுக்கு காரணத்தையெல்லாம் கேட்டுக்கிட்டு... நாய் நல்லபடியா இருக்கு. அதுபோதும் நமக்கு."

"இல்லேம்மா... அந்த டாக்டரை விடக்கூடாது. எவ்வளவு ஆணித்தரமா அடிச்சுச் சொன்னார்... நீ எத்தனை லட்சரூபாய் செலவு பண்ணினாலும் சரி இந்த நாயைக் காப்பாத்த முடியாது. ஒரு மனுஷனுக்கு எய்ட்ஸ் வந்தா எப்படிக் குணப்படுத்த முடியாதோ அதே மாதிரித்தான் இந்த நாய்களுக்கு டிஸ்டெம்பர் வந்தாலும் குணப்படுத்த முடியாது. இந்த நாயோட உடம்புல இன்னும் பத்து சதவீத உயிர்தான் ஓடிக்கிட்டு இருக்கு. நீ இதை எடுத்துக்கிட்டு வீடு போய் சேர்றதுக்குள்ளே நாயோட கதை முடிஞ்சுடும்.. அப்படி இப்படின்னு சொல்லி என்னோட மனசைக் கலங்கடிச்சாரே... அவரைச் சும்மா விடலாமா?"

"என்ன பண்ணப் போறே...? சண்டை போடப் போறியா?"

"சண்டையெல்லாம் இல்லை."

"பின்னே..."

"நாய் திடீர்னு இப்படிக் குணமாக என்ன காரணம்? வெடர்னரி சயின்ஸிங் இதுக்கு உண்டான பதிலை அவர் சொல்லியே ஆகணும்..." வர்ணா பாக்கியத்திடம் பேசிக்கொண்டே டைரக்டரியைப் புரட்டிப் பார்த்து, டாக்டர் ரத்னவேலின் டெலிஃபோன் எண்ணைச் சேகரித்துக் கொண்டு டயலில் எண்களை ஒற்றி எடுத்தாள். மறு முனையில் ரிங்போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது. டாக்டர் ரத்னவேலின் குரல் கேட்டது.

"ஹலோ..."

"டாக்டர்...! நான் வர்ணா பேசறேன். கொஞ்ச நேரத்துக்கு முந்தி ஒரு நாயை உங்ககிட்ட ட்ரீட்மெண்டுக்காகக் கொண்டு வந்திருந்தேன்..."

"ஓ...நீயா...! சொல்லம்மா... என்ன விஷயம்...?"

"டாக்டர்... நீங்க நாயைப் பார்த்துட்டு இதுக்கு டிஸ்டெம்பர் நோய் ட்ரீட்மெண்ட் கொடுத்தும் பிரயோஜனமும் கிடையாது. வீட்டுக்குக் கொண்டு போறதுக்குள்ளே செத்துடும்னு சொன்னீங்க..."

"ஆமா..."

"நீங்க சொன்ன மாதிரி அப்படி எதுவும் நடக்கலை டாக்டர். நாங்க வீட்டுக்கு வந்து சேர்ந்ததுமே நாய் கீழே குதிச்சு சுறுசுறுப்பாக ஓடி விளையாட ஆரம்பிச்சுடுச்சு. பழைய மாதிரியே இப்ப ஹெல்த்தியா இருக்கு."

"நீ...நீ...என்னம்மா... சொல்றே...?"

"உண்மையைச் சொல்லிக்கிட்டிருக்கேன் டாக்டர்."

"நெவர்... நீ சொல்றது உண்மையா இருக்க முடியாதும்மா. டிஸ்டெம்பர் வந்த நாயினாலே சரியா நடக்கக்கூட முடியாது. நீ ஓடுறதா சொல்றியே...?"

"டாக்டர் நான் சொல்றதுல உங்களுக்கு நம்பிக்கை இல்லேன்னா நீங்களே நேர்ல வந்து பாருங்க..."

"உன் வீடு எங்கேம்மா...?"

"பக்கத்து செல்லப் பிள்ளையார் கோயில் தெரு... வீட்டு நம்பர் நாற்பத்தி ஒண்ணு.."

"இப்பவே புறப்பட்டு வர்றேன். உன்னோட பேர் என்னம்மா சொன்னே...?"

"வர்ணா..."

"பத்து நிமிஷத்துல அங்கே இருப்பேன்."

"தேங்க்யூ டாக்டர்" வர்ணா ரிஸீவரை வைத்துவிட்டு பிங்கியைப் பார்த்தாள். அது பால் முழுவதையும் குடித்துவிட்டு காலி அலுமீனியக் கிண்ணத்தை உருட்டி விளையாடிக்கொண்டிருந்தது.

★★★

**பூ**விழியின் உடலைப் பார்த்து வாய்க்கு தோளில்போட்டிருந்த துண்டைக் கொடுத்து விம்மிக் கொண்டிருந்த நீலமேகத்தை, இன்ஸ்பெக்டர் யூனிட்டுக்கு வெளியே கூட்டிக் கொண்டு வந்து வராந்தா ஓரமாய் நிறுத்திக் கொண்டார்.

"உங்களுக்கு நேர்ந்து இருக்கிற இந்தத் துக்கம் ரொம்பவும் கொடுமையானதுதான். பூவிழியோட மரணத்துக்குக் காரணமானவங்களை நீதியும், சட்டமும் தண்டிக்கணும்னா நீங்க பக்கபலமாயிருந்து விசாரணைக்கு உதவி பண்ணணும்..."

நீலமேகம் கண்ணீர் நிரம்பிய விழிகளோடு இன்ஸ்பெக்டரை ஏறிட்டார்.

"எம்பொண்ணு பூவிழிக்கு எதிரிகள் யாருமே இருக்க முடியாது இன்ஸ்பெக்டர். எல்லார்கிட்டேயும் சகஜமா பேசக்கூடிய டைப்."

"பூவிழி உங்களுக்கு ஒன் அண்ட் ஒன்லி டாட்டர் இல்லையா?"

"ஆமா...."

"பூவிழி படிச்சிட்டிருந்தாளா....?"

"இல்லை வேலைக்குப் போயிட்டிருந்தா..."

"எங்கே...?"

"'கன்ஸ்டன்ஸி க்யூப்'ங்கிற ஒரு கம்பெனியில் கம்ப்யூட்டர் செக்ஷனில் அவளுக்கு வேலை..."

"அந்த கம்பெனி எங்கே இருக்கு....?"

"ராயப்பேட்டை லாய்ட்ஸ் ரோட்ல ராஜேஸ்வரி டவர் காம்ப்ளக்ஸ் ஃபிப்த் ஃப்ளோர்ல அந்தக் கம்பெனி இயங்கிட்டிருக்கு..."

"உங்க டாட்டர் எத்தனை வருஷமா அங்கே வேலைக்குப் போயிட்டிருக்கா...?"

"கடந்த ரெண்டு வருஷ காலமா."

"அங்கே ஏதாவது பிரச்சனை வந்தது உண்டா?"

"இதுவரைக்கும் ஒரு பிரச்சனைகூட வந்தது கிடையாது."

"கம்பெனியோட டைரக்டர் யாரு...?"

"அவர் பேர் கற்பகவிநாயகம். நான் ரெண்டு மூணு தடவை அவரைப் பார்த்துப் பேசியிருக்கேன். அவ்வளவுதான். நல்ல ரெப்யூட்டட் கம்பெனி."

இன்ஸ்பெக்டர் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு, பின் கேட்டார்.

"பூவிழிகிட்ட உன்னைத் தாக்கினது யார்னு கேட்டப்ப யாரோட பேரையோ சொல்ல முயற்சி பண்ணி, 'மி'ன்னு ஒரே ஒரு எழுத்தைச் சொன்னா. அது யாராயிருக்கும்னு நீங்க நினைக்கிறீங்க..."

"தெரியலை இன்ஸ்பெக்டர்..."

"எடுத்த எடுப்பிலேயே தெரியாதுன்னு சொல்லிடாதீங்க. கொஞ்சம் யோசனை பண்ணிப் பாருங்க. மொதல்ல பூவிழியோட ஃப்ரண்ட்ஸ் சர்க்கிளை ஞாபகத்துக்குக் கொண்டு வாங்க..."

நீலமேகம் நீர் நிரம்பிய கண்களை உயர்த்தி சில விநாடிகள் யோசித்து பார்த்துவிட்டு பின் மெல்லத் தலையாட்டினார்.

"'மி' எழுத்துல ஆரம்பிக்கிற பேர் கொண்ட ஃப்ரண்ட்ஸ் யாருமே பூவிழிக்குக் கிடையாது. அவளுக்கு நெருக்கமான ஃப்ரண்ட்ஸ் ரெண்டே ரெண்டு பேர்தான்."

"யார் அவங்க...?"

"ஒரு பொண்ணு பேர் அருணா. அவ இண்டியன் பேங்க்ல வேலை பாக்கிறா... இன்னொரு பொண்ணு பேர் சங்கரி. சங்கரிக்கு டெலிஃபோன்ஸ்ல வேலை..."

"அருணா, சங்கரி இவங்களோட வீட்டு அட்ரஸ் தெரியுமா...?"

"தெரியும்..."

"சொல்லுங்க.."

இன்ஸ்பெக்டர் தன் பாக்கெட்டில் இருந்த சிறிய டயரியையும், ஒரு பால் பாயிண்ட் பேனாவையும் எடுத்துக்கொண்டார்.

நீலமேகம் பேச முயற்சித்த விநாடி- வராந்தாவில் வேகநடை போட்டுக் கொண்டு வந்த அந்த சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டருக்கு எதிராய் வந்து நின்று ஒரு சல்யூட் அடித்துவிட்டுத் தளர்ந்தார்.

"என்ன ஜேக்கப்..?"

"ஸார்... இப்படி ஒரு நிமிஷம் வர்றீங்களா? பூவிழி மர்டர் சம்பந்தமா ஒரு முக்கியமான தடயம் இப்ப நம்ம கையில மாட்டியிருக்கு..."

(தொடர்ந்து வரும்)

கிரைம் சக்கரவர்த்தி

ராஜேஸ்குமார்

## நடிகை ஸ்ரீவித்யா தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்

# 8 ஒரு கதை

நான் வண்டியில் ஏறி உட்கார்ந்ததும் இவர் பின்னாடியே வந்தார். "நான் போறேன்" என்று மட்டும் பதற்றத்தோடு சொன்னேன். திடீரென்று என் கையிலிருந்த மேக்கப் பெட்டியைப் பிடுங்கினார். "வீட்டு கொத்துச் சாவியை கொடு" என்றார். கையிலிருந்த ஒரு கொத்துச் சாவியை கொடுத்தேன்.

கையிலிருந்து பிடுங்கிய மேக்கப் பெட்டியில் எதையோ தேடினார். அதிலிருந்த ஒரு கடிதத்தை எடுத்தார். எனக்கேத் தெரியாமல் என் மேக்கப் பெட்டியில் ஒரு கடிதம் இருந்திருக்கிறது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

அவசரமாகப் பார்த்தபோது அதில் 'டியர் சாம்ஸன்' என்று ஒரு வாசகம் மட்டும் தெரிந்தது. ஏதோ அவருக்கு வந்த கடிதத்தை எடுத்துக் கொள்கிறார் என்று நினைத்துக் கொண்டேன்.

வண்டி கிளம்பி, தெரு முனை திரும்பி, மகாலிங்கபுரம் தெருமுனைக்கு வந்தபோதுதான் 'எங்கே போகிறேன்?' என்பது தெரியாமலேயே புறப்பட்டிருக்கிறோம் என்பது புரிந்தது. டிரைவரை வண்டியை நிறுத்தச் சொன்னேன்.

அந்த நாற்சந்தி முலையில் நின்று நாலாபுறமும் திரும்பிப் பார்த்தேன். "அம்மா இப்ப எங்கே போகப் போகிறோம்?" என்றேன். அம்மாவிற்கும் ஒன்றுமே புரியவில்லை.

நாங்கள் யோசித்துக் கொண்டிருந்தோம். வண்டி நின்று கொண்டிருந்தது. சிறிது நேரம் கழித்து அம்மாதான் சொன்னார். "வக்கீல் வீட்டிற்குப் போகலாம்; அங்கே போய் எல்லாத்தையும் முடிவு பண்ணிக்கலாம்" என்றார்.

வண்டி நகர்ந்தபோது நான் என்னை இழந்து கொண்டிருந்தேன். இத்தனை நேரம் இருந்த ஆவேசம், கோபம், வேகம் எல்லாமே என்னை விட்டுக் கரைய ஆரம்பித்திருந்தது. இத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகள் எல்லாம் பீறிட்டுக் கொண்டு அழுகையாக வெடித்தது.

அம்மா மீது விழுந்து அழ ஆரம்பித்தேன். என்னை மடியில் போட்டுக்கொண்டு தட்டிக்கொடுத்தார். சின்ன வயதிலிருந்து ஏங்கிக்கொண்டிருந்த தாயின் அரவணைப்பு, இப்போது கிடைத்தது. 'நடந்ததெல்லாம் கூட நன்மைக்குத்தானோ...?' என்று மனசு யோசிக்க ஆரம்பித்தது.

### தினம் மோதல்

**அ**ம்மாவின் மடியில் புதைந்து யோசித்தபோதுதான் எங்களுக்குள் கருத்து மோதல் ஏற்பட்டபோது நடந்த வேறு சில சம்பவங்களும் என் நினைவிற்கு வந்தன.

தினமும் மோதல், சண்டை என்று வீட்டில் நிம்மதி இல்லாத சூழல். அவருடைய பெற்றோர்கள் ஒருநாள் எங்கள் இருவரையும் வெளியே போய் தனியாக மனம் விட்டுப் பேசிவிட்டு வரச் சொன்னார்கள்.

அதற்காக நாங்கள் இருவரும் பாம்குரோவ் ஓட்டலுக்கு அருகிலுள்ள ஒரு ரெஸ்டாரண்ட்டுக்குப் போனோம். அங்கே போனபோது பணம் எடுப்பதற்காக இவருடைய ப்ரீஃப்கேஸை திறந்தேன். நாங்கள் ஒரு கம்பெனிக்கு ஃபைனான்ஸ் செய்திருந்தோம். 'அவர்களுக்குப் பணமாகக் கொடுத்ததாகச்' சொல்லியிருந்தார்.

ஆனால் அதற்கான செக் அவருடைய பெட்டியில் இருந்தது. "என்னங்க, 'பணமா கொடுத்ததா' சொன்னீங்க. இப்ப 'செக்' இருக்கே?"

"நாம பிரியறதுதான் நல்லது. அம்மா, அப்பா சொன்னாங்களேன்னு வந்தேன். வாய மூடிக்கிட்டு சும்மாயிரு" என்றார். அந்தச் சூழ்நிலையிலும் அவர் அம்மா நேராக அண்ணா வீட்டிற்குப் போகாததற்கு காரணம் இருந்தது. என் அண்ணி அப்போது எட்டு மாதக் கர்ப்பிணி. நேராகப் போய்நின்று அவருக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுக்க வேண்டாம்' என்று அவர் நினைத்தார்.

அன்றைக்கு வக்கீல் வீட்டில் என் அப்பாவையும், அண்ணாவையும் பார்த்தவுடன் அம்மா கதறி அழுதுவிட்டார். என் அம்மா.. அதாவது புகழ் பெற்ற எம்.எல்.வசந்தகுமாரி அழுது நான் அன்றுதான் பார்த்தேன். "இரக்கமேயில்லாமல் வீட்டைவிட்டு அனுப்பிட்டான். 'எங்க போறே?'ன்னு கூடக் கேட்காம சாவியைப் பிடுங்கிட்டு அனுப்பிட்டான். அவ வாழ்க்கையே போச்சு" என்று கதறினார்.

அப்போதுதான் வக்கீல் இன்னொரு குண்டைத் தூக்கிப் போட்டார். "அம்மா, உங்களுக்கு ஒண்ணு தெரியுமா? குழந்தைகள் இல்லாம ஒரு மனைவிக்கு ஏதாவது நடந்திட்டா, அந்தச் சொத்து பூராவும் சட்டப்படி அவளுடைய கணவருக்குத்தான்" என்றார்.

பண விஷயத்தில் என்னை ஏமாத்தியிருப்பார்ன்னு தோணவேயில்லை.

அன்னைக்கு வீடு திரும்பும்போதுதான் வழியில் மருந்துக் கடையில் நிறுத்தி மாத்திரையெல்லாம் வாங்கினார். அந்த மாத்திரைகளை வைத்துத்தான் 'தற்கொலை' நாடகம் எல்லாம் நடத்தினார்.

இதெல்லாம் வீட்டை விட்டு வெளியே வந்து காரில் முச்சந்தியில் நிற்கும்போது நினைவிற்கு வந்தது. பிறகு தான் அம்மாவின் யோசனைப்படி வக்கீல் பச்சை வீட்டிற்கு போனோம்.

உள்ளே நுழைந்தவுடனேயே அம்மா, "வக்கீல் ஸார், எல்லாமே முடிஞ்சு போச்சு. இவ வாழ்க்கையே பாழாப்போச்சு. முதல்ல யாரையாவது அனுப்பி என் பிள்ளையையும், என் கணவரையும் வரச் சொல்லுங்க" என்றார். எனக்குப் 'பகீர்' என்றது. 'ஒரு இன்ஜெக்ஷன் போட்டு உன்னைக் கொன்னுட்டா, சொத்தெல்லாம் எனக்குத்தான்' என்று என் கணவர் சொன்னது எனக்கு சட்டென்று நினைவுக்கு வந்தது.

'அப்ப இதெல்லாம் அவருக்கு முன் கூட்டியே தெரிந்திருக்கிறது; திட்டமிட்டுத்தான் எல்லாம் செய்திருக்கிறார்'



என்கிற சந்தேகம் லேசாகத் தளிர்க்க ஆரம்பித்தது.

என் அண்ணன் எங்களை அழைத்துக் கொண்டு அவர் வீட்டிற்கு வந்துவிட்டார். வீட்டிற்கு வந்ததும் எனக்கு என் பிரச்சனைகள் ஞாபகம் வந்துவிட்டன. இப்போது நான் இருக்கும் இடத்தை எல்லோருக்கும் சொல்லியாக வேண்டும்.

### படப்பிடிப்பு

அடுத்த நாள் டி.ராஜேந்தரின் 'என் தங்கை கல்யாணி' படத்தின் முதல் நாள் படப்பிடிப்பு. ராஜேந்தருக்கு 'மைதிலி என்னைக் காதலி' படத்திலிருந்து ஒரு செண்டிமெண்ட் உண்டு. முதல் நாள் படப்பிடிப்பு என்றால், முதல் ஷாட் 'வித்யா அம்மா முகத்தைத்தான் எடுக்கணும்' என்பார்.

## ஸ்ரீவித்யா

அடுத்த நாள் படப்பிடிப்பு விவரத்தை அம்மாவிடம் பேச ஆரம்பித்தேன். "என்ன... பைத்தியமா உனக்கு? இப்ப போய் ஷூட்டிங்கைப் பத்தி கவலைப்படறே? எல்லாம் டைரக்டர்கிட்ட சொல்லிக்கலாம். அவங்க புரிஞ்சுப்பாங்க" என்றார்.

எனக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. நான் அழவும் இல்லை. மௌனமாகவே இருந்தேன். "ஐ ஆம் ஆல்ரைட்" என்று மட்டும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தேன். எனக்கு தூக்கமும் வரவில்லை.

அம்மா மட்டும் எனக்கு தூங்குவதற்கு மாத்திரை கொடுத்தார். முதலில் ஒரு மாத்திரை பலனில்லை. இரண்டு மாத்திரை, பிறகு நாலு மாத்திரை போட்டுக் கொண்டேன்.

அடுத்த நாள் படப்பிடிப்புக்கு கட்டிக் கொள்ள மாற்று புடவை கூட இல்லை. அம்மாவுடைய நைட்டியை எடுத்து மாட்டிக் கொண்டு, கட்டியிருந்த புடவையை அந்த அர்த்த ராத்திரியில் துவைத்து காயப் போட்டுவிட்டு வந்து படுத்துக் கொண்டேன்.

காலையில் டி.ராஜேந்தர் கம்பெனியிலிருந்து தொடர்பு கொண்டார்கள். அவர்கள் தந்த தகவல் இன்னும் அதிர்ச்சியாக இருந்தது.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன். அவரது எழுத்துக்கள் உலகப் பிரசித்தமானவை. பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை. ஒரு காலத்தில் ஓய்வே இல்லாது வெகுஜன சஞ்சிகைகளிலும் எழுதிக் குவித்தார். இப்போது அவர் எழுதுவதில்லை. எத்தனை கோடி தந்தாலும் கதை எழுத மாட்டேன் என்று சபதம். அந்த மாபெரும் எழுத்தாளரது படைப்புக்களில் ஒன்றுதான் இது! உங்கள் வரவேற்பை நிச்சயம் பெறும்.

03

# கோகிலா என்ன செய்து விட்டாள்?

## ஜெயகாந்தன்



தனக்கு நேர்ந்துவிட்ட ஓர் ஆணின் அக பலவீனத்திற்கு வருந்தியதே போன்று, பெண்மையின் இயல்பேயான அவளது புற பலவீனத்தைக் கண்டு அவன் பரிதாபப்பட்டான். சற்றுமுன் தான் செய்த காரியம் தனது தரத்திற்கும் அந்தஸ்திற்கும் எவ்வளவு முரணானது என்று எண்ணிய போது- தானே ஒரு கூலிக்காரனாய், கல்வி அறிவோ நாகரிகமோ தெரியாத காட்டுப்பயலாய் இருந்தால், தனது அக வாழ்க்கை எவ்வளவு ஆரோக்கியமானதாய் இருக்கும் என்று அவன் கற்பனை செய்து பார்த்தான். தனக்குப்பிடிக்காத- அவளின் நண்பனோ, உறவினனோ, எவனோ-அவனை 'சீ நாயே! எழுந்து போ' என்று விரட்டியபின் இவளைத் தாலி கட்டியவன் என்ற அதிகாரத்தோடு கூந்தலைப்பற்றி இழுத்து வந்து இரண்டு உதை கொடுத்து ஒரு மூலையில் தள்ளி ஒரு நியாயமான காரியத்தைச் செய்து விட்டதாக நிம்மதியும் பெற முடியும். அந்தக் காரியத்திற்காக அவமானமோ வெட்கமோ மனசில் உறுத்தலோ இல்லாமல் இருக்கவும் முடியும். வீண் விவாதம், தர்க்கம், உரிமைப் பிரச்சனை நாலுபேர் என்ன நினைப்பார்கள் என்ற கதை இதற்கெல்லாம் அங்கே இடம் கிடையாது. 'கப்சிப்' ஏதாவது பேசினால் இன்னும் இரண்டு உதை-என்னைப்போன்ற பொய் வேஷக்காரர்களின் கண்ணுக்கு இது என்னதான் அநாகரிகமாகத் தோன்றினாலும் எனது வாழ்க்கையில் குடி கொண்டுள்ள பொய்மை அதில் இல்லை. அவன் என்னைவிடப் புறத்தேயும் அகத்தேயும் ஆரோக்கியமானவன்.

'நான் புறத்தே ஒரு மனிதன்: அகத்தே ஒரு மனிதன். ஆபீசில் ஒரு மனிதன்; எனது வாசகர்களுக்கு ஒரு மனிதன்; என் வாழ்க்கையில் பிறிதொரு மனிதன்! என் மனைவிக்கு ஒரு மனிதன்; எனக்கு நானே வேறொரு மனிதன்- ஓ! எத்தனை கூறுகளாகிப்போனேன்!'

ஆபீஸ் பையன் கையிலொரு கடிதத்துடன் அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தபோது பெருகி அதிர்ந்த அச்சயந்திரங்களின் ஓசை கேட்டு, கண்ணாடி அடைப்பினூடே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அனந்தராமன் உட்கார்ந்த நிலையிலேயே நாற்காலியை மேஜையருகே நகர்த்திக் கொண்டு வந்து மீண்டும் பத்திரிகை ஆசிரியனானான்.

★★★

ஆபீஸ் பையன் கொண்டுவந்து கொடுத்த கடிதத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்தான் அனந்தராமன்.

அந்தக் கடிதம் அவனது முதலாளிகளிடமிருந்து வந்திருந்தது. அதில் மறுநாள் காலை பதினோரு மணிக்கு அவன் 'டைரக்டர்ஸ் போர்டைச்' சந்திக்க வேண்டுமென்று கண்டிருந்தது. டெல்லி ஆபீசுக்கு அவன் மாறிச்செல்ல வேண்டும் என்ற அவர்களின் முடிவைக் குறித்து அவனோடும் கலந்து பேச விரும்புவதாய்க் குறிக்கப்பட்டிருந்தது. அடுத்த வாரமே அவன் போய் டெல்லி ஆபீஸில் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று உணர்த்தப்பட்டிருந்தது.

முதலில் அந்த வேலைமாற்ற உத்தரவைப் பார்த்தபோது அவனுக்குச் சற்று எரிச்சலுண்டாயிற்று. இருப்பினும் இதை நிராகரிக்கவோ ஏற்றுக்கொள்ளவோ முடிவு செய்யுமுன் இது விஷயமாய் கோகிலாவிடம் கலந்துபேசி விடுவது அவசியமென்று அவன் கருதினான்.

"வாழ்க்கை என்பது வயிற்றுப்பாட்டுக்காக மேற்கொண்டிருக்கும் உத்தியோகம் மட்டும்தானா? ஒருவன் தனது உத்தியோகத்தை மாற்றிக்கொண்டு எந்த உலகுக்குப் போனாலும் அதற்கேற்பத் தனது வாழ்க்கைச் சூழ்நிலையை மாற்றிக்கொண்டு அவனைப் பின் தொடரக் கடமைப்பட்டுள்ள பலவீனமான ஜீவனொன்று மனைவி என்ற பந்தத்தோடு கையிலோ காலிலோ சிலருக்குக் கழுத்திலோ இறுகக் கட்டப்பட்டிருக்கிறதே.."

ஒருவேளை டெல்லிக்கு வேலை மாற்றம் ஆகி இருக்கிறது என்றால்-இப்போது இருக்கும் இறுக்கமான தாம்பத்தியச் சூழ்நிலைக்குக் காரணமான 'அவ'னை தவிர்ப்பதற்கு வசதியாய் ஒரு வாய்ப்பு ஏற்படுகிறதே என்று அவளும் உணர்ந்து- அங்கேயும் அவளுக்குத் தெரிந்தவர்கள், உறவுக்காரர்கள், ஒரு காலத்தில் அவள் இதே அலுவலகத்தில் ஒரு 'ரிசப்ஷனிஸ்டாக' வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது அவளோடு நெருங்கியிருந்த தோழிகளிற் சிலர் அங்கே இருக்கிறார்களே என்ற கவர்ச்சிகளை உத்தேசித்து இந்த முடிவைக் கோகிலா மகிழ்ச்சியோடு வரவேற்றாலும் வரவேற்கலாம்.

"கோகிலாவுக்கு மகிழ்ச்சியா?"

அனந்தராமனின் பத்து வருஷ தாம்பத்திய வாழ்க்கையில், கிட்டாத, என்றாவது கிட்டுமென்ற நம்பிக்கையும் நைந்துபோன ஓர் அரிய விஷயம் அது.

'எனது வாழ்க்கையில் சகலமுமாயிருக்கும் அவளுக்கு என்னால் எவ்விதமான மகிழ்ச்சியுமில்லை என்பதைச் சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் அவள்தான் எவ்வளவு குரூரமாக என் ஹிருதயத்திலேயே ஆழமாய்க் கீறிக் கீறி எழுதிக் காட்டி இருக்கிறாள்... அந்தச் சந்தர்ப்பங்களில் நானும் வெறியின் வசப்பட்டு அவளை என்னதான் வெறுப்பதாகக் கூறினாலும் அவளை இன்னும்கூட வெறுக்க முடியாமல் அவள்மீது எவ்வளவு மதிப்பு, எவ்வளவு காதல் கொண்டுள்ளேன்! இந்த எனது பலவீனத்தை- எனது திருப்திக்காகச் சொல்வதென்றால் எனது இந்தக் காதலை, ஆத்மார்த்தமாக என்னுள் அவளுக்கு நான் தந்திருக்கும் ஸ்தானத்தை, எனது உறவை ஒரு சுமையாகக் கருதி வதைபடும் அவள்பால் எனக்கிருக்கும் மன உணர்ச்சிகளை அவள் அறிந்து கொள்ளும் வண்ணம் உணர்த்த முடியவில்லையே' என்ற நிரந்தரத் தவிப்பைப் பத்து வருஷ தாம்பத்திய வாழ்க்கையின் மொத்தப்பலனாக அனுபவித்து வரும் தனது பரிதாபத்திற்குரிய நிலையை எண்ணி அவன் நிராதரவாகக் கண்கலங்கினான்.

டெல்லிக்கு மாறிப்போகும் இந்த வாழ்க்கை மாற்றம் அவளை மகிழ்ச்சியுறச் செய்தாலும் செய்யலாம் என்கிற எண்ணமும் இப்போது ஏற்படுகையில் தன்னைக் கலக்காமல் மேலிடத்திலிருந்து துக்ளக் தனமாகத் திடீரென்று அனுப்பப்பட்ட இந்த உத்தரவினால் ஏற்பட்ட மன எரிச்சலைக்கூட வெளியில் காட்டிக்கொள்ளாமல்- இது பற்றிக் கோகிலாவிடம் கலந்து ஆலோசிக்க அவன் தீர்மானம் கொண்டான்.

அந்தக் கடிதத்தை மடித்துத் தனது கைப்பைக்குள் வைத்தவாறு அனந்தராமன் காலையில் கோகிலா அவனிடம் சொன்ன தீர்மானமான வாசங்களை இப்போது மீண்டும் ஒருமுறை நினைவு கூர்ந்தான். அதி காலையில் நடந்த அந்த ரகளைக்குப் பின் அவர்கள் இருவரும் வெகு நேரம் ஒருவரை ஒருவர் சந்திக்காமல் இரண்டு மூன்று அறைகளே உள்ள அந்தக் குடித்தனப் பகுதியில் எப்படியோ விலகி விலகிச் சமாளித்து இருந்த பின்னர் ஆபீசுக்குப் புறப்படும்போது அவனே அவளைச் சந்திப்பதற்காக வலியச் சென்று அடுக்களை அறைக்கதவைப் பிடித்துக் கொண்டு மௌனமாய் அவள் பின்னால் நின்றிருந்தான். முதலில் ஒரு நிமிஷம் அவன் அங்கு நிற்பதை அவள் உணராமல்தான் இருந்தாள். அவன் லேசாகக் கனைத்துத் தன் இருப்பை உணர்த்திய பின் அவள் அதைப் பொருட்படுத்தாமல் சமையல் வேலையில் முனைந்திருந்தாள். சற்றுமுன் அவள்மீது காறித் துப்பிய செய்கைக்காக அவன் உள்ளூர மனம் வருந்தித் தலைகுனிந்து நின்றான்.

"கோகிலா" என்று அவன் அழைத்த குரல் அவன் உள்ளேயே அமுங்கி ஒலித்தது. அவள் அழுதுகொண்டே தன்னைத் திரும்பி நோக்குவாள் என்று எதிர்பார்த்து அவன் தலை நிமிர்ந்தான். அவளோ ஒன்றும் நடக்காதது போன்று வெகு சாதாரணமான முக பாவத்தோடு திரும்பி அவனைப் பார்த்தாள்.

"ஐ ஆம் ஸாரி."

அவள் சிரித்தாள். சப்தமில்லாத சிரிப்பு; உதடுகள் லேசாகப் பிரிந்து ஒரு பக்கம் விலகி இடைவெளி காட்டி 'ஏ புழுவே!' என்பது போன்ற சிரிப்பு.

"நான் ரொம்பக் கேவலமாக நடந்துட்டேன்..."

"நீங்க வேற எப்படி நடந்துக்க முடியும்?"

அவன் பற்களை 'நறநற' வென்று கடித்தவாறு அவளை விழித்து நோக்கினான்: "ஆமா நான் கேவலமானவன் தான். உனக்குப் பிடிக்கலைன்னா என்னை விட்டுப் போயிடலாம்- ஐ ஸே யூ கேன் கெட் அவுட்."

கோகிலா கீழுதட்டை அழுத்திக் கடித்தவாறு தலை குனிந்து சற்று ஸீரியஸாக யோசித்தாள். சடக்கெனத் தலை நிமிர்ந்து சற்று லேசாகச் சிரித்து ஒரு நிறைவான குரலில் தெளிவாகக் கூறினாள்: "சரி போயிடறேன். இந்த வார்த்தைக்காகத்தான் நான் ரொம்ப காலமா காத்துண்டிருக்கேன். இப்பவாவது உங்களுக்கு அந்தத் தைரியம் வந்ததே!" என்று கூறியபின், இனிமேல் பேச வேண்டாம் என்பது போல ஒரு தீர்மானமான முடிவுடன் அங்கிருந்து அகன்றாள். இந்த முடிவை எப்படி நிராகரிப்பது அல்லது அங்கீகரிப்பது என்று தெரியாத மௌனத்தில் சில விநாடிகள் கழிந்த பின் ஒரு வீம்புக்குரலில் சீறுவது போல் பேசினான் அனந்தராமன்.

(கோகிலா.... தொடரும்)

---

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.

12

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

—கண்ணதாசன்—

பொலிஸ் அதிகாரி கமலநாதனுக்கு முன்னாலேயே ஒரு ஜீப்பில் இரண்டு பெண்கள், வேறொரு ஸ்டேஷனுக்குக் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று ஒரு பெண் ஓடிக் கொண்டிருந்த ஜீப்பில் இருந்து குதித்தாள். ரோட்டில் அடிபட்டு விழுந்தாள். ஸ்தலத்திலேயே மரணமடைந்தாள்.

அவள் வேறு யாருமில்லை. கல்லூரியில் சேர வந்த சுமித்ரா.

"அந்த நாயைத் தூக்கிக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் போடுங்கள்!" என்று உத்தரவிட்டு விட்டு அலட்சியமாகப் போய் விட்டார் கமலநாதன்.

சட்டம் ஒழுங்கின் தர்மகர்த்தா வீட்டிற்குள் நுழைந்த உடனேயே பணிவோடு வரவேற்றார் அவரது மனைவி யசோதா.

"இன்றைக்கு ஆறு பெண்கள் பிடிபட்டார்கள்!" என்று தன் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டார்.

'பெண்களைப் பிடிப்பதற்கா இவ்வளவு பெரிய சட்டையும், பூட்ஸும்?' என்று யசோதா கேட்கவில்லை.

"நம்முடைய ஜாதிப்பெண்களையே எல்லோரும் விபசாரத்துக்குக் கூட்டிக் கொண்டு போகிறார்கள். அதனால்தான் விபச்சாரம் என்றாலே எனக்குக் கோபம்!" என்றார் கமலநாதன்.

"கிருஷ்ணன் மட்டும் அத்தனை கோபிகளோடு விளையாடவில்லையா?" என்று யசோதா கேட்கவில்லை.

"இதோ பார்! நம்முடைய நாடு ஒரு புண்ணிய நாடு. தர்மமே இதன் குறிக்கோள். இந்தத் தர்மத்தைக் காப்பாற்றுவதே நம்முடைய குறிக்கோள்! சரி. சாப்பிடுவதற்கு என்ன இருக்கிறது?" என்று கேட்டபடியே ஒரு ரவுண்டு சுதி ஏற்றிக் கொண்டார் கமலநாதன்.

மாலையில் சாப்பிடுவதற்கான உணவை அவர் முன்னால் நீட்டியபடி, "ஏதோ அரசாங்கம் மாறப் போகிறதாமே? மாறினால் உங்களையும் மாற்றி விடுவார்களா?" என்று கேட்டாள் யசோதா.

"மாற்றட்டுமே சென்னையிலிருந்து திருப்பூர்; திருப்பூரில் இருந்து கருப்பூர் என்று தானே மாற்ற முடியும்? வேறு என்ன என்னைக் கிழிக்க முடியும்?" என்றார் கமலநாதன்.

"என்னதான் போலீஸ் அதிகாரியாக இருந்தாலும் பாவப்பட்டவர்களிடம் கொஞ்சம் இரக்கம் வேண்டும்!" என்றாள் யசோதா.



"இரக்கம் காட்டினால் என் பேர் எப்படி வெளியில் தெரியும்? பத்திரிகையில் பேர் வரவேண்டுமானால் இப்படியெல்லாம் நடக்க வேண்டும்!" என்றார் கமலநாதன்.

திடீரென்று அவருக்கு ஒரு டெலிஃபோன் வந்தது.

இந்த வெள்ளைக்காரன் டெலிஃபோனைக் கண்டு பிடித்தது எவ்வளவு வசதியாகப் போய்விட்டது!

அந்தப் பக்கம் இருந்து இன்ஸ்பெக்டர் பேசினார்.

"நாம் பிடித்திருக்கும் பெண்களில் ஒருத்தி இன்னொரு போலீஸ் அதிகாரியின் மகளாம். நாம் பிடிக்கும்போது வேண்டுமென்றே சொல்லாமல் இருந்திருக்கிறாள். இப்போது என்ன செய்யலாம்...?"

"ஐயையோ!" என்று தலையில் அடித்து கொண்டார் கமலநாதன்.

யசோதா பதறிப் போய், "ஏன்? நம்முடைய பெண்ணை யாராவது பிடித்துவிட்டார்களா?" என்றாள்.

எந்த வழக்கும் வழக்கின் தரத்தைப் பொறுத்து ஜெயிப்பதில்லை; வக்கீலின் திறமையைப் பொறுத்தே ஜெயிக்கிறது.

குற்றவாளியை நிரபராதியாக்குவதும், நிரபராதியைக் குற்றவாளியாக்குவதும் வக்கீலின் திறமையே.

சட்டத்தின் செக்ஷன்கள் பரிசீலிக்கப்படும்போது, சாட்சியம் குழப்பமாக இருந்தால், இவன் குற்றவாளி என்று தெரிந்தே நீதிபதி ஒருவனை விடுதலை செய்ய வேண்டியிருக்கும்.

உயர்நீதிமன்றத்தில் ஓர் வழக்கு அப்பீல். ஒரு நீதிபதி கீழ்க்கண்டவாறு தீர்ப்புச் சொன்னார்:

"குறிப்பிட்ட இந்த நபர்தான் குற்றவாளி என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது. ஆனால் பொலிஸ் தரப்புச் சாட்சியங்கள் முரண்படுகின்றன. ஆகவே இவரை நான் விடுதலை செய்கிறேன்."

-திட்டமிட்டுக் கொலையைச் செய்து விட்டுத் தன் திறமையாலும், வக்கீலின் திறமையாலும் தப்பித்துக் கொண்டு இப்போது சமுதாயத்தில் உலா வந்து கொண்டிருப்போர் பலர்.

பல குற்றவாளிகளைத் தப்பிக்கச் செய்தவர், வக்கீல் வரதராஜன்.

சட்டக் கல்லூரியில் அவர் பல வருஷங்கள் படித்தவர். அங்கேதான் சாகும்வரை படிக்கலாமே!

தாய்மொழி தெலுங்கு என்றாலும், தமிழ் மொழி தான் அவர் வாய்மொழி.

அவர் வாய்மொழி எல்லாம் பொய்யாக இருந்தாலும் வழக்குகள் எல்லாம் வெற்றி பெறும்.

வழக்கில் அவர் வாதாடுவது பாதி; மாஜிஸ்திரேட்டை அனுசரித்துக் கொள்வது பாதி.

"வரதராஜனிடம் கேஸ் கட்டைக் கொடுத்தால் ஜெயித்து விடலாம்" என்று ரிமாண்டில் இருக்கும் கைதிகளே பேசிக்கொள்வார்கள்.

பெரும்பாலும் கேஸ் கட்டுக்களை அவர் படிப்பதில்லை. தன் ஜூனியர்கள் படித்துச் சொல்வதைக் கேட்டுக்கொள்வார்-அந்தக் கேள்வி ஞானத்திலேயே வாதாடுவார்.

ஒரு சமயம் சென்னை நகரத்தில் குடிசைகள் கொளுத்தப்பட்டன. கொளுத்தியதாக ஏழு பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் சார்பிலே வரதராஜன் ஆஜரானார்.

கைது செய்த இன்ஸ்பெக்டரைப் பார்த்து ஒரே கேள்வி தான் கேட்டார்.

"இவர்களை எத்தனை மணிக்குக் கைது செய்தீர்கள்?" என்று.

"இரவு ஏழு மணி!" என்றார், இன்ஸ்பெக்டர்.

உடனே பொலிஸ் மினிட் புக்கை கொண்டு வரச் சொன்னார் வரதராஜன்.

அதில் இதே ஏழு பேரையும் ஐந்து மணிக்கு ரிமாண்டில் வைத்திருந்ததாகக் கண்டிருக்கிறது.

உடனே வரதராஜன் மாஜிஸ்திரேட்டைப் பார்த்துச் சொன்ன விளக்கம் மாஜிஸ்திரேட்டையே திக்கு முக்காடவைத்தது.

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

மெல்பேண் மாநகரின் மத்தியிலிருக்கும் வாவிப் பகுதி மின் விளக்குகளின் வெளிச்சத்தில் மூழ்கிக் கிடந்தது. நீண்டவாவியின் மேற்பரப்பு மினனொளியில் முத்துக்கள்போலப் பளபளத்துக் கொண்டிருந்தது. மனிதனின் கைவண்ணத்தில் உருவான நகரம் என்றாலும் அங்கும் இயற்கையின் அரவணைப்பு இருக்கவே செய்தது.

அன்று டிசம்பர் 31ம் திகதி 1998ம் ஆண்டை வழியனுப்பி வைத்து, 1999ம் ஆண்டை வரவேற்பதற்காக பல்லின மக்களும் முண்டியடித்துக்கொண்டு பெருங் கூட்டமாக நிரம்பி வழிந்து கொண்டிருந்தனர். அந்தப் பெருங்கூட்டத்தின் நடுவே மிகத் தீவிரமாக அவளைத் தேடிக்கொண்டிருந்தான் பிரகாஷ்.

ஆ...அதோ...அந்தச் சனக் கும்பலின் மத்தியில்... நட்சத்திரங்களின் நடுவில் பூரண நிலவைப் போல... ஆமாம்... அது அவள் தான்... அந்தப் பேரழகிதான். பஞ்சு, பனி எல்லாம் ஒன்று சேர்ந்த தன்மையுடன் அவள் நளினமாக அசைந்து வருகின்றாள். பிரகாஷ் படபடக்கிறான். இன்று எப்படியாவது அவளுடன் பேசி விடவேண்டும் என்று உறுதி பூண்டவனாக அவளை நோக்கி நடக்கிறான்.

குமுதினி தனது பிரத்தியேக அறையில் இருந்து, மிகத் தீவிரமாக கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். பல கடிதங்களைக் கிழித்து குப்பைத் தொட்டியில் கசக்கி எறிந்தபிறகு, முழுமையாக முடிந்த கடிதம் இதுதான்.

அன்பின் பிரகாஷுக்கு
குமு எழுதிக் கொள்வது,

*என்னைக் காதலிப்பதாகச் சொன்னீர்கள். உங்கள் காதலை வெளிப்படுத்தியமைக்கு மிக்க நன்றிகள். மிகவும் முக்கியமான ஒரு விடயத்தை உங்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகவே இதை எழுதுகிறேன். இதை நேரில் சொல்லும் தைரியம் எனக்கில்லை. மேலும், இதை மறைத்துவைப்பது மகா மடத்தனம்.*

*பிரகாஷ், காதல் உண்மையானது என்பதால் காதலர்கள் உண்மைகளை மறைக்கக் கூடாது. ஒரு வருடத்துக்கு முன்பு நடைபெற்ற ஒரு கார் விபத்திலே எனது வலது காலை இழந்துவிட்டேன். தொடைப் பகுதிக்குக் கீழே செயற்கைக் கால் பொருத்தியுள்ளேன். ஆனால் இப்போது எனக்குக் கால் இல்லாத குறையே தெரிவதில்லை. இருந்தாலும், நான் ஒரு கால் இல்லாதவள்தானே?*

# காதலென்பது...?



"எக்ஸ் கியூஸ் மீ..."- பிரகாஷ் ஆங்கிலத்திலேயே ஆரம்பித்தான். அவன் குரல் கேட்டு அவள் மெதுவாகத் திரும்பினாள். உரையாடல் ஆங்கிலத்திலேயே தொடர்ந்தது.

"உங்களோடு கொஞ்சம் பேசவேண்டும். ஆட்சேபனை ஏதும் உண்டா?"- ஆங்கிலேயரின் பாணியில் கேட்டான் பிரகாஷ்.

"இல்லை. அறவே இல்லை"- அவளுடைய பதில் நிதானமாகவே வெளிவந்தது.

"உங்களுடைய பெயர்...?"- பிரகாஷ் இழுத்தான்.

"குமு. அதாவது குமுதினி"- அவள் சாதாரணமாகச் சொன்னாள்.

"மிக இனிமையான பெயர்"- இவ்வாறு அவர்கள் உரையாடல் நீண்டது. நள்ளிரவு சரியாகப் 12 மணி. பலவர்ணங்களை உமிழ்ந்தவாறு வாணவேடிக்கை ஆரம்பமானது. அது பார்ப்போர் கண்களையும், கருத்தையும் கவர்ந்து, குதூகலத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்க, பிரகாஷின் நெஞ்சமும் குதூகலத்தில் ஆழ்ந்து கொண்டிருந்தது.

*பிரகாஷ், இந்த நிலையில் உங்கள் காதலை நான் ஒரு பெறற்கரிய பேறாக நினைக்கிறேன். ஆயினும், இந்த உண்மை தெரிந்த பிறகே என் காதலை வெளிப்படுத்த நான் நினைத்தேன். அதுதான் அவகாசம் கேட்டேன். பிரகாஷ், இப்போது உங்கள் உணர்வுகள் எப்படி இருக்குமோ என்று என் மனம் அங்கலாய்க்கிறது. வழமைபோல இந்த ஞாயிறும் உங்களுக்காகக் காத்திருப்பேன்.*

*நேரில் எனது பதிலைக் கேட்டு நீங்கள் மிகவும் சந்தோசப்படுவீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.*

உங்கள்,
குமு.

கடிதத்தை இரண்டு மூன்று தடவை படித்துப் பார்த்துவிட்டு தபாலில் சேர்த்த கையோடு, ஞாயிற்றுக்கிழமைக்காக தவம் கிடந்தாள் குமுதினி.

## மு. சேமகரன், அவுஸ்திரேலியா

பிரகாஷ்-குமு சந்திப்பு இரண்டு மூன்று தடவைகள் இடம் பெற்றது. இன்று கட்டாயமாக தனது எண்ணத்தை வெளிப்படுத்திவிட வேண்டும் என்று பிரகாஷ் தீர்மானித்துக் கொண்டான்.

"குமு; இன்று ஒரு முக்கியமான விடயத்தைச் சொல்லப் போகின்றேன்."- பிரசாஷ் குழைந்தான்.

"என்ன? சொல்லுங்கள்"- குமுவின் விழிகள் விரிந்தன.

சற்று நேரத் தாமதத்திற்குப் பின்பு பிரகாஷின் வார்த்தைகள் வெளிவந்தன.

"குமு...! நாம் பழகியது சில நாட்களாக இருக்கலாம். ஆனால் பல யுகங்கள் பழகியதைப் போன்ற ஓர் உணர்வு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த கொஞ்ச நாட் பழக்கத்திலேயே உன்னிடம் நான் என்னை இழந்துவிட்டேன். குமு, இனியும், நான் மறைக்க விரும்பவில்லை. நான் உன்னைக் காதலிக்கிறேன்! எனக்கு மனைவி என்று ஒருத்தி இருப்பாளானால் அது நீயாகத்தான் இருக்கவேண்டும். எனது காதல் பரிசுத்தமானது குமு"- காதல் உணர்வுகளின் சில்லிட்ட அழுத்தங்களின் மத்தியில் பிரகாஷ் கூறிவைத்தான்.

குமு இதை எதிர்பார்த்தவள்தான் என்பது அவள் முகத்தில் தெரிந்தது. அவள் பதில் ஏதும் பேசாமல் மௌனம் சாதித்தாள். பிரகாஷ் அவள் பதிலுக்காகக் காத்திருந்தான். குமுவே மௌனத்தைக் கலைத்தாள்.

"பிரகாஷ் எனக்கு கொஞ்சம் அவகாசம் வேண்டும்!" குமு இப்படிக் கேட்டது பிரகாஷுக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது. குதூகலத்தின் உச்சிக்கே சென்று விட்டான் பிரகாஷ்.

★★★

அவள் தவம்கிடந்த அந்த ஞாயிற்றுக் கிழமையும் வந்தது. குறித்த நேரத்துக்கு முன்பதாகவே பிரகாஷுக்காகக் காத்திருந்தாள் குமுதினி. வழமையான நேரம் தவறாமல் அவளைப் பார்க்க ஓடி வந்துவிடுவான் பிரகாஷ்.ஆனால் இன்று...? நிமிடங்கள் மணித்தியாலங்களாயின. பிரகாஷ் வரவில்லை.

'உன்னைக் காணாமல் ஒரு நிமிடம்கூட இருக்க முடிவதில்லை.' என்று சொன்ன பிரகாஷ் இன்று அவளைக் காணவரவில்லை.

அதுவும் இன்று குமுதினி தன் காதலை வெளிப்படுத்தப் போகும் பொன்னான நாள். அப்படியிருந்தும் அவன் வரவில்லை என்றால்...? குமுதினிக்குப் புரிந்துவிட்டது.

பிரகாஷ் இனித் தன்னைப் பார்க்க வர மாட்டான். அவன் நாளெல்லாம் வர்ணித்த அவளுடைய அழகைக் காண அவன் இனி வரமாட்டான்.

குமுதினி அதிர்ச்சியடையவில்லை. ஆதங்கப்படவில்லை... குமுறிக் குமுறி அழவில்லை. ஏமாற்றமடையவில்லை.

"காதல் புனிதமானது, உயர்வானது, உன்னதமானது, ஆனால் காதலிப்பவர்களும் புனிதமானவர்களாக, உயர்வானவர்களாக, உன்னதமானவர்களாக இருக்க வேண்டுமே. காதலிப்பதற்கும் தகுதிவேண்டும். காதலைப் போல காதலிப்பவர்களும் இருந்தால்தான் காதல் வாழும். இல்லையேல் அது வீழும்." இவ்வாறு எண்ணமிட்ட குமு தன்னைப் பழைய நிலைக்கு சுதாகரித்துக்கொண்டு காதிலே 'வோக்மன்னை' பொருத்தி 'கசெட்'டைச் சுழலவிட்டாள். பாட்டு வரிகள் அவள் காதுகளில் ஒலித்தது.

**"இது காதலா?**
**இதுவே காதலா?**
**இதுதான் காதலா?**
**இதுவும் காதலா?"**

# கவிதைக்கதை

# "அண்ணை வெளிக்கிடுங்கோ!!"



ரோஜா - ஒஸ்லோ

வெளி நாட்டு ஆசை, ஆரத்தான்
விட்டுது?
அடுத்த வீட்டுக் கதிரைமலை,
அடிபட்ட "சுப்பர் காய்"
வெளிநாடு போறதுக்கு, 'ஐஸ்'வைச்சு
ஐடியா கேட்டன்?
ஏஜென்சிக்காரன்ர விலாசத்தை,
எழுதி வடிவாத் தந்தார்.

சட்டுப்புட்டெண்டு, கொழும்புக்கு
ரெலிபோன் அடிச்சன்.
"அதெல்லாம் வெல்லலாம்,
ஆயுத்தமாயிருங்கோ!" என்றார்.
ஆளாளுட்டைக் கடன்பட்டு, ஒருபடியா
வெளிக்கிட்டன்.
சுடு தண்ணியடிச்ச நாயாட்டம்,
சுத்தியடிச்சுக் கொழும்பு வந்தன்.
நாலு நாளில, நாலாயிரம்
முடிஞ்சுபோச்சு!?
தண்ணியும் அடிச்சிருந்தால்,
பத்துத் தாண்டியிருக்கும்?
ஹொட்டலிலை
நிக்கிறதெண்டால்,
சும்மா
விளையாட்டே?

வெளி நாடு
போறன்தானே,
அனுபவிப்பமெண்டு
நினைச்சன்.
ஒரு கிழமை, ஆறு மாசம், ஒரு
வருஷம் போச்சு!!
காசைக் கறந்த ஏஜென்சி,
சுத்தவெளிக்கிட்டுட்டான்.

சுத்திச்சுத்தி சுப்பற்ரை கொல்லைக்கு,
சுத்தலாப்போச்சு?
கொட்டாவி விட்டுக்கொண்டு,
கொழும்பில திரிய முடியுமே?

தொட்டதுக்கும் தாள்க்காசு, வாய்
பார்த்தால் கம்பிக்குள்ளை!!
ரெலிபோன் அடிச்சடிச்சுக்
கந்தறுந்துபோனன்!!

ஏஜென்சிக்காரன் ஏனெண்டும்
கேக்கேல்லை-ஏறெடுத்தும் பார்க்கேல்லை.
நாய்படாப்பாடு, நகரத்தில பட்டுட்டன்.
செத்தாலும் நரகத்தில, வடிவாக
வாழுவன்.
எல்லாரும் போகினமெண்டு, நானும்
வெளிக்கிட்டன் வெளிநாடு.
குளிச்சுத் தலை முழுகி, ஆறு
கிழமையாச்சு?

"சனி மாறியிருக்க வேணும்",
ஏஜென்சிக்காரன்ர சிந்தாமணி
ரெலிஃபோன்.
தாவிப் பாய்ஞ்சோடி, ரெலிபோனை
நான் எடுத்தன்.
"அண்ணை வெளிக்கிடுங்கோ, நாளைக்கு
பிளைற்" எண்டார்.
அடிச்சான் பிறைஸ். அம்மன் கோயில்
புக்கையெண்டானாம்.
கிளீன் ஷேவெடுத்து, கிளிப்பச்சை
'ஜீன்சும்' போட்டு....
வெடுக்கு மணம் போக, சென்ட்டும்
உடம்பில பூசி...
ரஜனி நடை நடந்து தலையை
வாரிவிட்டுக் கொண்டு...
கண்ணாடியில முகத்தைப் பார்த்தால்,
கருவாடு தோத்துப் போகும்.

கடைசியாய்
கடையொண்டில,
மூண்டுகிளாஸ்
பியருமடிச்சு...
ஏரேப்பிளேனேறி, ஜாலியாய்
படுத்திருந்தன்?
பக்கெண்டு ஏரேப்பிளேன், கீழே
இறங்கிற பிளான்.
கண்மூடி முழிக்கிறதுக்கிடையில,
நிலத்தில விழுந்தோடுது?
கலட்டிக் கல்லுறோட்டில ஓடுற,
மாட்டுவண்டில் தோத்துப்போகும்?

எந்த இடமெண்டு தெரியாமல்
மயிரைப் பிச்சால்...
மொஸ்கோ... மொஸ்கோவெண்டு,
பக்கத்துச் சனம் கதைக்கிதுகள்?
மூண்டு மாசம் மொஸ்கோவில,
மூச்சுவிடாமல் படுத்திருந்தன்.
மூண்டு நேரமும், மூண்டு துண்டு
பாண் கிடைச்சுது!!

மொஸ்கோவில பிளேனேறி, நாடு நாடாய்
நடைப் பிணமாய்...
காஞ்ச பாணோட, கடுவன்
பூனையாட்டம்...
கொட்டக்கொட்ட முழிசிக்கொண்டு
நாடு நாடாய் நாயலைச்சல்!!

"அண்ணை வெளிக்கிடுங்கோ, நாளைக்கு
பிளைற்"!!

ஏஜென்சிக்காரன்ர அதே பலே பல்லவி
அம்மாளே! மேரிமாதா, சன்னதிக்
கந்தவேலா?!
எங்கையெண்டாலும் அனுப்புங்கோ,
பட்டதுபோதும்சாமி?

கும்பிட்டது வீண்போகல்ல,
சுவிஸ் நாட்டில தட்டி
விட்டாங்கள்!!

நாணயத்தை
அடைவுவைச்சிட்டு,
அழுதுவிழுது
கதைவிட்டன்!!
பள்ளிக் கூடக்காலத்தில,
வாத்திமாருக்கு நான் விடாத
கதையளே?

"அடிச்சாங்கள் அகதி விசா", இனி
என்ன நான் ராஜா!!
வருஷம் ஆறு போச்சு, வயதும் ஆறு
ஓடிப் போச்சு!!

கறுத்த தலைமயிரெல்லாம்
வெள்ளையற்ரை ஆட்சி!!
எனக்கெண்டாலும் இது பரவாயில்லை.
சிலபேருக்கு தலை மயிரே சுத்தம்.

கோழி செத்து மூண்டுவருஷம்;
குளிர்ப்பெட்டிக்கை நாலு வருஷம்?
வேலையாலை ஓடிவந்து, வெட்டிக்
கொத்திக் கோழி திண்டு...
கண்ட வருத்தத்தை, உடலிலை
தேடிக்கொண்டு...
கண்ணீர் விடக்கூட, நேரமுமில்லைக்
கடவுளே?!

பனியும் குளிரும், உயிரை உறைய
வைக்க...
உற்றார் உறவில்லாது, மனம்
ஒடிச்சலிக்க...
இயந்திர வாழ்க்கை, இதயத்தைக்
கனக்க...
உப்புச் சப்பில்லாத வெளிநாட்டுப்
பகட்டு வாழ்க்கை!!

உஷா ஒரு சுறுசுறுப்பானவள், சிறு பிள்ளையை போன்றவள். எந்த நேரமும் யாரோடு சரி குறும்பு செய்து கொண்டே இருப்பாள். இது அவளின் பொழுதுபோக்கு என்றே கூறலாம்.

உஷா தற்போது பல்கலைக்கழகத்தில் உயர்படிப்பை தொடர்பவள். அவளின்

# வி(னை)ளையாட்டு

உள்ளங் கவர்ந்த காதலன்தான் தினேஷ்.

தினேஷை சந்திக்கும்போது எல்லாம் ஏதாவது பொய் சொல்லி ஏமாற வைப்பாள். இது அவளுக்கு சுவாரசியமான விளையாட்டாகிப் போய்விட்டது.

சில மாதங்களாக தினேஷ் தன்னைச் சந்திக்க வருமாறு வலியுறுத்திக் கூறியும் வரவில்லை. இதனால் உஷாவுக்கு சரியான கோபம்.

'இருங்க உங்களுக்கு நல்ல வேலை ஒன்று செய்கிறேன்' என எண்ணிக்கொண்டு, தினேஷுக்கு மடல் வரைய ஆரம்பித்தாள்.

*பிரியமில்லா தினேஷ்,*

*நீங்கள் இப்படிப்பட்டவர் என கனவிலேனும் எண்ணவில்லை. உங்களைப் பாராமல் நான் எவ்வளவு வேதனைபட்டேன் தெரியுமா? ஏன் இத்தனை மாதங்களாக என்னைப் பார்க்க வரவில்லை? உங்களை உயிருக்கும் மேலாக எண்ணி நம்பிக்கை வைத்து இருந்தேனே எனக்கு இது வேண்டும்.*

*நீங்கள் என்னை மறந்தாலும் உங்களை எண்ணிக்கொண்டு காலம்பூராவும் கண்ணீர் வடிப்பேன் என எண்ணவேண்டாம். அப்படிப்பட்ட கோழை அல்ல நான்.*

*எனவே நான் முடிவு எடுத்து விட்டேன். என்னோடு படிக்கும் ஒருவர் நீண்ட நாட்களாக என்னிடம் சம்மதம் கேட்டுவந்தார். நான் அவருக்கு சம்மதம் தெரிவித்து விட்டேன்.*

*என்னை மன்னித்து மறந்து விடுங்கள். நிச்சயம் எனது திருமண அழைப்பு உங்களைத் தேடி வரும்.*

இப்படிக்கு
உஷா.

என எழுதிவிட்டு கடிதத்தின் மறுபுறத்தில் ஐயோ முட்டாள் ஏமாந்து விட்டீர்களா? என எழுதி மடலை தபாலிட்டாள்.

தான் தினேஷுக்கு எழுதிய மடல் பற்றி நண்பிகளிடம் கூறிச் சிரித்தாள். "தினேஷ் நன்றாக ஏமாந்து இருப்பார். மடலில் நன்றாக என்னை திட்டித் தீர்க்கப் போறார்" என்று கூறி விழுந்து விழுந்து சிரித்தாள்.

அடுத்தவாரம் தினேஷிடம் இருந்து மடல் வந்தது. உஷா தன் நண்பிகளை அழைத்து, சிரித்தவாறே மடலை வாசிக்கத் தொடங்கினாள்.

*பிரிந்து சென்ற உஷாவே!*

*என்னைப் பற்றி நன்றாகத் தெரிந்தும் இப்படி ஒரு முடிவு எடுத்துவிட்டாயே. என்னது என் காதல் பொய்யானதா? நான் ஏமாற்றுக்காரனா? இல்லை உஷா இல்லை. நீ வித்தியாசமானவளாக இருக்கலாம். ஆனால் என் காதலை என்னால் மறக்க முடியாது. என் உஷா வேறு ஒருவனுக்கு சொந்தமாவதை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. இம் மடல் உன் கரம் கிடைக்கும் வேளை என் உயிர் இங்கிருக்காது. உன் நினைவுகளோடு இவ்வுலகை விட்டுச் செல்லும்.*

என்றும் உன்னவன்
தினேஷ்.



## எஸ்.சரவணேஸ் டெயிசி

உஷாவுக்கு உலகமே சுற்றுவது போல் இருந்தது. "ஐயோ தினேஷ் நான் மடலில் மறுபுறம் எழுதி இருந்ததை பார்க்கவில்லையா?" எனக் கூறியவாறு மயங்கி விழுந்தாள்.


படிப்பகம்

www.padippakam.com



# இலக்கிய நயம்

**கோ**யில் இல்லாத
ஊரில்கூட
குடியிருக்கலாம்!

காதல் இல்லாத
ஊரில்
குடியிருக்க முடியாது!

அவனோ
காதலி உள்ள ஊரில்
குடியிருக்கிறான்!

ஆகவே, அவனுக்கு
இரட்டை யோகம்!

திருவிழாக் கூட்டத்தில்
அவளைக் கண்டபோது
பெருவிழா கொண்டாடி
தாவிப் போனது மனது!

கூட்ட நெரிசலில்
பெற்றோரைப் பிரிந்து
வாட்டமுற்ற குழந்தையாய்
மனதை தொலைத்துவிட்டு
கூட்டத்துக்குள் தேடினான்!

கூட்டத்துக்குள்
அவள் எங்கோ
கரைந்து போனாள்!

காற்றில் கரைந்த
கற்பூரமாய்
காணாமல் போனாள்!

மின்னலாய் தோன்றி
மறைந்து போனாள்!

மின்னலைக் கைகளால்
பிடிக்கவா முடியும்?

ஆனால் அவளைக்
கண்களால் அவன்
பிடித்து வைத்திருந்தான்!

அந்த கூட்டத்துக்குள்ளும்
அவள் விட்டுப்போன
வாசனை மட்டும்
அவனைத் தொட்டபடியிருந்தது!

அதன்பின்னர்
தினமும் சென்று
திருவிழாக் கூட்டத்தில்
திருமுகம் தேடினான்!

பல முகம் வந்தன
அவள் முகம் மட்டும்
மறுபடி வரவில்லை!

தரிசனம் தரக்கூட
கஞ்சத்தனம் காட்டுகிறாயே!

நதிகள் பாய்ந்து
கடலுக்கு செல்லும்!

என் நினைவு நதிகள்
எங்கே போகும்?

கலந்து சங்கமிக்க
கடலே நீ
எங்கிருக்கிறாய்?

இந்த நதி
உன்னைத் தேடுகிறது!

எந்தன் மதி
உன்னை நாடுகிறது!

என் நினைவுகள்
பசித்திருக்கின்றன!

மேலும் இரை தேடி
உனக்காக காத்திருக்கின்றன!

என் விழிகள்
பார்த்திருக்கின்றன!

மீண்டுமொரு முறை
உன்னை
பிடித்துக்கொள்ள
பிரியமாக இருக்கின்றன!

கண்மணி! உன்னை
கனவில்கூட
காண முடியவில்லை!

## காத்திருப்பு

தூங்கினால்தானே
கனவு காண்பதற்கு?!

ஏங்கிக் கொண்டே
இருக்கும் விழிகள்
தூங்க மறுக்கின்றன!

என் இனிய
பட்டாம் பூச்சியே!
எங்கே இருக்கிறாய்?

பார்த்ததும் காதல்
வந்தது! மறுபடி
பார்க்காமலேயே காதல்
வளர்ந்து கொண்டிருக்கிறது!

எட்டத்தில் தோன்றிய
வட்ட நிலாவே,
கிட்டத்தே எப்போது
தோன்றப் போகிறாய்?

உன் கண்களின்
வெளிச்சத்தில்
என் இரவுகளை
சலவை செய்!

உன் புன்னகை
பூக்களால்
என் தினங்களை
வாசமாக்கு!

அவன் மந்திரம்போல
அவள் சுந்தர நினைப்பை
சொல்லிக் கொண்டிருந்தான்!

அவள் வராது விட்டாலும்
அவன் சோராது இருந்தான்!

அவளை காணாத போதும்
அவன் மனம்
கோணாதிருந்தான்!

என்றோ ஒருநாள்
அவள் வருவாள்!

காத்திருப்பது
காதலுக்கு உரம்!

காத்திருக்க செழிக்கும்
காதல் மரம்!

பைத்தியக்காரத்தனம்
என்றனர் பலரும்!

எதிர்பார்ப்புகள்
இல்லையானால்
வாழ்வில் இனிப்பிருக்காது!

நம்பிக்கைகள்
இல்லையானால்
வாழ்வில் பிடிப்பிருக்காது!

காதல்
இல்லையானால்
வாழ்வில் துடிப்பிருக்காது!

காதலை மட்டுமா
காமத்தையும்தான்
முதல் பார்வையிலேயே
மூலதனமாக தந்துவிட்டுப்
போயிருக்கிறான்!

காலம் கடந்தாலென்ன
யுகம் யுகமாக
காலம் நகர்ந்தாலென்ன?
அவள் பார்வை
நேற்றுப் பார்த்தது
போலுள்ளது!

அந்தப் பார்வைக்குள்
எத்தனை அர்த்தங்கள்!

ஆயுள் முழுவதும்
அர்த்தம் தேடலாம்!

உயிரை உண்ணும்
கண்கள்!

உணர்வை ஊட்டும்
கண்கள்!

மனதைக் கொத்தும்
மாயக் கண்கள்!

ஒவ்வொரு கண்ணும்
ஒரு விதம்!

ஒன்று மயக்குகிறது
மற்றொன்று மிரட்டுகிறது!

வாளாக தோன்றும்
ஒரு கண்!
மீனாக தோன்றும்
மறுகண்!

உயிரைப் பறிக்கும்
எமனோ?
உலகை நோக்கும்
கண்ணோ!
துள்ளியோடும்
பெண்மானோ?

வினாக்களை விதைத்து
விடைகளை அறிய முன்னர்
கனா போல மறைந்தவளே
நீ எங்கிருக்கிறாய்?

அவன் தேடிக்
கொண்டிருக்கிறான்!
தேடல்தானே வாழ்க்கை!

**"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்**
**நோக்கம் இம் மூன்றும் உடைத்து"**

*அதிகாரம்: 109 குறள்: 1085*

# தருவது ரஜீகன்

✿ என் போன்ற மாணவர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?

பி. ரவிச்சந்திரன், மட்டக்களப்பு.

அறிவுரை கூறுமளவுக்கு ஞானியல்ல நான். அவ்வப்போது படித்தவற்றை எடுத்து விடுவதுண்டு. இளைய சமுதாயம் பின்பற்ற வேண்டிய சிறந்த விதிகள்: குறைந்த பேச்சு, நிறைந்த கேள்வி, தனித்த சிந்தனை, தம் கருத்தில் தெளிவு, பிறர் கருத்தில் மதிப்பு!

✿ 'மோனிஷா என் மோனலிசா'வில் சிம்பு, குறளரசன் நடனம் எப்படி?

கே. ஆனந்த், வவுனியா.

படத்தில் உருப்படியான ஒன்று அந்த நடனம்தான்! கிராபிக்ஸ் கலந்த நடனம்!



'மோனிஷா என் மோனலிசா' படத்தில் சிம்பு, குறளரசன்

✿ நாலுபேர் கூடும் இடங்களில் நாகரிகம் இல்லாது நடந்து கொள்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

எம். உதுமான், கொழும்பு-09.

உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் பெர்னாட்ஷா மிகப் பெரிய விருந்து ஒன்றுக்கு சென்றிருந்தார்.

பல சீமாட்டிகளும், சீமான்களும் அந்த விருந்தில் கலந்து கொண்டனர். பெர்னாட்ஷா சந்தோசமாக எல்லோருக்கும் கைகொடுத்தபடியே வந்தார்.

அப்போது ஒரு சீமாட்டியிடம் தன் கையை நீட்டி "உங்களைச் சந்திப்பதில் சந்தோசம்" என்று கூறினார்.

ஆனால் அந்தச் சீமாட்டி தன் கையை சட்டென்று பின்னுக்கு இழுத்து, "உங்களை சந்திப்பதில் எனக்கு சந்தோஷம் இல்லை!" என்று கூறினார்.

உடனே பெர்னாட்ஷா சிரித்தபடி: "சரி, என்னைப்போல நீங்களும் பொய் சொல்லி இருக்கலாமல்லவா?" என்று கேட்டாராம்.

✿ இந்திய-பாகிஸ்தான் படைகள் மறுபடி மோதியுள்ளனவே?

எம்.எம். பாரூக், மன்னார்.

புன்னகைகளை நம்பாதீர்கள்! இரு நாடுகளும் சமரசம் காண்பது தற்போது நடக்காது என்று நாம் கூறியதை இப்போது நம்புகிறீரா?!

✿ ஜே.வி.பியின் இனப்பிரச்சனை தொடர்பான நிலைப்பாடு சரியானதா?

கே. உமாபதி, கொழும்பு-06.

சரியானதாக இருந்தால் ஜே.பி.வி. நாடெங்கும் காலூன்றி இருக்கும்! இனப்பிரச்சனை விடயத்தில் பாரம்பரிய இடதுசாரிகள் செய்த தவறைத்தான் ஜே.வி.பி.யும் தொடர்கிறது!

✿ தென்னாபிரிக்காவுடன் இந்திய அணி முதல் போட்டியில் தோல்வி கண்டதுக்கு கங்குலிதான் காரணம் என்கிறேன் நான், நீர் என்ன கூறுகிறீர்?

ஆர். மனோகரன், கொழும்பு-06.

உமது தீர்மானத்தை வழி மொழிகிறேன். 80 ஓட்டங்கள் எடுத்த பின்னர் சதம் பெறும் நோக்கில் ஓட ஆரம்பித்துவிட்டார். போதாக்குறைக்கு அசாரும் அதிரடியாக ஜடேஜாவை இறக்காது தானே இறங்கி சொதப்பிவிட்டார்.

✿ ராஜீவ் கொலை வழக்கின் தற்போதைய தீர்ப்பு பற்றி உமது கருத்து என்ன?

சி. ஜெயச்சந்திரன், கொழும்பு-07.

வெற்றி புலிகளுக்கே!

✿ தென் மாகாணசபைத் தேர்தலில் வன்முறை இடம்பெறுமா?

எம். கலீல், காலி.

வடமேல் மாகாண சபையளவுக்கு இல்லாது போனாலும், சமீபத்தில் நடைபெற்ற ஐந்து மாகாணசபை தேர்தல்களைவிட அதிகளவில் இடம்பெறும். ஏனெனில், கட்சிகளது தொண்டர்கள், குண்டர்கள் யாவரும் ஒரே மாகாணத்தில் ஒன்று குவியப் போகிறார்கள் அல்லவா?

✿ தி.மு.க., ம.தி.மு.க. இரண்டும் தேர்தல் கூட்டணி அமைக்கின்றனவே?

எஸ். தியாகலிங்கம், திருக்கோணமலை.

எதிரிக்கு எதிரி நண்பன் (எதிரி செல்வி)

✿ குறித்த நேரப்படி செயற்படவேண்டும் என்று நினைத்தால்கூட என்னால் முடியவில்லை. இதற்கு என்ன வழி?

செல்வி எ.ப். பாத்திமா, பேருவளை.

இந்த விடயத்தில் ஜனாதிபதி அவர்களும் உங்கள் கட்சிதான்! பாத்திமா! உங்களுக்கு ஒன்று தெரியுமா? கைக் கடிகாரம் கட்டியிருப்பவர்கள் அதிகம். ஆனால் குறித்த நேரத்தைக் கடைப்பிடிப்பவர்கள் குறைவு!

✿ 'மரியம்மா' கப்பல் கதையின் உண்மை என்ன?

ஏ. ராயப்பு, நீர்கொழும்பு.

இதுபற்றி இந்தியப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியானது. இந்தியப் பாதுகாப்பு அமைச்சரை சிக்கலில் மாட்ட வெளியான தகவல் அது. இது உண்மையானால் இந்தியாவின் சகல தினசரிகளிலும செய்தி வந்திருக்கும் அல்லவா? இச் செய்தி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகளில் கடந்த பல வாரங்களாக இடம்பெற்று வருகின்றன. மரியம்மா கப்பல் வந்ததாகவும், இந்தியக் கடற்படை நெருங்கியபோது கப்பல் எரிந்ததைக் கண்டதாகவும் எழுதியுள்ளனர். அதுபோல சமீபத்தில் படையினர் கூறிய கப்பல் கதையையும் இரண்டு வாரத்தின் முன்னர் அப்படியே எழுதியுள்ளார்! கப்பலுக்கு பெயரும் சூட்டிவிட்டனர்.

✿ சமீபத்திய படங்களில் கலக்கல் படம் எது?

கு. ராகேஷ், தெகிவளை.

'வாலி'. அஜித்குமார் அசத்தல் குமார்!



'வாலி' படத்தில் அஜித்குமார்-சிம்ரான்

# சிந்திய பதில்கள்

✿ சிந்தியா! இலங்கை அணியின் முதல் தோல்வியைப் பார்த்தால், இம்முறை கிண்ணம் பெறுவது முயற்கொம்புதானா?

சா. தவச்செல்வம், வத்தளை.

ஒரே ஒரு ஆட்டத்தை வைத்து முடிவைத் தீர்மானிக்க முடியாது. ஆனாலும் இலங்கை அணி இம்முறை கிண்ணத்தைக் கைப்பற்றக் கூடிய சாத்தியம் சற்றும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை! இலங்கை அணியின் பலம் பலவீனங்களை ஏனைய அணிகள் நன்கு எடைபோட்டுள்ளன!

✿ வழுக்கையைப் போக்கும் மருந்து என்று விளம்பரம் செய்வதை நம்பலாமா?

சி. புவீந்திரன், கந்தளாய்.

ஜேம்ஸ் என்பவர் ஒரு சலூனுக்குப் போனார். அங்கே "வழுக்கைத் தலையில் முடி வளரும் மருந்து கிடைக்கும்" என்று விளம்பரப் பலகை வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் சலூன்காரர் வழுக்கைத் தலையுடன் காட்சியளித்தார். ஜேம்ஸ் சந்தேகத்துடன் அவரிடம்: "இந்த மருந்தை தடவினால் நிஜமாகவே முடி வளருமா?" என்று கேட்டார்.

"ஆமாம் மிகவும் சக்தி வாய்ந்த மருந்து" என்று கூறினார் சலூன்காரர்.

உடனே ஜேம்ஸ்: "அப்படியானால் நீ ஏன் மருந்தை உபயோகிக்காமல் வழுக்கைத் தலையுடன் இருக்கிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு சலூன்காரர் புத்திசாலித்தனமாக கூறிய பதில்: "வழுக்கைத் தலை எத்தனை மோசமானது என்று இங்கு வருபவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமே, அதற்காகத்தான் இப்படியே இருக்கிறேன்!"

✿ வெசாக் தினத்தன்று கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பை நிறுத்தும் கோரிக்கை பற்றி உமது கருத்து என்ன?

எஸ். கிரிதரன், புத்தளம்.

தவறான முன்னுதாரணம்! இதேபோல எதிர்காலத்தில், இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மத விசேஷ நாட்களிலும் விளையாட்டுப் போட்டிகளை ஒலி, ஒளிபரப்பாது நிறுத்த முடியுமா? இப்படிப்போனால் வருடத்தில் சில நாட்கள் மட்டும்தான் மீதியிருக்கும்!

# ஸ்போர்ட்ஸ்

## திடீர் ஓய்வு



**உ**லகக் கோப்பை கிரிக்கெட் வீரர்களின் பட்டியலில் இடம்பெற்ற பின்பு, தனது திடீர் ஓய்வினை அறிவித்தார் மேற்கிந்தியத்தீவுகளின் நட்சத்திர வீரர் ஹார்ல் ஹூப்பர்.

32 வயதான சகல துறை ஆட்டக்காரரான இவரது ஓய்வு மேற்கிந்தியத்தீவு இரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியே. கேப்டன் லாராவுடன் ஏற்பட்ட மோதலே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

அனுபவமிக்க இந்த ஆட்டக்காரர் அவுஸ்திரேலியா சென்று, அங்கு குடியேறவுள்ளார். ஏற்கனவே இவரது மனைவியும், குழந்தையும் அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரில் தங்கியுள்ளனர். அநேகமாக அடுத்த சீசனில் அவர் அந்த மாநில அணிக்காக விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹூப்பர் விலகியது குறித்து, மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் கேப்டனும், தற்போதைய மேலாளருமான கிளைவ் லோயிட் வருத்தம் தெரிவித்துள்ளார்.

"ஹூப்பர் உண்மையிலேயே மிகச் சிறந்த வீரர். அவர் ஏன் திடீரென விலகினார் என்று எனக்குத் தெரியவில்லை," என்றும் கூறியுள்ளார்.

## இரண்டு விளையாட்டு

**உ**லகின் சிறந்த களத்தடுப்பாளரான தென்னாபிரிக்காவின் ஜோன்டி ரோட்ஸ் அந்நாட்டின் கிரிக்கெட் மற்றும் ஹொக்கி இரண்டு அணிகளிலும் விளையாடி வருகிறார்.

இதேபோல் கென்யா அணியின் கேப்டன் ஆஸிப் கரீம் கிரிக்கெட் மற்றும் டென்னிஸ் ஆகிய அணிகளில் அந்நாட்டிற்காக விளையாடி வருகிறார்.

இதேபோன்று இம்முறை உலகக் கோப்பைப் போட்டியில் அறிமுகமாகியிருக்கும் ஸ்கொட்லாந்து அணிவீரர் அண்டி கோரம் கிரிக்கெட்டுடன் அந்நாட்டின் உதைபந்தாட்ட அணியிலும் விளையாடி வருகிறார்.

## ஏனைய அணிகளில்

இம்முறை நடைபெற்று வரும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பல இந்திய வம்சாவளியினர் வெவ்வேறு அணிகளில் விளையாடி வருகின்றனர்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியில் ஷிவ் நாராயண் சந்தர்போல் இங்கிலாந்து அணியில் நஸீர் ஹுஸைன், கென்யா அணியில் ஆஸிப் கரீம், ரவீந்து ஷா, தீபக் சூடசாமா, ஹிதேன் மோடி, கல்பேஷ் வதேரா ஆகியோர் விளையாடுகின்றனர்.

## இவர்தான் அவர்



ஷாருக்கான்

## காதில் வயர்லெஸ்

**ஹோ**வ் நகரில் இந்தியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையே நடந்த போட்டியில், தென்னாபிரிக்க அணியின் கேப்டன் ஹன்சி குரோன்ஞ், காதில் சிறிய வயர்லெஸ் அணிந்திருந்தார். இதன்மூலம் மைதானத்தில் இருந்தபடியே அணியின் பயிற்சியாளர் வூல்மரின் கட்டளையைப் பெற்றபடி இருந்தார்.

இது குறித்து இந்திய அணியினர் நடுவரிடம் புகார் கூற, 'இது கிரிக்கெட் விதிகளுக்கு முரணானது என்றும் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் அனுமதி பெறவில்லை' என்றும், நடுவர் வயர்லெஸ்ஸை அகற்ற உத்தரவிட்டார்.

இப்போட்டியில் இந்தியா தோல்வியுற்றதும் ஆத்திரமடைந்த இரசிகர் ஒருவர் மைதானத்திற்குள் அத்துமீறி நுழைந்தார். அங்கு நின்ற ட்ராவிட்டைத் தாக்க முயற்சித்தார்.

அதற்குள் அஸாருதீன், பாதுகாப்பு வீரர்களிடம் தெரிவிக்க, அவர்கள் விரைந்து வந்து, அந்த இரசிகரை மைதானத்தில் இருந்து இழுத்துச் சென்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 01

இறைமகனாம்
இயேசுபிரான்
இகமதிலே வந்துதித்து
மனக்குலத்தை இரட்சித்து
மாண்பு பெற வழி வகுத்தார்.
உலகுய்ய அவதரித்த
உத்தமனார் வாழ்ந்த கதை
எடுத்துரைக்கத் துணிந்த இந்த
ஏதறியா ஏழைக்கு
என்றும் துணை நின்று
உதவிடுக என்றுந்தன்
இணையடியே சரண் புகுந்தேன்
இறையவனே அருள் புரிக!

ஆண்டவர் எமக்கிட்ட அரும்பணியை மேற்கொண்டு திருவிவிலியம் எனும் பரிசுத்த ஆகமத்தின் முதற் பிரிவான பழைய ஏற்பாடு எனும் நூலின் முக்கியமான சம்பவங்களை கடந்த 61 வாரங்களாக வாசர்களுக்குத் தந்தோம்.

# தேவ தூதரின் திருவாக்கு

விவிலியச் சங்கங்களின் இணையமும் வத்திக்கான் ஒன்றிப்புச் செயலகமும் இணைந்து பொது மொழிபெயர்ப்பாக 1995ம் ஆண்டு வெளியிட்ட 'திருவிவிலியம்' எனும் நூலினையே ஆதாரமாகக் கொண்டு இத்தெய்வீகப்பணியில் ஈடுபட்டோம். அவ்வப்போது கிறிஸ்தவ மதப் பெரியார்கள் சிலரிடம் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்து கொண்டோம். இருப்பினும் ஆங்காங்கே சில தவறுகளும் கருத்து முரண்பாடுகளும் ஏற்பட்டிருக்கலாம். ஏனெனில் நாம் அறிஞர் வரிசையில் இடம்



பெறத் தகுதியற்ற ஒரு சாமானியன். அவனருளால் அவன்தாள் வணங்கி, அவன் பெருமைகளை இயன்ற அளவு- எமது சிற்றறிவுக்கு எட்டிய அளவு எடுத்துரைத்தோம்.

இனி இறை திருக்குமாரனாம் இயேசு பெருமானின் சீரிய வாழ்க்கையினையும் அன்னார் மனக்குலத்துக்கு அளித்துச் சென்று நெறி முறைகளையும் தொகுத்து தரும் பணியினைத் தொடங்குகிறோம். என்றும் போல் எமது வாசகர்களின் நல்லாதரவும் ஆசியும் கிடைக்கும் என்பதில் எமக்கு முழு நம்பிக்கை. கிறிஸ்து பிறப்பதற்கு சில வருடங்களுக்கு முன்னர் எருசலேம்.

உரோம அரச நிர்வாகி களினால் ஆளப்பட்டு வந்தது. பின்னர் யூத இனத்தைச் சேர்ந்த ஏரோது என்பவரை அரச ராக நியமித்தனர். ஏரோது தனது நிர்வாகி களாக பல யூத அறிஞர்களை நியமித்தார். இவர்களுள் பிரதான ஆசாரியர்களும் மத போத கர்களும் இருந்தனர். யூத மக்களின் மத வழி பாட்டுக்காக அழகான-பிரமாண்டமான தேவா லயத்தையும் ஏரோது மன்னர் நிர்மாணித்தார்.

யூத மக்களின் மன்னராக ஏரோது இருந்த போதிலும் உரோமர்களின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது.

தேவாலயத்தில் பூசை, பிரார்த்தனைகளை நடத்துவதற்கு பல ஆசாரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு வரிசை முறைப்படி தேவ கைங்கரியங்களைப் புரிவதற்கான ஒழுங்கு முறைகள் வகுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஆலயக் கடமைகளை ஏற்றுப் பணி புரிய வேண்டும் என்ற வரிசை வகுக்கப்பட்டிருந்தது.

நல்லொழுக்கமும் ஆசார முறைகளில் வழுவாத உடன்பாடு கொண்டவருமான சகரியா என்னும் ஆசாமியரும் அவர் மனைவி எலிஸபேத்தும் எருசலேமின் புறநகர்ப்பகுதியில் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்குக் குழந்தை எதுவுமில்லை என்ற கவலை வாட்டியது. இருவருக்கும் வயதாகி முதுமை நிலையை எய்திய பின்னரும் குழந்தை இல்லையே என்ற பெருங் கவலை வாட்டியது.

ஆலயத்தில் ஊழியம் செய்வதற்கான முறை வந்ததும் சகரியா எருசலேம் நோக்கிப் புறப்பட்டார். அப்போது அவருடைய மனைவி எலிஸபேத்து அவரிடம், ஆண்டவரிடம் தங்களுக்காக ஒரு குழந்தை கேட்டு ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார். இத்தனைவயதாகிய பின்னரும் குழந்தைப் பேறு கிடைக்குமா? என்ற சந்தேகத்தில் மனைவியைப் பார்த்தார். அப்போது எலிஸபேத்து, "ஆண்டவர் எல்லாம் வல்லவர் என்பது தங்களுக்குத் தெரியாததொன்றல்லவே! அவரின் கருணையிருந்தால் எமக்குக் குழந்தை பிறப்பது என்பது நடக்க முடியாத காரியமல்ல. ஆகவே ஆண்டவரிடம் மீண்டும் பிரார்த்தியுங்கள்!" என்றார்.

இராஜகுமாரன்

### தேவதூதர் காபிரியேல்

அடுத்த நாள் ஆலயத்தில் தமது பணிகளை முடித்துவிட்டு பலமணிநேரம் ஆலயத்தின் உட்புறமுள்ள பீடத்தின் முன் மண்டியிட்டு அமர்ந்தவாறு மனமுருகி வேண்டினார் சகரியா. சிறிது நேரம் பிரார்த்தனையிலீடுபட்டிருந்தவரின் முன் கடவுளின் தூதரான காபிரியேல் தோன்றினார்.

"சகரியா! ஆண்டவர் உமது கோரிக்கையைக் கேட்டார். உமது மனைவி எலிஸபேத் நிச்சயமாக ஓர் ஆண் மகனை ஈன்றெடுப்பார். குழந்தைக்கு 'யோவான்' என்று பெயர் சூட்டுங்கள்!" என்று வாக்குக்கூறினார். மேலும் பிறக்கப் போகும் குழந்தை பலமும் வலிமையும் வல்லமையும் பெற்ற பேரறிவாளனாக விளங்குவான் என்றும் மக்களைச் சீரிய பாதையில் வழி நடத்துவான் என்றும் தேவ தூதன் கூறியருளினார்.

தேவதூதனே திருக்கோவிலில் சகரியா முன் தோன்றி அருளிய தேவவாக்கினையே சகரியாவால் நம்பமுடியவில்லை." என் மனைவியும் நானுமே மிகவும் வயதானவர்களாகி விட்டோம். அவ்வாறிருக்க எங்களுக்கு எவ்வாறு குழந்தை பிறக்கும்?" என்று தேவ தூதனிடமே சகரியா கேட்டுவிட்டார்.

தேவ தூதனான காபிரியேலுக்கு சற்றுக் கோபம் வந்துவிட்டது. "சகரியா! ஆண்டவர் எனக்கிட்ட கட்டளைப்படி அவருடைய கருத்தினையே நான் உம்மிடம் கூறினேன். தேவ வாக்கு எப்போதும் பொய்யாவதில்லை. ஆகவே ஆண்டவரால் அருளப்பட்ட வாக்கு நிறைவேறும் வரை உம்மால் எவ்வார்த்தையும் பேச முடியாத ஊமையாகப் போகக் கடவாய்!" என்று தூதர் காபிரியேல் கூறிவிட்டு மறைந்து விட்டார்.

ஆலயத்தின் உட்புறமிருந்து நெடுநேரத்தின் பின்னரே சகரியா வெளியே வந்தார். ஆலயத்தில் பணிபுரியும் ஏனைய ஆசாரியர்கள் சகரியாவைத் தேடிக் கொண்டு உள்ளே வந்தனர். சகரியா பேதலித்த நிலையில்-பேசமுடியாத நிலையில் நிற்பதைக் கண்டு அவருக்கு ஏதோ நடந்து விட்டது என்று அவர்கள் கருதினார்கள். அவர்கள் கேட்ட கேள்விகள் எதற்கும் சகரியாவால் பதில் சொல்ல முடியவில்லை. அவர்கள் சகரியாவை அவருடைய இல்லத்துக்கு அழைத்துச் சென்று அவர் மனைவியிடம் ஒப்படைத்தனர்.

### எலிஸபேத்து கருவுற்றார்

தனது கணவரின் நிலை கண்டு பதறிய எலிஸபேத்து, அவரை அணுகி, என்ன நடந்தது என்று வினவினார். சகரியாவால் எதனையும் கூறமுடியவில்லை. சைகை மூலமாகவும் எழுத்து மூலமாகவும்தான் கண்டவற்றை மனைவியிடம் விளக்கினார். எலிஸபேத்தின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தது. தேவதூதர் கூறியது எதுவும் பொய்யல்ல என்றும், தான் கருவுற்றிருப்பதாகவும் சொன்னார்.

அப்போதுதான் சகரியா ஆண்டவரின் அருளை எண்ணினார். இருவரும் தமது பிரார்த்தனை அறைக்குச் சென்று இறைவனைப் பிரார்த்தித்து நன்றி கூறினர்.

சகரியாவுக்கு தேவதூதன் தேவ வாக்கினைக்கூறி ஆறு மாதங்களின் பின்னர் அதே இறைதூதனான காபிரியேல், கலிலியோவிலுள்ள நாசரேத்து நகருக்கு வந்தார். அங்கு மரியாள் என்றொரு கன்னி இருந்தார். தாவீது மன்னர் வழித்தோன்றலான யோசேப்பு என்பவருக்கும் மரியாளுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது.

### மரியாளின் பரிதவிப்பு

மரியாளின் முன்தோன்றிய தேவதூதர் காபிரியேல்; "மரியாளே! ஆண்டவருடைய பரிபூரண கடாட்சம் பெற்ற பாக்கியசாலியாகி விட்டாய், உலகை இரட்சிக்க இறைவன் தன் மகனையே உமது மடியில் தவழவிட திருவுள்ளம் கொண்டுள்ளார். ஆண்டவரின் ஆவி உம் வயிற்றில் சங்கமமாகும் காலம் அண்மித்து விட்டது. ஆகவே உலக இரட்சகரை உம் வயிற்றில் சுமக்கும் பாக்கியம் பெற்றவராகி விட்ட நீர் மாநிடரில் முதல் நிலையினை எய்திவிட்டீர்!" என்று கூறினார்.

இச் செய்தியைக் கேட்டதும் மரியாள் துணுக்குற்றாள். கன்னி கழியாத நிலையிலுள்ள தான் எவ்வாறு கருத்தரிக்க முடியும்? அவ்வாறு கருவுற்றாலும் ஊருலகம் என்ன சொல்லும். கரம்பிடிக்கக்காத்திருக்கும் யோசேப்பு தன்னை எவ்வாறு தன் மனைவியாக ஏற்பார், என்றெல்லாம் எண்ணிக் கலங்கினார்.

மரியாளின் கலக்கத்தை உணர்ந்த தேவ தூதர் காபிரியேல், "மரியாளே! நீர் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. இறைவனுடைய திருக்குமாரனை உம் வயிற்றில் தாங்கும் பெருமை உம்மைச் சேரும். இதற்காக இறைவனாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவராகிய நீர் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. இறைவனின் பரிபூரண ஆசிபெற்ற உம்மை எத்தீங்கும் அணுகா வண்ணம் காத்தருளும் கைங்கரியத்தை அக்கர்த்தரே ஏற்றருளுவார். உமது வருங்காலக் கணவரும் உம்மை எக்காரணம் கொண்டும் ஒதுக்கி வைக்கமாட்டார்! பிறக்கப்போகும் குழந்தைக்கு இயேசு என்று பெயரிட்டு அழையுங்கள்."

இவ்வாறு தேவதூதன் கூறியும்கூட மரியாளின் மனம் சஞ்சலப்பட்டது. இதனை உணர்ந்த தூதர் மேலும் சொன்னார்.

"இறைவனால் ஆகாதது எதுவுமில்லை. உமது உறவினரான எலிஸபேத்தை நீர் அறிவீர். அவரும் அவர் கணவர் சகரியாவும் வயது முதிர்ந்தவர்கள். அவர்களுக்கு ஒரு குழந்தை இல்லையே என்ற கவலை நெடுங்காலமாகவே இருந்து வந்தது. இடைவிடாது அத்தம்பதியினர் இறைவனை வேண்டினர். அவர்கள் மீதும் கருணை கொண்ட கடவுள் எலிஸபேத்தின் வயிற்றில் கருஉருவாக வழி சமைத்தார். அவர்களுடைய மகிழ்ச்சியை நேரில் போய்ப் பார்த்து இறைவனின் கடாட்சத்தின் தன்மையை உணர்ந்து மனச்சஞ்சலத்தை நீக்கி உலகினை ஆட்சி செய்ய உம் வயிற்றில் உதிக்கப் போகும் இறை மகனை வரவேற்க உறுதி பூணுவீராக!"

இவ்வாறு கூறிவிட்டு தேவதூதர் காபிரியேல் மறைந்தார்.

தனது மாமிமுறையானவரும் மூதாட்டியுமான எலிஸபேத்தைக் கண்டு உண்மையை அறியும் பொருட்டு அங்கு செல்ல மரியாள் ஆயத்தமானார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 59 விடை ☛ நினிவே நகருக்கு**

**பரிசு பெறுவோர்:**

1. சி. நிரஞ்சன், 1032, பாலையூற்று, திருகோணமலை.
2. சி. ஷர்மினா, இல.20, சேர்ச் வீதி, பலாங்கொடை.
3. ரி. வதனா, இல.16/1, மூர்ஸ் வீதி, வெள்ளவத்தை.
4. செல்வி ஜெ. சுஜானா, 81/1, வாவிக்கரை வீதி-01, மட்டக்களப்பு.
5. கே. அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

**திருமறை 01** வினா (பு.ஆ):- **தேவதூதரின் பெயரைத் தருக.**

மே. 29க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை பு.ஆ.01 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# பாட்டுக்குப் பாட்டு

**இன்றைய பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியை கலைஞர் கருணாநிதி தொகுத்து வழங்குகிறார்.**

கலைஞர்: *உடன்பிறப்பே! உடன்பிறவாத செல்வி ஜெயலலிதா, சுப்பிரமணியம் சுவாமி போன்ற பிறப்புகளே! தாய்க்குலமே! என் 33 1/2 வருட நண்பர் வாஜ்பேய் அவர்களே! அனைவருக்கும் அண்ணா நாமத்தால் வணங்குகிறேன். இந்தப் போட்டியில் மூவர் பங்கேற்க இருக்கிறார்கள். கடமை மூன்றெழுத்து, நன்றி மூன்றெழுத்து, நாட்டை ஆங்கிலத்தில் 'கன்றி' என்று சொல்வார்கள் அந்த 'கன்றி' மூன்றெழுத்து, இதையெல்லாம் எனக்கு ஊட்டி வளர்த்த அண்ணா மூன்றெழுத்து. ஆகவேதான் போட்டியிலும் இருவராக அல்லாமல் மூவராக பங்குபற்ற வைத்திருக்கிறேன். பங்கு பற்ற வைத்திருக்கிறேன் என்பதால், பற்று வைத்திருக்கிறேன் என்று அர்த்தமல்ல. இவர்களைப் பற்றி கற்று வைத்திருக்கிறேன் என்று வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம்.* (கரகோசம்) *பெண்களுக்கே முதலிடம் என்பது கழக பண்பாடு என்பதால் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் தனக்குப் பிடித்த பாடல் ஒன்றை தட்டிவிடுமாறு எட்டி நின்று கேட்டுக்கொள்கிறேன்.*



ஜெயா: (கலைஞரை முறைத்துவிட்டு)

*நினைத்ததை முடிப்பவள்*
*நான் நான் நான்*
*என்னிடம் பிணக்கு*
*கொண்டவர் கவிழ்வர்.*

(மணி ஒலிக்கிறது)

கலை: *கவிழ்க்கும்போது மணி ஒலித்துவிட்டது. கவிழ்க்க தெரிந்தால் மட்டும் போதாது. கவிழ்த்ததை நிமிர்த்தவும் தெரிந்திருக்க வேண்டும். என் 33 1/2 வருட கால நண்பர் வாஜ்பேயி அவர்களை 'பு' என்ற எழுத்திலே, புரட்சிகரமாக பாட அழைக்கிறேன்.*

வாஜ்: (ஜெயாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு முகத்தை திருப்பிக் கொள்கிறார்)

*புத்தியுள்ள மனிதனெல்லாம்*
*வெற்றி காண்பதில்லை!*
*வெற்றி பெற்ற மனிதனெல்லாம்*
*புத்திசாலி இல்லை!* (மணி ஒலிக்கிறது)



கலை: *33 1/2 ஆண்டு கால நண்பர் தருணமறிந்து பாடி சபையோரை மகிழ்வித்திருக்கிறார். புத்திசாலிகளுக்கு நேர்மையில் பக்தியிருப்பதால், முட்டாள்கள் சிலர் சேர்ந்து அவர்களது முதுகில் கத்தியால் குத்திவிட்ட காரணத்தால், அது வீரமும் ஆகாது; தீரமும் ஆகாது என்பதை இந்த இடத்தில் கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளேன். அடுத்து 'இல்லை' என்ற சொல் வரத்தக்கதாக அம்மையார் தன் 'முல்லை' இதழ் திறந்து யார் காதுக்கும் தொல்லை இன்றி பாடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

ஜெயா: (சோகமாகப் பாடுகிறார்)

*நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்*
*தெய்வம் ஏதுமில்லை!*
*நடந்ததையே நினைத்திருந்தால்*
*அமைதி என்றுமில்லை!*

(மணி ஒலிக்கிறது)

கலை: *இந்தப் பாடல் யாருக்குப் பொருத்தம் என்பதை இந்தப் பாருக்கு நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை. அடுத்து 'நான்' என்ற சொல் வரத்தக்கதாக பாட்டொன்றை பாடுமாறு என் நெற்றிக்கு நேராக அடிக்கடி சவால் விடுகின்ற அன்பு நண்பர் சுவாமியை அழைக்கின்றேன்.*

சுவாமி: (பல்லைக் காட்டியபடி பாடுகிறார்)

*நான் ஆணையிட்டால்*
*திகதி குறித்துவிட்டால்*
*இங்கு ஆட்சிகள்*
*எதுவும் நடக்காது!*
*உயிர் உள்ளவரை-ஒரு*
*கொள்கையில்லை.....*

(மணி ஒலிக்கிறது)

கலை: *இப்போது 33 1/2 வருடகால நண்பர் வாஜ்பேய் இதற்கு பதில் பாட்டு பாடுவார்.*

வாஜ்: *உன்னைப் பார்த்து-இந்த*
*உலகம் சிரிக்கிறது!-உன்*
*செயலைப் பார்த்து-உன்*
*நிழலும் வெறுக்கிறது!*
*பாடும் பறவை,*
*பாயும் மிருகம்*
*இவைகளுக்கெல்லாம்*
*பகுத்தறிவில்லை- ஆனால்*
*அவைகளுக்குள்ளே*
*சூழ்ச்சிகள் இல்லை!*



ஜெயா: (திடீரென்று எழுந்து கோபமாக பாடுகிறார்)

*வெற்றிமீது வெற்றிவந்து*
*என்னைச் சேரும்.*
*அவை வாங்கித் தந்த*
*பெருமையெல்லாம்*
*சோனியாவைச் சேரும்!*

வாஜ்: *கையிலே நாலு எம். பியிருந்தால்*
*கழுதைகூட கடவுளடி*
*கைதூக்க ஆளிருந்தால்*
*கழுதைகூட கவிழ்க்குமடி!*
*பொய்யிலே நீந்தி வந்தால்*
*புளுகர் எல்லாம் தலைமையடி*
*ஊழலில் ஊறிவந்தால்*
*உண்மைகள் கசக்குமடி!*

கலை: *நிறுத்துங்கள் என்று கூறுவதற்கு என் மனம் மறுத்துரைத்தபோதும், பாட்டுக்கு பாட்டு, வேட்டுக்கு வேட்டாக மாறிவிடக் கூடாது என்ற காரணத்தாலும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கருதியும் இத்தோடு நிறுத்துமாறு பேராசிரியர் அன்பழகனுடன் கலந்துபேசிவிட்டு அறிவிக்கிறேன். அம்மையாருக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும் என்று நாட்டு மக்கள் நினைப்பார்கள் என்றாலும் கூட, நான் அப்படி நினைக்குமளவுக்கு கல்நெஞ்சம் கொண்டவனல்ல, மல்யுத்தம் செய்பவனுமல்ல, பொல் தூக்கி கொடுப்பவனுமல்ல என்பதை சொல் சொல் என்று சொல்லி இந்த நிகழ்ச்சியை மகிழ்ச்சியோடு முடித்து வைக்கிறேன். நன்றி வணக்கம்.*






காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்




அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


# கிண்ணம்

→ இந்த உலகக் கிண்ணம்மீது தான் கிரிக்கெட் ரசிகர்களின் கவனம் எல்லாம் குவிந்திருக்கிறது. இதனை தமது அபிமான அணி கைப்பற்றவேண்டும் என்று பல கோடி இரசிகர்களது இதயங்கள் படபடத்துக் கொண்டிருக்கின்றன.

இந்த ஏழாவது உலகக் கிண்ணத்தை இலண்டனில் உள்ள 'கரட்ஸ்' வடிவமைத்துள்ளது. இதன் மதிப்பு என்ன தெரியுமா? 27 ஆயிரம் ஸ்டெர்லிங் பவுண். நம் நாட்டு மதிப்பில் 30 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய்.

இந்த கிண்ணத்தை கைப்பற்ற பன்னிரண்டு அணிகள் களத்தில் குதித்துள்ளன.

யார் கைப்பற்றப் போகிறார்கள் என் பது ஜூன் 20ம் திகதி தெரிந்துவிடும்.



↓ இது உலகக் கிண்ணப் போட்டியின் சின்னமல்ல. போட்டியை நடத்தும் இங்கிலாந்து வெளியிட்டுள்ள சின்னம்.

கிரிக்கெட்டின் தாய்நாடு என்று அழைக்கப்படுவது இங்கிலாந்து. கிரிக்கெட்டை உலகுக்கு அறிமுகப்படுத்திய இங்கிலாந்தில் இதற்கு முன்னர் மூன்று உலகக் கிண்ணப் போட்டிகள் நடந்துள்ளன. மொத்தம் ஆறு உலகக் கிண்ணப் போட்டிகள் நடந்து விட்டன.ஆயினும் இதுவரை இங்கிலாந்து உலகக் கிண்ணத்தை கைப்பற்றவில்லை.

இம்முறை முதல் போட்டியில் முன்னாள் சாம்பியனான இலங்கை அணியை எட்டு விக்கெட்டுக்களால் இங்கிலாந்து வென்றுள்ளது. ↘




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


# இருவர்







← கடந்த உலகக் கிண்ணப் போட்டியில் பல சாதனைகளை குவித்தது இலங்கை அணி. விளையாடிய 7 போட்டிகளிலும் வெற்றி. ஒரு போட்டியில் அதிக ஓட்டக்குவிப்பு. 50ஓவர்களில் 398/5. இது கென்யாவுக்கு எதிராக பெறப்பட்டது. இறுதிப் போட்டியில் இரண்டாவதாக துடுப்பெடுத்தாடி வெற்றி பெற்ற அணியும் இதுதான். போட்டியை நடத்தும் நாடுகளில் ஒன்று, கிண்ணத்தை பெற்றதும் இதுதான் முதல் தடவை.

இலங்கை அணியில் சென்ற முறை சதம் போட்ட ஒரே வீரர் அரவிந்தா. உலகக் கிண்ண போட்டியில் இரண்டு தடவை சதம் போட்ட ஒரே ஒரு இலங்கை வீரரும் அவர்தான். 145. ஆட்டமிழக்காது 107.




# சின்னம்

இந்த ஆரம்பம் கிண்ணத்தை கைப்பற்றும் உத்வேகமாக மாறுமா? என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம். ஏற்கனவே இரண்டு முறை இறுதிப் போட்டிவரை தூள் கிளப்பி முன்னேறிவிட்டு கிண்ணத்தை கோட்டைவிட்ட வரலாறும் இங்கிலாந்துக்கு உண்டு.

உலகக் கிண்ணப் போட்டியில் அதிக ஓட்டங்களால் வெற்றி பெற்ற அணி என்ற பெருமை இங்கிலாந்துக்குத்தான். 1975ம் ஆண்டு இந்தியாவை 202 ஓட்டங்களால் வென்றது. அதேபோல உலகக்கிண்ணப் போட்டியில் அதிக குறைந்த ஓட்டங்களோடு எதிரணியை சுருட்டியதும் இங்கிலாந்துதான். கனடாவை 45 ஓட்டங்களோடு சுருட்டியது.



கிரிக்கெட் அணி வீரர்களுக்கு உற்சாகம் தரும் மொடல் அழகி. கிண்ணம் எடுக்க முன்பாக கைகளில் தவழும் வண்ண மயில்.

# சுகமான சுமை

↓ உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிகள் இங்கிலாந்தில் நடைபெறும் இவ்வேளையில், பிரபலமான லோட்ஸ் உள்ளரங்க மைதானத்தில் மற்றுமொரு சுவாரசியமான கிரிக்கெட் போட்டியும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்றுள்ளன.

உள்ளரங்குகளில் டேபிள் டென்னிஸ் விளையாட்டுக்கள் இடம்பெறுகின்றன.

இதேபோல் இங்கிலாந்தின் கிரிக்கெட்சபை 'டேபிள் கிரிக்கெட்' ஆட்டங்களை நடத்த ஆரம்பித்துள்ளது. அங்கவீனர்களுக்காக நெடிய மேசை ஒன்றையே கிரிக்கெட் மைதானமாக்கி, சாதாரண கிரிக்கெட் விளையாட்டுக்குத் தேவையான அத்தனை அம்சங்களையும் இவ் விளையாட்டில் புகுத்தியுள்ளனர்.

இங்கிலாந்திலுள்ள பல பள்ளிக்கூடங்களில் பயிலும் ஊனமுற்ற மாணவ மாணவிகளை இத்தகைய 'டேபிள் கிரிக்கெட்' ஆட்டங்களில் பங்குபற்ற ஊக்கம் கொடுத்து, உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் அதே காலத்திலேயே இப் போட்டிகளும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

இந்த ஆட்டத்தில் ஒவ்வொரு பக்கமும் ஆறு ஆட்டக்காரர்கள் தான் இருப்பார்கள். இப்போட்டிகள் 19 வய[illegible]துக்குட்பட்ட ஆண்களுக்[illegible]கும் பெண்களுக்கும் பொதுவானவை. இம்முறை இங்கிலாந்தின் பல பாகங்களிலும் இருந்து 35 அணிகள் பங்குபற்று[illegible]கின்றன.

மார்ச் மாதம் நடைபெற்ற டேபிள் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவ மாணவிகள், குழுக்களின் தலைவர்களுக்கு டென்னிஸ் அமின் எனப்படும் பரிசில்களை வாங்குவதைப் படங்களில் காணலாம். டேபிள் கிரிக்கெட் போட்டி நடை பெறுவதை அடுத்த படம் காட்டுகிறது. கிரிக்கெட்டிலும் பல ரகங்கள்.






# புதிய களம்



கிரிக்கெட் உலகக் கிண்ணத்தில் சாதனை படைத்த இலங்கை அணி வீரர்களது கைவொப்பம் போடப்பட்ட மட்டைக்கும் மகா மவுசு.

# கையெழுத்து

## 1வது பிறந்தநாள் வாழ்த்து

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த செல்வன்-சுகுணா தம்பதியினரின் அருமைப் புதல்வன் துவாரகன் தனது முதலாவது பிறந்த நாளை 11.05.1999 அன்று கனடா-ஸ்காபுரோவில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அப்பா, அம்மா, பூட்டியம்மா, அப்பப்பா, அப்பம்மா இலங்கையில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, கனடா பெரிய மாமா, சின்னமாமா, ஜேர்மன்மாமா, அன்புமாமா, சித்தி, குட்டிமாமா, கனடா பெரியப்பா, பெரியம்மா அண்ணாமார், இலங்கை பெரியமாமா, பெரியத்தை, மச்சிமார், சின்னமாமா, சின்னத்தை, மச்சிமார், மதுஷன் அத்தான், கனடா ஆசைமாமா, ஆசை அத்தை, மச்சி, குட்டிமாமா, குட்டி அத்தை, மற்றும் பேரன்மார், பேத்திமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், சிமிச்சித்தி மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் நீடூழி காலம் வாழ்கவென துவாரகனை வாழ்த்துகிறார்கள்.

தகவல்: திரு. திருமதி யோகநாதன், கொழும்பு.



செல்வன் துவாரகன் / 11.05 1999